விலை ரூபா: 20.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: இருபது — Valampurii

சங்கு 13 வள்ளுவர் ஆண்டு 2043 ஆனி 12 செவ்வாய்க்கிழமை (26.06.2012) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 190

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து


## யாழ்.மக்களில் ஓடுவது சிங்கள ரத்தம்தானாம்!

(யாழ்ப்பாணம்)

பெரும்பாலான யாழ்ப்பாண மக்களிடம் ஓடுவது சிங்களவர்களின் இரத்தம் தான் என்று இராணுவத்தின் யாழ். படைத் தலைமையக கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் ஹத்துருசிங்க தெரிவித்துள்ளார்.

கொழும்பு ஆங்கில ஊடகமொன்றுக்கு அளித்துள்ள செவ்வியொன்றிலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார். அவர் இது தொடர்பில் மேலும் தெரிவிக்கையில்,

யாழ். போதனா மருத்துவமனை இரத்த வங்கிக்கு அதிகளவில் பங்களிப்புச் செய்பவர்கள் படையினரே. ஒவ்வொரு மாதமும்



இராணுவம் இரத்ததான முகாம்களை ஏற்பாடு செய்கிறது. இதன்மூலம் மாதம் ஒன்றுக்கு 125 தொடக்கம் 150 லீற்றர் வரையான இரத்தம் படையினரால் வழங்கப்படுகிறது.

இப்போது பெரும்பாலான யாழ்ப்பாண மக்களிடம் ஓடுவது சிங்களவர்களின் இரத்தம் தான் என்றும் அவர் மேலும் கூறியுள்ளார்.(8,1)

## நில அபகரிப்பை எதிர்த்து இன்று திருமுறிகண்டியில் போராட்டம்

### தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

தமிழர் பகுதிகளில் இலங்கை அரசாங்கம் இராணுவத்தின் ஊடாக மேற்கொண்டு வரும் நில அபகரிப்புக்கு எதிர்ப்புத் தெரிவித்தும் மக்களை விரைவாக மீள்குடியேற்ற வலியுறுத்தியும் இன்று திருமுறிகண்டியில் கவனயீர்ப்பு போராட்டம் நடத்தப்படவுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஏற்பாட்டில் நடத்தப்படவுள்ள இந்த கவனயீர்ப்புப் போராட்டத்தில் தமிழ் மக்களைத் தவறாது கலந்து கொள்ளுமாறு அக் கட்சி வேண்டுகோள் விடுத்துள்ளது.

இது தொடர்பாக அக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் கருத்துத் தெரிவிக்கையில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஏற்பாட்டில் இன்று செவ்வாய்க்கிழமை காலை திருமுறிகண்டியில் நடைபெறும் போராட்டம் திட்டமிட்டபடி நடைபெறும்.

இந்த கவனயீர்ப்புப் போராட்டத்தில் தமிழ் பேசும் மக்கள் அனைவரும் அணிதிரண்டு வந்து ஆதரவினை வழங்க வேண்டும்.

இலங்கை அரசாங்கத்தினால் திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்டு வருகின்ற நில அபகரிப்பு, மீள்குடியேற்றம், அரசியல் கைதிகளின் விடுதலை மற்றும் (20ஆம் பக்கம் பார்க்க)

# முறையாக குடியமர்த்தக் கோரிய மக்களை வலுக்கட்டாயமாக கலைத்தது இராணுவம்

## திருமுறிகண்டியில் நேற்றிரவு அமளி

(கிளிநொச்சி), திருமுருகண்டியில் தமது சொந்த இடங்களில் மீள்குடியமர்விற்காக காத்திருந்த பொதுமக்களை இராணுவத்தினரும் பொலிஸாரும் இணைந்து வலுக்கட்டாயமாக வாகனங்களில் ஏற்றிச் சென்றுள்ளதாக தெரியவந்துள்ளது.

நேற்றிரவு 7 மணியளவிலேயே இவர்களை இராணுவத்தினர் வலுக்கட்டாயமாக வாகனங்களில் ஏற்றிச் சென்றுள்ளனர். திருமுறிகண்டியில் பொதுமக்களது நிலங்களை பறிக்கும் செயற்பாடுகளுக்கு எதிராக இன்றைய தினம் ஆர்ப்பாட்டம் ஒன்று நடைபெறவுள்ள நிலையிலேயே இச் செயற்பாட்டை அவர்கள் மேற்கொண்டுள்ளனர். (20ஆம் பக்கம் பார்க்க)

## பலாலி அபிவிருத்தி இந்தியாவுக்கு இல்லை

(கொழும்பு)

பலாலி விமான நிலையத்தின் அபிவிருத்தி மற்றும் விஸ்தரிப்பு பணிகளை இந்தியாவிடம் ஒப்படைப்பதில்லை என இலங்கை அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

வன்னியில் இடம்பெற்ற போர் முடிபுக்கு வந்த பின்னர் பலாலி விமான நிலையம் மற்றும் (20ஆம் பக்கம் பார்க்க)

## இசற் புள்ளிகளை இரத்து செய்ய உத்தரவு

கடந்த வருடம் நடைபெற்ற க.பொ.த. உயர்தரப் பரீட்சையின் இசட் புள்ளிகளை இரத்துச் செய்து மீளக்கணிப்பிடுமாறு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிற்கு உயர்நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது. (20ஆம் பக்கம் பார்க்க)

## வடக்கின் பாதுகாப்பு குறித்து மாறுபடும் புள்ளிவிபரங்கள்!

(கொழும்பு)

வடபகுதியின் பாதுகாப்பு நிலைமைகள் தொடர்பில் ஜெனிவாவில் ஆரம்பமாகியுள்ள ஐக்கிய நாடுகள் சபை மனிதவுரிமைகள் ஆணைக்குழுவின் 20வது அமர்வில் இலங்கை அரசாங்கம் சமர்ப்பித்துள்ள அறிக்கைக்கும், இலங்கை யின் யாழ். கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் மகிந்த ஹத்துருசிங்க வெளியிட்டுள்ள புள்ளிவிபரங்களுக்கும் இடையில் முரண்பாடு காணப்படுகின்றது.

இதனால், ஐ.நா மனிதவுரிமைகள் ஆணைக்குழுவின் 20வது அமர்வில் வடபகுதியின் பாதுகாப்பு நிலைமைகள் தொடர்பில் இலங்கை அரசாங்கம் சமர்ப்பித்த அறிக்கையின் உண்மைத் தன்மை குறித்து கேள்வி எழுந்துள்ளது.

இக் கூட்டத் தொடரில் ஜெனிவாவுக்கான இலங்கையின் பிரதித் தூதுவர் மனிசா குணசேகர இலங்கை விவகாரங்கள் தொடர்பில் சமர்ப்பித்த அறிக்கையில், இலங்கையில் இடம்பெற்ற போர் முடிவுக்கு வந்த பின்னர் யாழ். குடாநாட்டில் நிலை கொண்டுள்ள படைத்தரப்பினரின் எண்ணிக்கை (20ஆம் பக்கம் பார்க்க)

## புலம்பெயர் தமிழர்களால் புலம்பும் நிலையில் அரசு!

### ஐ.நா சபையில் அரச பிரதிநிதி

இலங்கைக்கு எதிரான புலம்பெயர் தமிழர்களின் செயற்பாடுகள், பயங்கரவாதத்தை ஊக்குவிப்பதாக உள்ளதென,ஐ.நா மனிதவுரிமைச் சபையில் இலங்கை அரசை புலம்ப வைத்துள்ளது.

நடைபெற்றுவரும் ஐ.நா. மனிதவுரிமைச் சபையின் 20வது கூட்டத் தெடாரில், இலங்கைத் தீவின் போருக்கு முந்திய-பிந்திய காலங்களில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் தொடர்பில், ஐ.நா மனித உரிமைச் சபை சிறப்பு வல்லுனர்கள் குழுவினரால் கேட்கப்பட்ட பல கேள்விகளுக்கு, இலங்கை உரிய பதிலினை வழங்கவில்லை என குற்றஞ் சாட்டப்பட்டிருந்தது.

இந்நிலையில், ஐ.நா.சிறப்பு வல்லுனர் குழுவின் அறிக்கை தொடர்பிலான விவாதத்தின்போது, தன்னுடைய மனித உரிமை மீறல்களை, இன அழிப்பு (20ஆம் பக்கம் பார்க்க)

## மகிந்தவை தலைவராக்கியது நான் செய்த பெரிய தவறு

### மனம் திறக்கிறார் சந்திரிகா



ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை எதிர்க் கட்சித் தலைவராக நிமித்ததே தான் செய்த மிகப் பெரிய தவறு என முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

அண்மையில் நடைபெற்ற திருமண வைபவம் ஒன்றில் கலந்து கொண்டு பேசியபோதே அவர் இதனைக் கூறியுள்ளார்.

மகிந்த ராஜபக்ஷவுக்கு எதிர்க் கட்சித் தலைவர் பதவியை வழங்கியதே நான் செய்த மிகப் பெரிய தவறு தான். ஆனால் அன்று செய்ய வேண்டிய சிறந்த விடயத்தையே நான் செய்தேன்

அப்போதைய அரசாங்கம் எம்மவர்களுக்கு இடையூறுகளைச் செய்தது. ஆயிரத்து 600 (20ஆம் பக்கம் பார்க்க)

## டிப்பர் சில்லினுள் அகப்பட்ட சிறுமி உடல் நசுங்கிப் பலி!

### பளையில் நேற்று சோகம்

(யாழ்ப்பாணம்)

டிப்பர் வாகன சில்லினில் அகப்பட்டு இரண்டு வயதுச் சிறுமி ஒருவர் பரிதாபமாக உயிரிழந்துள்ளார். இந்தச் சம்பவம் நேற்றுக் காலை 7 மணியளவில் பளை கரந்தாய் பகுதியில் இடம்பெற் றுள்ளது.

இந்தச் சம்பவத்தில் அப்பகுதியைச் சேர்ந்த திருச்செல்வம் கோபிகா (வயது-2) என்ற சிறுமியே உயிரிந்தவராவார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக தெரியவருவதாவது,

உயிரிழந்த சிறுமியின் தந்தையான திருச்செல்வம் என்பவர் டிப்பர் வாகனச் சாரதியாக உள்ளார் எனவும் இவருக்கு காலை உணவினை பிறிதொரு டிப்பர் வாகனச் சாரதி ஊடாக சிறுமியின் தாயார் கொடுத்துள்ளார்.

இதன்போது குறித்த சிறுமி வீதியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த டிப்பர் வாகனத்தின் சில்லின் முன் நின்றுள்ளாள் எனவும், இதனை அறியாத குறித்த டிப்பர் வாகனச் சாரதி வாகனத்தை செலுத்தியுள்ளார்.

இதனால் (20ஆம் பக்கம் பார்க்க)

# கல்விசாரா ஊழியர்களின் பிரச்சினைகள் தொடர்பாக பேச்சுவார்த்தை அவசியம்-பசில்

(கொழும்பு)

பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்களின் பகிஷ்கரிப்பு தொடர்பாக உயர் கல்வி அமைச்சு, திறைசேரி மற்றும் சம்பந்தப்பட்ட அமைப்புகளுக்கிடையிலான கலந்துரையாடல்களுக்கு அவசர தேவையுள்ளது என பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஷில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு தொடர்ச்சியான பேச்சுவார்த்தை அவசியம் எனவும் கல்விசாரா ஊழியர்களுடனான சந்திப்பில் அமைச்சர் பஷில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இவ்விடயத்தில் அமைச்சர் பஷில் ராஜபக்ஷ தலையிட வேண்டும் என பல்கலைக்கழக தொழிற்சங்க கூட்டுக்குழு கோரிக்கை விடுத்தது.

மூன்றாவது வாரமாகத் தொடரும் கல்விசாரா ஊழியர்களின் பகிஷ்கரிப்பினால் பல்கலைக்கழக செயற்பாடுகள் முடங்கியுள்ளன. தமது சம்பளப்பிரச்சினைகள் தீர்க்கப்படாவிட்டால் பகிஷ்கரிப்பை தொடரப் போவதாக அவர்கள் அறிவித்துள்ளனர்.

கடந்த பெப்ரவரி மாதம் அமுல்படுத்துதற்கு உயர் கல்வி அமைச்சு இணங்கிய யோசனைகள் அமுல் படுத்தப்பட்டால் பகிஷ்கரிப்பை கைவிடத்தயார் என மேற்படி தொழிற்சங்கக் கூட்டுக்குழுவின் பேச்சாளர் விஜய திலக ஜெயசிங்க கூறினார். (8,11)

# விடுதலையான போராளிகளுக்கு அடையாள அட்டை வழங்க வேண்டாம்!

## ஐ.ஓ.எம். நிறுவனத்துக்கு அரசு உத்தரவு

(கொழும்பு)

வன்னியில் இடம்பெற்ற இறுதிக்கட்டப் போரின் போது படைத்தரப்பினரிடம் சரணடைந்த பின்னர் புனர்வாழ்வு வழங்கப்பட்டு விடுதலை செய்யப்பட்ட விடுதலைப்புலிகளின் போராளிகளுக்கு ஐ.ஓ.எம். எனும் சர்வதேச தொண்டு நிறுவனம் வழங்கி வந்த அடையாள அட்டைகளின் விநியோகத்தை நிறுத்துமாறு அரசாங்கம் உத்தரவிட்டுள்ளது.

புனர்வாழ்வு வழங்கப்பட்டு விடுதலை செய்யப்பட்ட போராளிகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் வகையில் இந்த அடையாள அட்டைகள் ஐ.ஓ.எம். நிறுவனத்தால் வழங்கப்பட்டு வந்தது. இந்நிலையில் அரசாங்கத்தின் இந்த உத்தரவை அடுத்து இந்த அடையாள அட்டைகள் வழங்கும் பணிகளை ஐ.ஓ.எம். நிறுவனம் நிறுத்தியுள்ளது.

அதேவேளை போராளிகளிடமிருந்து இந்த அடையாள அட்டைகளை பறிமுதல் செய்து வரும் இலங்கைப் படைத்தரப்பினர் ஐ.ஓ.எம். நிறுவனத்தால் போராளிகளுக்கு வழங்கப் பட்ட அடையாள அட்டைகளை பெற்றுத் தருமாறு கிராமசேவையாளர்களையும் பணித்துள்ளது.

புனர்வாழ்வு பெற்ற போராளிகள் சமூகத்தில் பாகுபாடாக நடத்தப்படுவதைத் தடுக்கவே இந்நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாக அரச தரப்பின் அதிகாரி பிரிகேடியர் ருவான் வணிக சூரிய கூறியுள்ளார்.

அதேவேளை படைத்தரப்பினரின் இந்த நடவடிக்கை குறித்து கருத்துத் தெரிவித்த ஐ.ஓ.எம். நிறுவனத்தின் இலங்கைக்கான தலைவர் றிச்சர்ட் டன்சிகர் இந்த அடையாள அட்டைகள் தமக்கு மேலதிக பாதுகாப்பை வழங்குவதாக தான் சந்தித்த பெரும்பாலான போராளிகள் குறிப்பிட்டதாகத் தெரிவித்துள்ளார்.

இதனை ஒத்த வகையிலேயே ஐ.ஓ.எம். நிறுவனத்தால் வழங்கப்பட்ட அடையாள அட்டை தனக்கு மிகவும் பயனுள்ளதாக இருப்பதாக புனர்வாழ்வு பெற்று விடுதலை செய்யப்பட்ட போராளி ஒருவர் தெரிவித்துள்ளார். (8,11)

# சட்டவிரோத மின்பாவனையாளர்களை சட்டப்படி சந்திக்கிறது விசேட குழு

(யாழ்ப்பாணம்)

யாழில் சட்டவிரோத மின்பாவனையாளர்களை கைது செய்வதற்காக கொழும்பிலிருந்து இலங்கை மின்சார சபையின் 11 பேர் கொண்ட விசேட விசாரணைக் குழு ஒன்று வந்திறங்கியுள்ளது.

இவ் விசாரணைக்குழு 3 தினங்களிற்கு முன் வந்துள்ளதோடு யாழில் பல்வேறு இடங்களிலும் 50 சட்டவிரோத மின்பாவனையாளர்களினை கைது செய்துள்ளது.

அவ் பிரதேச பொலிஸாருடன் வீடுகளில் நுழையும் இவர்கள் தமது அசாத்திய திறமைகளினால் அங்கு காணப்படும் சிறுதவறுகளினை கூட கண்டறிந்த வீட்டாரினை உடனடியாக கைது செய்து நீதிமன்றங்களிலும் ஆஜர்படுத்துகின்றனர்.

நேற்றும் யாழ்.நகர் மற்றும் அதனை அண்டிய பகுதிகளிலும் 12 சட்ட விரோத மின்பாவனையாளர்களினை யாழ்.பொலிஸாரின் உதவியுடன் அக் குழுவினர் கைது செய்துள்ளனர். இதில் 12 சட்டவிரோத மின்பாவனையாளர்கள் இன்று யாழ். நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட உள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இக்குழுவின் விசேட நடவடிக்கை யாழில் மட்டுமல்லாது யாழ்.மாவட்டத்திலுள்ள அனைத்து பிரதேசங்களிலும் நடைபெறுகின்றது என்பது குறிப்பிடத்தக்கது. (8-4)

# ‘ஈழ வீரனின் எழுச்சியும் வீழ்ச்சியும்’

## பிரபாகரனின் நூல் சென்னையில் வெளியீடு

(சென்னை)

தமிழீழ விடுதலைப் புலிகளின் தேசியத் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் தொடர்பாக எழுதப்பட்ட நூல் ஒன்றை எழுத்தாளர் எஸ்.முத்தையா சென்னையில் நேற்று வெளியிட்டுவைத்துள்ளார்.

பிரபாகரன் சகா ஈழவீரனின் எழுச்சியும் வீழ்ச்சியும் என்ற நாமத்துடன் சிரேஷ்ட ஊடகவியலாளர் எஸ்.முராரி எழுதியுள்ள குறித்த நூலில் தலைவர் பிரபாகரன் விடுதலைப் புலிகள் இயக்கத்தை எவ்வாறு தோற்றுவித்தார்.

இயக்கம் எப்படி ஆயுத போராட்டத்தில் இறங்கியது போன்ற பல விடயங்கள் அதில் விபரிக்கப்பட்டுள்ளன.

அதேவேளை அந்த நிகழ்வில் உரையாற்றிய எழுத்தாளர் எஸ்.முத்தையா, இலங்கை தமிழர் பகுதிகளில் பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்தினால் இலங்கையில் நிலை மாற்றமடையும் எனத் தெரிவித்தார்.

தான் ஊடகவியலாளராக இலங்கைக்கு விஜயம் செய்திருந்ததன் பயனாகவே குறித்தும் நூல் இயற்றப்பட்டதாக நூலாசிரியர் சிரேஷ்ட ஊடகவியலாளர் எஸ்.முராரி குறிப்பிட்டுள்ளார். (8-11)

# ஒருநாட்டுக்குள் இரு நீதி காட்டியதால்தான் ஆயுதப் போராட்டம் அரங்கேற்றம் பெற்றது

## ஜனநாயக மக்கள் முன்னணி சுட்டிக்காட்டு

ஒரேநாட்டுக்குள், ஒரேநாளில் கொழும்புக்கு ஒரு நீதி, யாழ்ப்பாணத்தவர்க்கு ஒரு நீதி என நீதியிலும் மகிந்த அரசு இரட்டை முகத்தைக் காட்டுகின்றது. தமிழரின் பூர்வீக நிலங்களை அரசாங்கமும், படைத்தரப்பினரும் ஆக்கிரமிப்பதற்கு எதிராக தமிழ் மக்களால் நடத்தப்பட்ட அஹிம்சைப் போராட்டத்தை பொலிஸார் நீதிமன்றத் தடை உத்தரவைப் பெற்று கலைத்தனர். ஆனால், கொழும்பு கோட்டையில் ஜே.வி.பி. நடத்திய ஆர்ப்பாட்டத்திற்கு அரசாங்கம் பூரண ஒத்துழைப்பை வழங்கியது. அரசாங்கத்தின் இந்த பாரபட்ச நடவடிக்கையே அன்று தமிழ் இளைஞர்கள் ஆயுதமேந்திப் போராட வழிவகுத்தது.

இவ்வாறு ஜனநாயக மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளரும், மேல்மாகாண சபை உறுப்பினருமான கலாநிதி குமரகுருபரன் நேற்று தெரிவித்துள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

கடந்த திங்கள் மற்றும் செவ்வாய்க்கிழமைகளில் யாழிலும், தெல்லிப்பழையிலும் தமிழ் மக்கள் தம்து சொந்த வீடுகளில் தங்களை வாழவிடுங்கள் என்று கோரி ஆர்ப்பாட்டம் நடத்தினர். அங்கு தமிழ் மக்களை அடக்கி ஒடுக்கி அடிமையாக்கும் வகையில் பொலிஸார் நடந்து கொண்டதை அவதானிக்க முடிகின்றது. அத்துடன் இந்தப் போராட்டத்தில் கலந்து கொண்டுவிட்டு வீடு திரும்பிக் கொண்டிருந்த மக்கள் மீதும், அவர்கள் பயணித்த பேருந்து மீதும் இராணுவத்தின் புலனாய்வுப் பிரிவினர் கழிவு ஒயிலை ஊற்றி தங்கள் காடைத்தனத்தை வெளிப்படுத்தியுள்ளனர்.

ஆனால், கொழும்பு கோட்டையில் ஜே.வி.பி. நடத்திய ஆர்ப்பாட்டத்திற்கு அரசாங்கம் பூரண ஒத்துழைப்பை வழங்கியது. இதிலிருந்து இந்த ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கத்தின் பாரபட்சம் வெளிப்படுகின்றது.

தங்களுக்கு சம உரிமை வேண்டும் என்பதற்காகத் தான் தமிழினம் இதுவரை போராடி வருகின்றது. கொழும்புக்கு ஒரு நீதி, யாழ்ப்பாணத்திற்கு ஒரு நீதி, தமிழ் மக்களுக்கு ஒரு நீதி, சிங்கள மக்களுக்கு ஒரு நீதி இதுதான் இலங்கை அரசாங்கத்தின் ஜனநாயகம்.

அடிப்படை வாழ்வாதாரத்திற்கு அஹிம்சைப் போராட்டம் நடத்துவது மக்களின் அடிப்படை உரிமை. இதனை பொலிஸார் தடுத்து நிறுத்துவது என்றால், அது அரசாங்கத்தினுடைய செயலாகவே கருத்திற்கொள்ளப்பட வேண்டும்.

ஏனென்றால், இது போன்ற காரணங் களுக்காகத் தான் தமிழர்கள் கடந்த முப்பது வருடங்களாக ஆயுதமேந்தி போராட நேரிட்டது என்பதை இன்றும் கூட அரசாங்கம்புரிந்து கொள்ள வில்லை.

ஜனநாயக மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளரும் மேல்மாகாண சபை உறுப்பினருமான கலாநிதி குமரகுருபரன் தெரிவித்துள்ளார். (8-11)




# சுழலும் வேகத்தை கட்டுப்படுத்த சுற்றிப் பறந்தது 20 இலட்சம்

(யாழ்ப்பாணம்)

மின்மானி சுழலும் வேகத்தினை கட்டுப்படுத்தி மின்சார செலவினை கட்டுப்படுத்த முயன்ற 14 பேர் மின்சார சபைக்கு நஷ்டஈடாக 4 இலட்சத்து 18 ஆயிரத்து 169 ரூபாயும், அபராதமாக ஒரு இலட்சத்து 40 ஆயிரம் ரூபாயும் செலுத்தியுள்ளனர்.

குறித்த 14 பேரினையும் பொலிஸாரும் மின்சார சபையினரும் இணைந்தே கைது செய்து யாழ். நீதிமன்றில் ஆஜர்படுத்தியிருந் தனர்.

மேற்படி 14 பேரும் கோப்பாய், அரியாலை, கொழும்புத்துறை, உரும்பிராய், பாசையூர், யாழ்நகர், ராசாவின் தோட்டம் போன்ற இடங்களினை சேர்ந்தவர்களாவர். யாழ்.நீதிமன்ற நீதவான் மா.கணேசராஜா முன்னிலையில் கைது செய்யப்பட்ட 14 பேரும் நேற்று ஆஜர் படுத்தப்பட்டனர்.

வழக்கினை விசாரணை செய்த நீதவான் மின்சார சபைக்கு நஷ்டத்தினை ஏற்படுத்தியமைக்காக இலங்கை மின்சாரசபைக்கு 4 இலட்சத்து 18 ஆயிரத்து 169 ரூபாய் நஷ்டஈடாக செலுத்தவேண்டுமெனவும் மின்மானியில் மாற்றத்தினை ஏற்படுத்திய குற்றத்திற்காக 1 இலட்சத்து 40 ஆயிரம் ரூபாய் அபராதமாக செலுத்த வேண்டும் என வும் உத்தரவிட்டார். (8-11)

# ஆனி உத்தர திருவிழா இன்று

(சிவநகர்)

உருத்திரபுரம், சக்திபுரம், (எள்ளுக்காடு) அருள்மிகு ஸ்ரீ முத்துமாரி அம்பாள் ஆலயத்தின் ஆனி உத் தரத்திருவிழா இன்று செவ்வாய்க் கிழமை நடைபெற வுள்ளது.

அன்றைய தினம் இரவு மங்கள வாத்தியக் கச்சேரியும் விசேட சொற் பொழிவும் நடைபெறும் என ஆலய உபயகாரர்கள் அறிவித்துள்ளனர். (8-9,254)


## அதிஷ்டலாப சீட்டிழுப்பு முடிவுகள்

புங்குடுதீவு பிட்டியம்பதி ஸ்ரீகாளிகா பரமேஸ்வரி அம்பாள் ஆலய சிவலப்பிட்டி சனசமூக நிலைய அன்னதான சபையின் அன்னதான மண்டப கட்டிட நிதிக்காக நடத்தப்பட்ட அதிஷ்டலாப சீட்டிழுப்பு முடிவுகள்

| | | |
|---|---|---|
| முதலாம் பரிசு | :- | 3000 |
| இரண்டாம் பரிசு | :- | 1291 |
| 3ஆம் பரிசு | :- | 2118 |

ஆறுதல் பரிசுகள்

3784, 1842, 2168, 4766, 2987
3471, 34, 4518, 5332, 5320

புங்குடுதீவு

சி.ச.ச.நிலைய அன்னதான சபை

(C-339)

## இன்று ஒரு தகவல்

# செல்வம்

ஒரு பெரிய அரசன். இந்த உலகம் பூராகவும் ஆண்டு கொண்டிருந்தான். அவனது ஆட்சி மிகவும் பலம் வாய்ந்தது. நீண்ட காலம் ஆட்சி நிலவியது.

திடீரென்று அவனுக்கு சில எதிரிகள் முளைத்தார்கள். அவர்கள் எல்லோரும் ஒன்று திரண்டு இவனைத் தோற்கடித்தார்கள். தோல்வி அடைந்ததும் இவனுக்குப் பயம் வந்துவிட்டது. எதிரிகள் நம்மை கொன்றுவிடுவார்களோ என்ற ஏக்கத்தில் பயந்து போய் யாருக்கும் தெரியாமல் ஒரு குகைக்குள்ளே போய் பதுங்கிக் கொண்டான்.

முதல்நாள் அரண்மனையிலே அதிகாரம் செய்து கொண்டிருந்தவன் மறுநாள் குகையிலே பயந்து போய் பதுங்கிக் கிடக்கிறான்.

இரவுவேளையானது பசி அவனை வாட்டியது. பிச்சைப் பாத்திரம் ஏந்த வேண்டிய தேவை ஏற்பட்டது. பிச்சை எடுக்கவும் இப்போது பாத்திரம் தேவையே அங்கேயும் இங்கேயும் பார்க்கிறான்.

ஒரு மூலையிலே யாரோ விட்டுச் சென்ற உடைந்த ஓடு கிடந்தது. அதை எடுத்துக் கொண்டு தனது பிச்சை பயணத்தை ஆரம்பித்தான். இருட்டில் வழி தெரியவில்லை. ஏதோவொரு யூகத்தில் காலை மெதுவாக எடுத்து வைத்து நடந்து போய்க் கொண்டிருந்தான்.

வழியிலே ஒரு கறுப்பு நாய் குறுக்காகப் படுத்திருந்து. இருட்டிலே அது இவன் கண்ணுக்கு தெரியவில்லை. தவறிப்போய் காலை வைத்து விட்டான். நாய் சாதுவான மிருகமா? சும்மாவா இருக்கும்? "வள்" என்று இவன் மீது பாய்ந்து கடித்துவிட்டது.

அரண்மனையிலே " வீரக்கழல் அணிந்த காலை உடைய் மன்னா!" என்று புகழ்வார்களே புலவர்கள். ஆனால், அது இன்றைக்கு நாய் கடித்த காலாக ஆகிவிட்டதே! என்று நினைக்கிறான்.

அது மட்டுமா...?

முன்பெல்லாம் அரண்மனையில் பொற் கிண்ணங்களிலேதான் சாப்பிடுவான். ஆனால், இப்போது காலம் மாறிவிட்டது. உடைந்து போன ஓட்டைக் கையிலே வைத்துக் கொண்டு நிற்கிறான்.

முன்பெல்லாம் அதிகளவானவர்கள் அரண்மனைக்கு வந்து இவனது காலடியிலே காணிக்கை கொட்டுவார்கள். அந்த நேரத்தில் இவன் அம் மக்களை ஏறெடுத்துக் கூடப் பார்க்க மாட்டான். மிகவும் கர்வமாக அமர்ந்திருப்பான்.

அதே மனிதன் இன்று எல்லோர் கண்ணிலும் தென்படுகிற மாதிரி பிச்சையோட்டைக் கையிலே ஏந்தியவாறு பிச்சை எடுத்துக் கொண்டிருக்கிறான்.

அப்போதெல்லாம் காணிக்கைகளைத் தன் கையாலே வாங்குவது கௌரவக் குறைவு என்று நினைத்து தன்னுடைய சேவகர்களை விட்டுத்தான் அதை வாங்கிக் கொள்வான்.

இப்போது அவனே தனது கையினாலே பிச்சை வாங்குகிறான்.

அந்த மனிதன் முதல்நாள் அரசன்... மறுநாள் பிச்சைக்காரன்... எவ்வளவு வித்தியாசம்.

செல்வம்தான் இவ்வளவு வித்தியாசத்திற்கும் அடிப்படைக் காரணம். அப்படிப்பட்ட செல்வம் எமது வாழ்க்கைக்கு கட்டாயம் தேவைதான்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் பல்வேறு கட்டடங்கள் திறந்து வைப்பு

(முல்லைத்தீவு)

ஜனாதிபதியின் மஹிந்த சிந்தனைக்கு அமைய பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் நிதியுதவியுடன் வடக்கின் வசந்தம் துரித மீள்ச்சித் திட்டத்தின் கீழ் முல்லைத்தீவு மாவட்டத்தில் யுத்தத்தால் சேதமடைந்த மக்களுக்கான பொது சேவை மண்டபங்கள் புனரமைக்கப்பட்டும் புதிதாக நிர்மாணிக்கப்பட்டும் உள்ளது.

இவ்வாறு நிர்மாணிக்கப்பட்ட, புனரமைக்கப்பட்ட கட்டடங்கள் கடந்த சனிக்கிழமை வணிக கைத்தொழில் அமைச்சர் றிசாட் பதியுதீன், அம்பாந்தோட்டை நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ ஆகியோரின் தலைமையில் திறந்து வைக்கப்பட்டு மக்கள் பாவனைக்காக கையளிக்கப்பட்டுள்ளது.

இதில் முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலை வளாகத்தில் நோயாளர் சத்திர சிகிச்சை விடுதி, விசேட சத்திர சிகிச்சை வைத்தியர் விடுதி, மருத்துவர் விடுதி என்பன 130 மில்லியன் ரூபா செலவில் புனரமைக்கப்படுவதற்கான அடிக்கல் நாட்டப்பட்டது.

அத்துடன் முல்லைத்தீவு தனியார் பேருந்து நிலைய அடிக்கல் நாட்டப்பட்டது. முல்லைத்தீவு நகரத்தில் கணனிப் பயிற்சிக் கூடம் திறந்து வைக்கப்பட்டது. அத்துடன் முல்லைத்தீவு மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை 39 மில்லியன் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்டு திறந்து வைக்கப்பட்டதுடன் சிக்கன கடனுதவி கூட்டுறவு சங்கங்களின் சமாசம் 10 இலட்சத்து 58 ஆயிரம் ரூபா செலவில் புனரமைக்கப்பட்டும் திறந்து வைக்கப்பட்டது.

தச்சடம்பன் பொதுநோக்கு மண்டபம் 18 இலட்சம் ரூபா செலவில் புனரமைக்கப்பட்டு திறந்து வைக்கப்பட்டது.

ஒலுமடு பொதுநோக்கு மண்டபம் புனரமைக்கப்பட்டு திறந்து வைக்கப்பட்டது. கற்சிலைமடு அ.த.க.பாடசாலையில் ஆண் ஆசிரியர் விடுதி 50 இலட்சம் ரூபா செலவில் புதிதாக நிர்மாணிக்கப்பட்டு திறந்து வைக்கப்பட்டது.

அத்துடன் அப்பாடசாலையில் ஒரு இலட்சத்து 25 ஆயிரம் ரூபா செலவில் சமையற்கூடம் நிர்மாணிக்கப்பட்டு திறந்து வைக்கப்பட்டது.

கருவேலன்கண்டல் பொதுநோக்கு மண்டபம் 6 இலட்சத்து 81 ஆயிரம் ரூபா செலவில் புனரமைக்கப்பட்டு திறந்து வைக்கப்பட்டது.

கூழாமுறிப்பு பொதுநோக்கு மண்டபம் 18 இலட்சத்து 62 ஆயிரம் ரூபா செலவில் புனரமைக்கப்பட்டு திறந்து வைக்கப்பட்டது. நீராவிப்பிட்டி மேற்கு உள்வீதி 2 இலட்சத்து 29 ஆயிரம் ரூபா செலவில் சீமெந்து வீதியாக அமைக்கப்பட்டு திறந்து வைக்கப்பட்டது.

அத்துடன் நீராவிப்பிட்டி கிழக்கு முன்பள்ளி 21 இலட்சத்து 41 ஆயிரம் ரூபா செலவில் புதிதாக நிர்மாணிக்கப்பட்டு திறந்து வைக்கப்பட்டது.

வண்ணான் குளம் பொதுநோக்கு மண்டபம் 20 இலட்சத்து 54 ஆயிரம் ரூபா செலவில் புனரமைக்கப்பட்டுதிறந்து வைக்கப்பட்டது. செல்வபுரம் முன்பள்ளி கட்டடம் 21 இலட்சத்து 41 ஆயிரம் ரூபா செலவில் புதிதாக நிர்மாணிக்கப்பட்டு திறந்து வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் தனியார் போக்குவரத்து அமைச்சர், வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி, முல்லை. மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன், ஜனாதிபதியின் முல்லைத்தீவு இணைப்பாளர் ச.கனகரத்தினம், வடமாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் இ.ரவீந்திரன் ஆகியோர் உட்பட பல அரச அதிகாரிகள் கலந்து கொண்டனர். (அ-3-267)

## சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|
| கத்தரிக்காய் | 140 | 70 |
| உருளைக்கிழங்கு | 90-110 | 100 |
| பச்சைமிளகாய் | 200 | 270 |
| தக்காளி | 160 | 140 |
| மரவள்ளிக்கிழங்கு | 30 | 40 |
| கோவா | 100 | 80 |
| கரட் | 140 | 150 |
| பூசணி | 60 | 60 |
| புடோல் | 70 | 60 |
| வாழைக்காய் | 50 | 60 |
| சின்ன வெங்காயம் | 90-100 | 120 |
| பெரிய வெங்காயம் | 110 | 100 |
| பாகற்காய் | 140 | 90 |
| வெண்டிக்காய் | 90 | 100 |
| கருணைக் கிழங்கு | 100 | 100 |
| பயற்றங்காய் | 180 | 90 |
| லீக்ஸ் | 160 | 160 |
| பீற்றூட் | 60 | 90 |
| கறிமிளகாய் | 160 | 200 |
| முருங்கைக்காய் | 200 | 160 |
| போஞ்சி | 170 | 200 |
| கத்தரிதம்புள்ள | 100 | -- |
| கீரை - 1 பிடி | 25 | 20 |
| தேசிக்காய் | 110 | 90 |
| தேங்காய் (ஒன்று) | 20 | 16-20 |

## இராசி பலன்

26.06.2012
(ஆனி 12, செவ்வாய்க்கிழமை)
சூரிய உதயம் காலை 5.55 மணிக்கு
சப்தமி முன்னிரவு 6.56 மணிவரை
உத்தரம் பின்னிரவு 3.20 மணிவரை
இராகுகாலம் 2.55-4.25 மணிவரை
சுபநேரம் 10.25-11.55 மணிவரை
ஆனி உத்திர தரிசனம்,
உதயம் நடேச சரபிசேகம்.

**மேடம்** வழிபாட்டால் ஆனந்தம் காண வேண்டிய நாள், தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள், இலாப நோக்கத்துடன் பழகியவர்களை இனங்கண்டு கொள்வீர்கள்.

**இடபம்** கனவுகள் நனவாக பரம்பொருளை வழிபட வேண்டிய நாள், பிள்ளைகள் வழியில் நல்ல செய்திகள் வந்து சேரும், புண்ணிய கருமங்களில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**மிதுனம்** வளர்ச்சி அதிகரிக்க முழுமுதற் கடவுளை வழிபட வேண்டிய நாள், பொருளதார நிலையில் முன்னேற்றம் ஏற்படும், யோசிக்காமல் செய்த காரியங்களில் கூட வெற்றி கிடைக்கலாம்.

**கடகம்** இனிய சம்பவங்கள் ஏற்படும் நாள், உடன் பிறப்புக்கள் உங்கள் கருத்துக்களை ஏற்றுக்கொள்ள முன் வருவர், வருமானம் அதிகரிக்கும், ஆதரவுக்கரம் நீட்டுபவர்கள் எண்ணிக்கை அதிகரிக்கும்.

**சிங்கம்** சிவனை வழிபட்டு சிறப்புக்களைக் காண வேண்டிய நாள், புதிய முயற்சிகளில் ஆர்வம் காட்டுவீர்கள், பணப் புழக்கம் அதிகரிக்கும், விருந்தினர் வருகை விருப்பத்தை நிறைவேற்றும்.

**கன்னி** அமைதி வந்து சேர ஆதிமூலத்தை வழிபட வேண்டிய நாள், தொழில் முயற்சிக்கு குறுக்கீடாக இருந்தவர்கள் விலகுவர், ஆரோக்கியத்தில் கவனம் தேவை, பணத் தேவைகள் கடைசி நேரத்தில் பூர்த்தியாகும்.

**துலாம்** வழிபாட்டால் முன்னேற்றம் காண வேண்டிய நாள், பணப்புழக்கம் அதிகரித்தாலும் அடுத்தடுத்த செலவுகளால் திணறுவீர்கள், சயன சுகக் குறைவான நாள்.

**விருச்சிகம்** புதிய திட்டங்களை நிறைவேற்ற புகழ் பெற்றவர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும், வருமானம் திருப்தி தரும், குடும்பத்தினரின் தேவைகளைப் பூர்த்தி செய்வதில் அக்கறை காட்டுவீர்கள்.

**தனுசு** ஆலய வழிபாட்டால் குதூகலம் காண வேண்டிய நாள், குடும்ப ஒற்றுமை பலப்படும், தூரதேசச் செய்திகள் மகிழ்ச்சி தரும், எடுத்த காரியங்கள் கைகூடும்.

**மகரம்** உங்களின் திறமைக்கு பாராட்டுக்கள் கிடைக்கும், கைவிட்டுப் போனதாக நினைத்த பொருளொன்று மீண்டும் வந்து சேரலாம், திடீர் பயணங்களால் நன்மையுண்டு, குறை சொல்பவர்கள் பாராட்டும் நாள்.

**கும்பம்** கவலைகள் தீர பரம்பொருளை வழிபட வேண்டிய நாள், மருத்துவச் செலவுகள் கூடும், சில வேலைகள் முடியாமல் இழுத்தடிக்கப்படலாம், நல்லவர் என நினைத்த ஒருவரே உங்களுக்கு விரோதமாக இருக்கலாம்.

**மீனம்** தெய்வீக சிந்தனை மேலோங்கும், மைத்துனர் வழியில் மனதிற்கினிய சம்பவங்கள் இடம்பெறலாம், மாலையில் ஆடம்பரப் பொருட்களின் சேர்க்கையுண்டு.

வளவன்



பிரதேச அபிவிருத்தி வங்கியின் 258 ஆவது கிளை நேற்று திறந்து வைக்கப்பட்டது. இதில் வங்கியின் கிளையை யாழ். மாவட்ட படைகளின் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் மஹிந்த ஹத்துருசிங்க நாடாவெட்டி திறந்து வைப்பதையும் பிரதேச வங்கியின் தலைவி திருமதி கேஷலா ஜயவர்த்தன மங்கல விளக்கேற்றுவதையும் நினைவுப் பலகையை யாழ். மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா திறந்து வைப்பதையும் முதலாவது வைப்பினை வாடிக்கையாளரிடமிருந்து பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே. எஸ். டக்ளஸ் தேவானந்தா பெற்றுக்கொள்வதையும் படங்களில் காணலாம்.

# வடமராட்சி கிழக்கில் கூட்டுறவு நிர்வாகத்தை அமையுங்கள்

## பணியாளர்கள் கோரிக்கை

(கரவெட்டி)

வடமராட்சி கிழக்கு பிரதேசத்திற்கு தனித்துமான கூட்டுறவு நிர்வாகத்தை அமைக்க யாழ். மாவட்ட கூட்டுறவு ஆணையாளர் முன்வர வேண்டும் என கூட்டுறவுப்பணியாளர்களும் ஆதரவாளர்களும் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

வடமராட்சி கிழக்குப் பிரதேசத்தில் யுத்த காலத்திற்கு முன் கூட்டுறவு நிர்வாகம் இயங்கி வந்ததாகவும் பின் அது யுத்தத்தினால் செயலிழந்து போகவே அப்பொறுப்பை மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பணிமனை ஏற்றதாகவும் குறிப்பிடப்படுகின்றது.

தற்போது வடமராட்சி கிழக்கு பிரதேசம் மீள்குடியேற்றம் செய்யப்பட்ட நிலையில் அம்மக்களுக்கு கூட்டுறவின் தேவை மிக முக்கியமாக உள்ளது.

எனவே கூட்டுறவு நிர்வாகத்தை அமைத்து அம்மக்களின் கூட்டுறவு தேவைகளைப் பூர்த்தி செய்யவும் சிறந்த கூட்டுறவு நிர்வாகத்தை அமைக்கவும் யாழ். மாவட்ட கூட்டுறவு ஆணையாளர் நடவடிக்கை எடுக்க வேண்டுமென கூட்டுறவு பணியாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ-3-24)

# 21 மாணவர்களுக்கு சேமிப்பு புத்தகங்கள் வழங்கும் நிகழ்வு

(சாவகச்சேரி)

தென்மராட்சி பிரதேசத்தில் பாடசாலைகளில் கல்வி கற்கும் வறுமைக்கோட்டிற்குட்பட்ட 21 மாணவர்களுக்கு வங்கி சேமிப்புப் புத்தகமும் கற்றல் உபகரணங்களும் வழங்கும் நிகழ்வு எதிர்வரும் ஜுலை மாதம் முதலாம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு தென்மராட்சி கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.மேற்படி நிகழ்வில் சமய, சமூக நல விழாவும் நடைபெறவுள்ளது.

சமய விழா தென்மராட்சி திவ்ய ஜீவன சங்கத்தலைவர் சி. ஆறுமுகம் தலைமையிலும் சமூகநல விழா சாவகச்சேரி றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலை அதிபர் திருமதி தயாசக்தி பாலசுப்பிரமணியம் தலைமையிலும் நடைபெறவுள்ளது.

சமய விழாவில் டாக்டர் எஸ்.அம்பிகைபாலன் மற்றும் ம. கந்தையா, வீ. இராமலிங்கம், சுப்பிரமணிய சுவாமிகள், திருமதி க. திலகவதி ஆகியோர் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்படவுள்ளனர்.

இவ்விழாவிற்கான ஆசியுரையை நல்லை ஆதீனகுருமணி சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமி, சிவப்பிரம்மசிறி க. பரராஜசேகரக்குருக்கள் ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர்.

பாராட்டுரையை இளைப்பாறிய நீதிபதி மு. திருநாவுக்கரசு, சாவகச்சேரி நகர சபைச் செயலாளர் க. புத்திசிகாமணி ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர். (அ-3-29)

# மின்தடை பற்றிய அறிவித்தல்

(யாழ்ப்பாணம்)

வீதி அகலிப்பு பணிகளுக்காக உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களை இடமாற்றம் செய்ய வேண்டியிருப்பதால் நாளை புதன்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 6 மணிவரை பின்வரும் பிரதேசங்களில் மின்விநியோகம் தடைப்பட்டிருக்கும் என யாழ்.பிரதேச மின்பொறியியலாளர் அறிவித்துள்ளார்.

இதற்கமைய கீந்தரோடை, மாகியப்பிட்டி, பண்டத்தரிப்பு, இளவாலை, சங்கானை, மாதகல், வட்டுக்கோட்டை, சுழிபுரம், மூளாய், காரைநகர்ப்பிரதேசம், தீவகப் பிரதேசம், அராலி, கரந்தன், நீர்வேலி, சிறுப்பிட்டி, கோப்பாய், இருபாலை, முடமாவடிப்பகுதி, பாற்பண்ணைப் பகுதி, திருநெல்வேலிநகரம், மருத்துவபீடப்பிரதேசம், ஆடியபாதம் வீதி கொக்குவில் சந்தி வரையான பிரதேசம், கல்வியங்காடு, நல்லூர், அரியாலை, தென்மராட்சிப் பிரதேசம், இணுவில்,மருதனார்மடம், உடுவில், சங்குவேலி, மானிப்பாய், கட்டுடை, தாவடி,கொக்குவில், நாச்சிமார் கோவிலடி, ஆனைக்கோட்டை, நவாலி, கோண்டாவில் ,கோம்பயன் மணல் பிரதேசம்,தட்டாதெரு பிரதேசம், கொட்டடி, நாவாந்துறை, மீனாட்சிபுரம், காக்கைதீவு, குருநகர், பாசையூர் ஆகிய இடங்களிலும் மின்விநியோகம் தடைப்பட்டிருக்கும் என அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-9)

# வளர்ப்பு நாய்களுக்கு விசர்நோய் தடுப்பூசி ஏற்றல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மாநகரசபை எல்லைக்குள் அமைந்த வண்ணார்பண்ணைப் பொதுச் சுகாதார பரிசோதகர் பிரிவிற்குட்பட்ட வளர்ப்பு நாய்களுக்கு விலங்குவிசர் நோய்த்தடுப்பூசி ஏற்றப்படவுள்ளதாக யாழ்.மாநகரசபை சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் அ.எ. ஞானஜோதி அறிவித்துள்ளார்.




இதற்கமைய நாளை புதன்கிழமை முற்பகல் 9 மணி தொடக்கம் முற்பகல் 11 மணி வரை நாவலர் வீதி அன்னசத்திர ஒழுங்கையிலும் முற்பகல் 11 மணி தொடக்கம் பிற்பகல் ஒரு மணிவரை மணிக்கூட்டு ஒழுங்கையிலும் வைத்து வழங்கப்படும்.

மறுநாள் வியாழக்கிழமை முற்பகல் 9 மணி தொடக்கம் 11 மணிவரை சபாபதி ஒழுங்கையிலும் வைத்து வழங்கப்படவுள்ளது. (2-9)

# பல்வேறு தேவைகளுடன் நாகர்கோவில் மகா வித்தி

(கரவெட்டி)

நாகர்கோவில் மகா வித்தியாலயத்தின் அவல நிலையை கருத்திற்கொண்டு கல்வி உயர் அதிகாரிகள் பாடசாலைக்கு நேரில் சமுகமளித்து நிலைமைகளை ஆராய வேண்டுமென அப்பகுதி மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

வடமராட்சி கிழக்கு நாகர் கோவில் மகா வித்தியாலயம் கடந்த 1995 ஆம் ஆண்டு புரட்டாதி மாதம் 22 ஆம் திகதி இடம்பெற்ற யுத்த சூழலில் இடம்பெற்ற விமானத் தாக்குதலில் முற்றாக சேதமடைந்ததுடன் அங்கிருந்த 24 மாணவர்கள் உயிரிழந்தனர்.

ஏனையோர் படுகாயமடைந்தனர். இந்நிலையில் பாடசாலையின் செயற்பாடுகள் பின்னடைவை எதிர்நோக்கியது.

கடந்த 2000 ஆம் ஆண்டு அப்பிரதேசத்தில் இருந்து மக்கள் வெளியேற்றப்பட்டமையினால் அப்பாடசாலையின் செயற்பாடுகள் முற்றாக செயலிழந்தன.

தற்பொழுது மீள்குடியேற்றம் செய்யப்பட்ட பின் அவ்வித்தியாலயத்தில் தரம் ஒன்று



முதல் தரம் 11 வரை 137 மாணவர்கள் ஒரு கொட்டகைக்குக்கீழ் கல்வி கற்று வருகின்றனர்.

இருப்பினும் பாடசாலைக்கு ஏற்ற சூழல் காணப்படவில்லை. கல்விச் செயற்பாட்டில் ஈடுபடும் மாணவர்களின் கண்களில் அப்பிரதேசம் யுத்த வடுக்கள் நிறைந்ததாக காட்சியளிக்கின்றது.

இவ்வித்தியாலயத்திற்கு முக்கிய தேவைகள் நிறைவேற்றப்பட வேண்டியுள்ளதால் இங்கு கல்வி கற்கும் மாணவர்களின் நிலை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது.

எனவே இப்பாடசாலையை அபிவிருத்தி செய்யவும் மாணவர்களின் கல்விச் செயற்பாடுகளில் முன்னேற்றத்தை எட்டவும் உயர் கல்வி அதிகாரிகள் நேரில் சென்று பார்வையிட வேண்டுமெனவும் அப்பகுதி மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (அ-3-24)

# வித்தியாமாலை அணிவிக்கும் நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

சுழிபுரம் ஸ்ரீ அம்மா பகவான் சற்சங்க ஆன்மீக பிரார்த்தனை மையத்தினரால் இன்று செவ்வாய்க்கிழமை காலை 8 மணிக்கு யா/ ஊர்காவற்றுறை தம்பாட்டி அ.த.க. வித்தியாலய மாணவர்களுக்கு ஸ்ரீ அம்மா பகவானின் வித்தியாமாலை அணிவிக்கும் நிகழ்வு வித்தியாலய அதிபர் கஸ்தன் றோஜ் தலைமையில் நடைபெறவுள்ளது.

மேலும் இவ்வித்தியாலய மாலையை தமது பாடசாலை மாணவர்களின் முன்னேற்றம் கருதி அணிவிக்க விரும்பும் பாடசாலை அதிபர்கள் எமது பிரார்த்தனை மையத்தின் 0777651719 எனும் தொலைபேசி-இலக்கத்துடன் தொடர்புகொள்ளுமாறு பிரார்த்தனை மையம் அறிவித்துள்ளது. (அ-9)

# நாடு முழுவதும் குற்றவாளிகள் பரவிக் காணப்படுகின்றனர்

## ஐ.தே.க. பேச்சாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

**இலங்கைப் பொலிஸ்துறை மூடமாக்கப்பட்டுள்ளதுடன் இந்த நாட்டில் சட்டம் நிலைநாட்டப்படும் என்று அரசாங்கத்தினால் அளிக்கப்பட்ட வாக்குறுதி மீறப்பட்டு நாடு கொந்தளிப்பான நிலைமைக்கு தள்ளப்படுகின்றது என ஐ.தே.க. பேச்சாளர் கயந்த தெரிவித்துள்ளார்.**

இந்த நாட்டில் நாளுக்கு நாள் குற்றச் செயல்கள் அதிகரித்துச் செல்வதை ஒவ்வொருவரும் உணர்ந்து கொள்ள தொடங்கியுள்ளனர். பொலிஸாரினால் குற்றச் செயல்களை கட்டுப்படுத்த முடியும் என்ற போதிலும் அவர்கள் முடமாக்கப்பட்டுள்ளனர்.

கட்டுவன படுகொலைச் சம்பவம், நூதனசாலை கொள்ளைச் சம்பவம், ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் நிறுவனத் தலைவரின் வீட்டில் இடம்பெற்ற கொள்ளைச் சம்பவம் ஆகிய சம்பவங்களை எடுத்துக் காட்டாகக் கொள்ளலாம்.

அரசாங்கத்தின் பாதுகாப்பில் இருந்த குற்றவாளிகளே கட்டவுன படுகொலைச் சம்பவத்திற்கான பொறுப்பாளிகள் ஆவர். எந்தவொரு சிறிய பிள்ளையினாலும் இதனை விளங்கிக் கொள்ள முடியும். பொலிவூட் நட்சத்திரம் போன்று அவர் நீதிமன்றத்தில் சரணடையும் வரை பொலிஸாரினால் ஒன்றும் செய்ய முடியாமல் இருந்தது. நாடு முழுவதும் தற்போது குற்றவாளிகள் பரவிக் காணப்படுகின்றனர்.

ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் நிறுவனத் தலைவர் கொள்ளைச் சம்பவ வழக்கு வந்தபோது சந்தே நபர்களை உடனடியாக பொலிஸார் கைது செய்ததை நாங்கள் கண்டோம். ஆனால், கொழும்பு நூதனசாலையில் கொள்ளையடித்தவர்கள் இன்னமும் அகப்படாமல் உள்ளனர்.

தற்போது பொதுமக்களுக்கு இந்த அரசாங்கத்தின் பலவீனம் நன்கு தெரியும் என அவர் மேலும் தெரிவித்தார். (அ-2)

## வடமராட்சி கிழக்கு

# மக்கள் மீள்குடியேறிய பகுதிகளில் ச.ச.நிலையங்கள் இயங்க வேண்டும்

## அப்பகுதி மக்கள் கோரிக்கை

(கரவெட்டி)

வடமராட்சி கிழக்கு பகுதியில் உள்ள சனசமூக நிலையங்களை மீளவும் ஆரம்பிக்க பிரதேசசபை நடவடிக்கை எடுக்க வெண்டுமென அப்பகுதி மக்களால் வேண்டுகோள் விடுக்கப்படுகிறது.

வடமராட்சி கிழக்கு பிரதேசத்தில் யுத்த காலத்திற்கு முன் பல சனசமூக நிலையங்கள் சிறப்பாக இயங்கியுள்ளது.

ஆன்றால், தற்போது மிகக் குறைவான சனசமூக நிலையங்களே இயங்கி வருவதனால் அப்பிரதேச மக்களின் வாசிப்பு திறன் வெளியுலக் தொடர்பாடல் மற்றும் ஏனைய முக்கிய விடயங்களை அறிய முடியாதவர்களாய் உள்ளனர்.

அண்மையில் மீள்குடியேற்றம் செய்யப்பட்ட பிரதேசங்களில் ஓரிரு சனசமூக நிலையங்களை தவிர ஏனையவை இயங்காமல் உள்ளன.

இதனால் அப்பகுதி மக்களின் கிராம அபிவிருத்தி மற்றும் மக்களின் ச.ச.நிலையங்களால் ஒற்றுமை கிடைக்கக்கூடிய நன்மைகள் என்பன கிடைப்பதில்லை.

எனவே, பருத்தித்துறை பிரதேச சபைஇம்மக்களின் நலன் கருதி யுத்தகாலத்திற்கு முன் இயங்கிய சனசமூக நிலையங்களை மீளவும் இயங்க வைக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென கோரிக்கை விடுக்கப்படுகிறது.

(அ-3-24)

# போரில் வெற்றி பெற்றதுபோல் நாட்டையும் வெற்றி கொள்வேன்

## பொன்சேகா உறுதி

(கொழும்பு)

கால்வாய்களை சுத்தப்படுத்தவும் புற்களை வெட்டுவதற்காகவும் இராணுவத்தினருக்கு பயிற்சிகள் வழங்கப்படவில்லை எனவும் தனது முறைகளுக்கு ஏற்ற வகையிலேயே தான் யுத்தத்தை செய்ததாகவும் முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற வைபவம் ஒன்றில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

சிலர் புத்தகங்களில் உள்ள போர் முறைகளை பின்பற்றி யுத்தம் செய்தனர். எனினும் எனது முறைமைக்கு அமையவே நான் யுத்தம் செய்தேன். எதிரியின் பலம் குன்றிய இடத்தில் நான் தாக்குதல் நடத்தவில்லை. பலமாக இருக்கும் இடத்திலேயே தாக்குதல் நடத்தினேன். போரில் வெற்றி பெற்றது போன்று ஒரு நாள் நாட்டையும் வெற்றி கொள்வேன்.

தேசிய பாதுகாப்பு வழங்கவே நான் இரா்ணுவத்தினருக்கு பயிற்சி அளித்தேனே அன்றி கால்வாய்களை சுத்தம் செய்யவும் புற்களை வெட்டவும் அல்ல. இது குறித்து நான் மிகவும் கவலையடைந்துள்ளேன். சாதாரண சிப்பாய், தொழிலாளி அடையும் துன்பத்தை விட அதிக துன்பங்களை அனுபவித்து வருகின்றனர் என்றார். (அ-2)

# அவுஸ். எதிர்க்கட்சிகளுக்கு இடையில் முறுகல் நிலை

அவுஸ்திரேலியாவில் அகதிகொள்கைத் தொடர்பில் எதிர்க்கட்சியின் மத்தியில் பிளவு ஏற்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

தொடர்ச்சியான அகதிகளின் வருகை காரணமாக அரசாங்கம் அவுஸ்திரேலியாவுக்கு வெளியில் அகதிகள் முகாம் ஒன்றை நிர்மாணிக்கவும் மலேசியாவுடன் அகதிகளை பரிமாற்றும் உடன்படிக்கையை ஏற்படுத்திக் கொள்ளவும் தீர்மானிக்கப்பட்டிருந்தது.

எனினும் இந்தத் தீர்மானத்துக்கு அந்த நாட்களில் எதிர்க்கட்சி ஒத்துழைப்பு வழங்கவில்லை. எனினும் தற்போது இந் நிலையில் மாற்றம் ஏற்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

இந்த வாரம் செனட்டில் இந்த தீர்மானத்துக்கு எதிர்க்கட்சியின் பல உறுப்பினர்கள் ஆதரவை வெளியிடுவார்கள் என அவுஸ்திரேலிய எதிர்க்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் மெல்வோசர் தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும் பிழையான அரசாங்கத்தின் தீர்மானங்களுக்கு எதிர்க்கட்சி துணைபோகாது என எதிர்க்கட்சித் தலைவர் டொனி எபோட் தெரிவித்துள்ளார். (அ-2)

## மணிபல்லவத்தில் மஹோற்சவம்



## நயினை நாகபூஷணி அம்மன் பாமாலை

### இன்று எட்டாம் திருவிழா

### முத்தமிழ் செல்விக்கு பாமாலை

சங்கத் தமிழ் போற்றும் நகரினிலே
முத்தமிழ் பேசுகின்ற பதியினிலே
முத்தமிழ் செல்வியாய் வந்தாய்– வந்து
முத்தமிழையும் தந்தாய்
மணிபல்லவத்திற்கு வந்திடம்மா– வந்தால்
காரிருள் அகற்றி ஒளிதந்திடுவாய்
உன்னை நினைத்து விட்டால்
இன்னல்கள் நீங்கி விடும்
நயினைக்கு வாருங்கள்
அம்பிகையின் அருள் பெற்றிடுங்கள்

தாவடியூர் மு.நித்தி

### தீர்வேது சொல்லம்மா

வேம்பின் நிழலாறும் வேத வல்லியே– நயினையில்
வாசமுறும் தேவியரே கேளம்மா
ஈமக் காடானதே எம்பூமி–இங்கு
ஈரந்தியும் கொடுமிடர் ஓங்குதம்மா
பாம்பின் குடையாளும் பகவதியே–எங்கள்
பூமியைப் படைபலம் விழுங்குதம்மா
நாமிருக்க இடமின்றி நீடலைந்தே–நயினை
நாயகியே நின்நிழலில் வந்தோமம்மா
நாமகளாய் அலை மகளாய் மலை மகளாய்–நமையாளும்
நாகம்மையே நலம் ஆள நாம்வாழும்
சேமநிலை தோன்றாதோ சென்னபூமியில்–சிவ
சுந்தரியே தீர்வேது சொல்லம்மா

அல்வாயூர் சி.சிவநேசன்.

### தக்கவழி தந்திடம்மா!

ஆழ் கடலின் நடுவினிலே
அமர்ந் திருக்கும் நாயகியே!
சூழும்தீ வினை களைந்து
சுபீட்சத்தை தந்திடம்மா!
நாளெல்லாம் உன் னடியார்
நாவினிக்கப் பாடு கின்றார்
தாழ்வில்லா வாழ் வமைய (த்)
தக்கவழி தந் திடம்மா!

சுழித்தாடி வி.சி.குஞ்சிதபாதம்

அரச அங்கீகாரம் பெற்ற சாரதிப் பயிற்சிப் பாடசாலை
கிருபா லேணர்ஸ்
தலைமைக் காரியாலயம்
226, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
T.P:021 222 4353
கிளை
சுன்னாகம்
கே.கே.எஸ்.வீதி,
T.P: 0212242[illegible]
07145469[illegible]

# பிரிட்டனில் கனமழையால் வெள்ளப்பெருக்கு; பாதுகாப்பான இடங்களுக்கு மக்கள் நகர்வு

இங்கிலாந்தில் பெய்த கன மழை காரணமாக கடந்த இரண்டு நாட்களாக வெள்ளம் பெருக்கெடுத்து ஓடுகிறது. லங்காஷயரிலும் மேற்கு யோர்க்ஷயரிலும் 24 மணி நேரம் தொடர்ந்து பெய்த மழையால் 500 வீடுகள் சேதமடைந்தன.



இது தொடர்பாக சுற்றுச்சூழல் துறையின் செய்தித் தொடர்பாளர் கூறுகையில், வெள்ளத்தில் இருந்து மக்களை பாதுகாக்க மில்லியன் கணக்கில் செலவு செய்திருப்பதாகவும் இதனால் 11 ஆயிரம் வீடுகளையும் கடைகளையும் பாதுகாத்து இருப்பதாகவும் தெரிவித்துள்ளார்.


வடக்கு இங்கிலாந்திலும் எல்லைப் பகுதியிலும் வெள்ள எச்சரிக்கை விடப்பட்டுள்ளது, இப்போது தென்மேற்குப் பகுதியிலும் வெள்ளம் ஏற்படலாம் என்று அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது. இதனால் மக்கள் வீடுகளைவிட்டு வெளியேறி பாதுகாப்பான இடங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

மேலும் அனைத்து ஊடகங்களிலும் வெள்ள அபாய அறிவிப்பு வெளியிடப்பட்டது. இருப்பினும் மிகக் குறுகிய நேரத்தில் பெருமழை கொட்டியதால் நதிகளில் திடீரென வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது என்றார்.

மழை வருவதை முன்கூட்டியே அறிவிக்கலாம், எச்சரிக்கலாம், வெள்ளத் தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம். ஆனால், பெருகி வரும் வெள்ளத்தைத் திடீரென நிறுத்த இயலாது என்று அவர் விளக்கிக் கூறினார்.

மேலும் மக்கள் ஆற்றோரங்களில் நடமாடகூடாது என்று எச்சரிக்கப்பட்டுள்ளது. இதுவரை வடக்கு இங்கிலாந்தில் 64 முறை வெள்ள அபாய அறிவிப்பும் 22 முறை வெள்ள எச்சரிக்கையும் விடப்பட்டது குறிப்பிடத்தக்கது. (அ-2)

# சீனாவில் பயங்கர நிலநடுக்கம்! 2 பேர் பலி; 100 பேர் காயம்



சீனாவில் பயங்கர நிலநடுக்கம் ஏற்பட்டதில் 2 பேர் உயிரிழந்தனர். 100 இற்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர்.

சீனாவின் தென்மேற்கு பகுதியில் உள்ள யுனான் மற்றும் சிச்சுவான் எல்லைப் பகுதியில் நேற்று முன்தினம் மாலை 4 மணியளவில் நிலநடுக்கம் ஏற்பட்டது. ரிக்டர் அளவு கோலில் 5.7 ஆக பதிவானது. இந்த நிலநடுக்கத்தில் 2 பேர் பலியானார்கள். 100 பேர் காயம் அடைந்தனர்.

மலைப்பகுதி என்பதால் வீடுகள் இடிந்து சரிந்தன. தொலைத்தொடர்புகள் துண்டிக்கப்பட்டு விட்டன. கட்டட இடிபாடுகளுள் சிக்கி பலர் தவித்தனர். நிலநடுக்கத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு மீட்புக் குழுவினரும் நிவாரணப் பொருட்களும் அனுப்பி வைக்கப்பட்டன. (அ-2)

# எகிப்தின் புதிய ஜனாதிபதியாக முகமது முர்சி தெரிவானார்



எகிப்தின் புதிய ஜனாதிபதியாக முஸ்லிம் சகோதரத்துவ கட்சியின் தலைவர் முகமது முர்சி அறிவிக்கப்பட்டார்.

கடந்த 16 ,17 ஆம் திகதிகளில் எகிப்தில் ஜனாதிபதி தேர்தல் நடைபெற்றது. முஸ்லிம் சகோதரத்துவ கட்சி வேட்பாளர் முகமது முர்சிக்கும் முபாரக் ஆட்சிக்காலத்தில் பிரதமராக இருந்த அகமது ஷபிக்குக்கும் இடையே நேரடி போட்டி நிலவியது. முதல் கட்ட வாக்குப் பதிவில் எந்த வேட்பாளருக்கும் 50 சதவீத வாக்குகள் கிடைக்கவில்லை. இதனால் இரண்டாவது சுற்று வாக்குப் பதிவு நடைபெற்றது. இதன் முடிபுகள் நேற்று முன்தினம் அறிவிக்கப்பட்டன.

இதன்படி ஜனாதிபதியான முகமது முர்சிக்கு ஒரு கோடியே 32 இலட்சத்து 30 ஆயிரத்து 131 வாக்குகள் கிடைத்தன. இது 51.73 சதவீத வாக்குகளாகும்.

வெற்றியை எகிப்து தேர்தல் கமிஷன் தலைவர் பரூக் சுல்தான் அதிகாரபூர்வமாக அறிவித்தார்.

இதனையடுத்து அவருடைய தொண்டர்கள் கெய்ரோவில் உள்ள புகழ்பெற்ற தாரிர் சதுக்கத்தில் திரண்டனர். பட்டாசு வெடித்தும் இனிபுகளை வழங்கியும் கொண்டாடினர்.

தேர்தல் முடிவுகள் வெளியானதை தொடர்ந்து கெய்ரோவில் கலவரம் வெடிக்கலாம் என்று எதிர்பார்க்கப்பட்டதையடுத்து ஆங்காங்கே பாதுகாப்புப் படையினர் குவிக்கப்பட்டனர். கலவர அபாயம் கருதி பாராளுமன்றத்துக்கு செல்லும் வீதி மூடப்பட்டது. வானில் இராணுவ ஹெலிகொப்டர்கள் கண்காணிப்பு பணியில் ஈடுபட்டன.

இதேவேளை அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா வாழ்த்துச் செய்தி அனுப்பியுள்ளார். அதில் எகிப்தில் ஆட்சி மாற்றம் மூலம் ஜனநாயகம் மலர்ந்துள்ளது. அதற்காக தங்களுக்கு வாழ்த்துக்களை தெரிவித்து கொள்கிறேன்.

தங்களுக்கு அமெரிக்கா என்றும் உறுதுணையாக இருக்கும். புதிதாக ஆட்சிப் பொறுப்பேற்கும் தாங்கள் புரட்சியின் போது பொது மக்களுக்கு அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்ற வேண்டும் என தெரிவித்துள்ளார். ஒபாமாவின் வாழ்த்துக்கு முர்சி நன்றி தெரிவித்துள்ளார். (அ-2)

# நைஜீரிய சிறைச்சாலையில் 40 கைதிகள் தப்பியோட்டம்

(லாகோஸ்)

நைஜீரியாவில் யூபி சிறைச்சாலையில் ஆயுதம் தாங்கிய கும்பல் நடத்திய தாக்குதலில் சிறையிலிருந்த 40 கைதிகள் தப்பி ஓடிவிட்டதாக அந்நாட்டு பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நைஜீரியாவில் உள்ள யூபி சிறைச்சாலையில் நேற்று முன்தினம் ஆயுதம் தாங்கிய கும்பல் ஒன்று தாக்குதல் நடத்தியது. இதில் 40 கைதிகள் தப்பி ஓடிவிட்டனர். கடந்த வாரம் டமத்துருவில் ஆயுதம் தாங்கிய கும்பலுடன் பொலிஸார் சண்டையிட்டதில் கும்பலை சேர்ந்த இருவர் பலியானார்கள். மற்றும் பொலிஸார் சிலர் காயமடைந்தனர். மேலும் பொதுமக்கள் 40 பேர் பலியானார்கள். இதனை தொடர்ந்து இச்சம்பவம் அரங்கேறியுள்ளது. (2)

# ரஷ்யாவுடன் இணைந்து இந்தியா போர் ஒத்திகை

சீன எல்லையில் இந்தியா-ரஷ்யா இணைந்து போர் ஒத்திகை நிகழ்ச்சியினை எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் தொடங்குகிறது. இந்தியா-ரஷ்யா ஆகிய நாடுகள் இணைந்து பயங்கரவாதத்தினை எதிர்த்து போர் ஒத்திகை மேற்கொள்வதென முடிபு செய்ததன் படி இந்த்ரா என்ற பெயரில் முதன்முறையாக கடந்த 2005 ஆம் ஆண்டு ராஜஸ்தானில் மேற்கொண்டன.

தற்போது 4 ஆவது முறையாக இந்தியா- ரஷ்யா இணைந்து பயங்கரவாதத்தினை எதிர்கொள்வது குறித்து இந்த்ரா- 2012 என்ற பெயரில் போர் ஒத்திகையினை வரும் ஓகஸ்ட் மாதம் நடத்த திட்டமிடுள்ளன. இருதரப்பிலும் 250 வீரர்களுடன் சீன- மங்கோலிய நாடுகளின் எல்லையில் இந்த ஒத்திகை நடக்கவுள்ளதாக இராணுவ வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (அ-2)

# தமிழக மீனவர்கள் இந்திய எல்லையை தாண்டவில்லை


## அமை. ஜெயபால் தெரிவிப்பு



இலங்கை கடல்பகுதியில் தமிழக மீனவர்கள் மீன்பிடிப்பதாக இலங்கை ஜனாதிபதி மஹிந்தராஜபக்ஷ கூறுகிறார். அவர் கூறுவது முற்றிலும் பொய்யான தகவல். தமிழக மீனவர்கள் இந்திய கடல் எல்லையில்தான் மீன்பிடித்து வருகிறார்கள் என்பதனை அவர் புரிந்து கொள்ள வேண்டும் என மீன்வளத்துறை அமைச்சர் ஜெயபால் கடும் கண்டனம் தெரிவித்துள்ளார். இராமநாதபுரம் மாவட்டம் பாம்பனில் தமிழக அரசின் சார்பில் மீனவர்களுக்கு வாக்கி டாக்கி வழங்கும் நிகழ்ச்சி இடம்பெற்றது. இதற்கு முன்னதாக நேற்று காலை இராமநாதபுரத்திற்கு வந்த அமைச்சர் ஜெயபால் நிருபர்களிடம் கூறியதாவது, 3 ஆயிரத்து 100 நாட்டு படகு மீனவர்களுக்கும் ஆயிரத்து 500 விசைப்படகு மீனவர்களுக்கும் வாக்கி டாக்கி வழங்க திட்டமிடப்பட்டுள்ளது. முதல் கட்டமாக 3 ஆயிரத்து 500 வாக்கி டாக்கிகள் வழங்கப்படும். இராமேஸ்வரம் தென்கடல் பகுதியில் மணல் திட்டுகளை அகற்றி கடலை ஆழப்படுத்தி மீன்வளத்தை பெருக்க நேரில் ஆய்வு செய்யப்படும்.

கடலுக்கு மீன்பிடிக்க செல்லும் மீனவர்களின் உடைமைக்கும் உயிருக்கும் தமிழக அரசு உறுதுணையாக இருக்கும். தமிழக மீனவர்கள் கடலுக்கு சென்று நிம்மதியாக மீன்பிடித்து விட்டு பாதுகாப்பாக கரை திரும்ப வேண்டிய அனைத்து நடவடிக்கைகளையும் தமிழக அரசு செய்யும். மீனவர்களின் வாழ்க்கை தரத்தை உயர்த்த நடவடிக்கை எடுக்கப்படும். வாக்கி டாக்கி திட்டம் ஒரு முன்மாதிரியான திட்டமாகும். வாக்கி டாக்கிகளை இயக்க 1.4 கோடி ரூபா செலவில் 3 வயர்லெஸ் டவர் இராமேஸ்வரத்தில் அமைக்கப்பட்டுள்ளது. இந்த டவர் மூலம் 50 கடல் மைல் வரை சிக்னல் கிடைக்கும் என அவர் கூறினார். (அ-2)

# ஆப்கானில் பயங்கர சூறாவளி! 30 பேர் உயிரிழப்பு; பலர் மாயம்



ஆப்கானிஸ்தானில் கடும் மழையால் ஏற்பட்ட வெள்ளத்தில் இதுவரை 30 பேர் உயிரிழந்துள்ளனர். பலர் காணாமல் போயுள்ளனர்.

ஆப்கானிஸ்தானின் கோர் மாகாணத்தில் கடந்த சில நாட்களாக பயங்கர சூறாவளி மற்றும் கடும் மழை பெய்து வருகிறது. இதில் பல கிராமங்கள் வெள்ளத்தில் மூழ்கி உள்ளன. நூற்றுக்கணக்கான விவசாயநிலங்களில் பயிர்கள்நாசம் அடைந்துள்ளன. பல வீடுகள் வெள்ளத்தில் இடிந்து நொருங்கி உள்ளன.

வெள்ளத்தில் இதுவரை 30 பேர் பலியாகியுள்ளதாகவும் பலர் காணாமல்போயுமுள்ளனர். அவர்களை தேடும் பணி முடுக்கி விடப்பட்டுள்ளது. வெள்ளம் பாதித்த பகுதிகளில் மீட்புப் படையினர் தீவிர நடவடிக்கையில் இறங்கி உள்ளனர்.

வெள்ளம் பாதித்த பகுதிகளில் வசித்த மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு மாற்றப்பட்டுள்ளனர். இதுபோன்ற கடும் சூறாவளி, மழை ஆண்டுதோறும் இந்த மாதத்தில் வழக்கமானதுதான். எனவே, முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுக்கப்பட்டது. அதனால் பலி எண்ணிக்க்கை குறைந்துள்ளது. (அ-2)

# ஈழத்தில் நில அபகரிப்பு குறித்து பிரான்சில் விழிப்பூட்டல் பரப்புரை

(கொழும்பு)

தமிழர் தாயகத்தின் மீதான இலங்கை அரசின் நில ஆக்கிரமிப்புக்கு எதிரான விழிப்பூட்டல் பரப்புரை பிரான்சில் இடம்பெற்று வருகின்றது.

இலங்கை இராணுவத்தினரால் ஆக்கிரமிப்புக்கு உள்ளாகியுள்ள ஈழத் தாயகப் பிரதேசத்தில் சிங்கள அரசினால் நன்கு திட்டமிட்ட முறையில் மேற்கொள்ளப்பட்டு வரும் நில அபகரிப்பானது தமிழர்கள் அனைவரையும் கொதிப்படைய வைத்துள்ளது.

இந்நிலையில் தமிழர் தாயகத்தில் முன்னெடுக்கப்படும் நில அபகரிப்புக்கு எதிரான மக்கள் போராட்டங்களுக்கு வலுவூட்டும் வகையில் இப்பரப்புரை இடம்பெறுகின்றது.

இன்று செவ்வாய்க்கிழமை தாயகத்தில் மேற்கொள்ளப்படும் நில அபகரிப்புக்கு எதிரான மக்கள் போராட்டத்திற்கு சமாந்திரமாக அதே நாளில் புலம்பெயர் நாடுகளிலும் கவனயீர்ப்பு போராட்டங்களை நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் முன்னெடுக்கின்றது.

இதனொரு அங்கமாக பிரான்சில் ஐ.நா.நிறுவனத்திற்கு முன்னால் இக் கவனயீர்ப்பு போராட்டம் இடம் பெறுகின்றது. மாலை 4 மணி தொடக்கம் 6 மணிவரை இந்தக் கவனயீர்ப்பு போராட்டம் இடம்பெறவுள்ளது. யூதக்குடியேற்றங்கள் ஊடாக பாலஸ்தீன மக்களின் நிலங்களை அபகரித்த இஸ்ரேல், பாலஸ்தீன மக்களின் தாயகப் கோட்பாட்டை பலவீனப்படுத்தியிருந்தது. இதே வழியில் தமிழர்களின் நிலங்களை அபகரிப்பதன் ஊடாக தமிழீழத் தாயகக் கோட்பாட்டை பலவீனப்படுத்த இலங்கை அரசு முனைகின்றதென இந்த விழிப்பூட்டல் பரப்புரையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-2)

# வழிபாட்டு நிலையம் மீது பிக்குகள் தாக்குதல்

## காலியில் சம்பவம்

காலியில் புதிதாக அமைக்கப்பட்ட பௌத்த மதப் பிரிவு ஒன்றின் மீது பௌத்த பிக்குகளும் சிங்களவர்களும் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

காலியில் உள்ள வரந்துரம்ப என்ற இடத்தில் அண்மையில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. இங்கு் புதிய பௌத்த மதப் பிரிவான சுமேத சங்கமயவின் சார்பில் ஏழு மாடிக் கட்டடம் ஒன்றில் பௌத்த நிலையம் அமைக்கப்பட்டுள்ளது.

இதன்மீது நூற்றுக்கணக்கான பௌத்த பிக்குகளும் ஆயிரக் கணக்கான சிங்களவர்களும் கற்களை வீசித் தாக்குதல் நடத்தியுள்ளனர். பௌத்த சித்தாந்தம் தவறானது என்று இந்த புதிய மதப் பிரிவினர் பரப்புரை செய்வதாக தாக்குதல் நடத்தியோர் குற்றம் சாட்டியுள்ளனர்.

வந்துரம்ப நகரில் இடம்பெற்ற கூட்டம் ஒன்றையடுத்தே இந்த புதிய மதப் பிரிவின் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. பௌத்த நிலையம் மீது தாக்குதல் நடத்தியோரை பொலிஸார் கண்ணீர்ப் புகைக்குண்டுகளை வீசி கலைத்தனர். (அ-2)

# பாகிஸ்தான் பிரஜையின் வயிற்றில் ஹெரோயின்

(கொழும்பு)

பாகிஸ்தானில் இருந்து இலங்கைக்கு ஹெரோயின் கடத்தி வந்த பாகிஸ்தான் பிரஜை ஒருவர் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

பாகிஸ்தான் கராச்சியில் இருந்து புறப்பட்ட விமானத்தில் பயணித்தவர்கள் வழக்கம்போல் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டபோது இவர் போதைப் பொருள் ஒழிப்புப் பிரிவால் கைது செய்யப்பட்டார்.

அவரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் அவரது வயிற்றில் ஹெறொயின் இருப்பது கண்டு பிடிக்கப்பட்டது.

அதன் பின்னர் குறித்த நபர் நீர்கொழும்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மலவாயில் ஊடாக 20 ஹெறோயின் உருண்டைகள் வெளியில் எடுக்கப்பட்டுள்ளன.

இவரது வயிற்றில் மேலும் ஹெறோயின் உருண்டைகள் இருப்பதால் வைத்தியசாலையில் தொடர்ந்தும் சிகிச்சைப் பெற்று வருகின்றார்.

பொலிஸ் போதைப் பொருள் ஒழிப்புப் பிரிவினர் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ-2)

# மீளாய்வுக்கூட்டம்

(மல்லாவி)

வடமாகாணத்திற்குட்பட்ட 12 கல்வி வலயங்களிற்கு கீழ் இயங்கும் ஆசிரிய மத்திய நிலையங்களில் கடமையாற்றும் முகாமையாளர்கள் மற்றும் இணைக்கப்பட்டுள்ள தொழில் வழிகாட்டல், ஆங்கிலம் தொடர்பான அலுவலர்கள் ஆகியோருக்கான இந்நிலையங்களின் செயற்பாடுகள் தொடர்பான முன்னேற்ற மீளாய்வுக் கூட்டம் நடைபெறவுள்ளது.

இக்கூட்டம் நாளை புதன்கிழமை காலை 8.30 மணிக்கு மருதனார் மடத்தில் உள்ள வடமாகாண கல்வித் திணைக் களத்தில் நடைபெறும்.

ஆசிரிய மத்திய நிலைய முகாமையாளர் சமூகம் தரும்போது நடப்பாண்டுக்குரிய இதுவரையுமான மாதாந்த பணிநிறை வேற்று அறிக்கையின் பிரதிகளை தவறாது எடுத்து வரவேண்டுமென வடமாகாண கல்விப் பணிப்பாளர் ப. விக்னேஸ்வரன் அறிவித் துள்ளார். (அ-3-15)




★ 363-ரோமப் பேரரசன் ஜூலியன் கொல்லப்பட்டான்.

★ 1483-மூன்றாம் ரிச்சர்ட் இங்கிலாந்தின் மன்னனாக முடி சூடினான்.

★ 1541-இன்கா பேரரசை முடிபுக்கு கொண்டு வந்த பிரான்சிஸ்கோ பிசாரோ கொல்லப்பட்டான்.

★ 1690-தென்மேற்கு இங்கிலாந்தின் நகரான டெயின்மவுத் நகரை பிரான்ஸ் முற்றுகையிட்டது.

★ 1718-தனது தந்தை மன்னர் முதலாவது பியோத்தரை கொல்லச் சதி செய்ததாக மரண தண்டனை விதிக்கப்பட்ட ரஷ்யாவின் இளவரசன் அலெக்சி பெட்ரோவிச் மர்மமான முறையில் இறந்தான்.

★ 1723-அசர்பைஜான் தலைநகர் பாக்கூ ரஷ்யாவிடம் வீழ்ந்தது.

★ 1924-அமெரிக்க ஆக்கிரமிப்புப் படை டொமினிக்கன் குடியரசை விட்டு விலகியது.

★ 1948-முதலாவது இருதுருவ திரிதடையத்துக்கான காப்புரிமத்தை வில்லியம் ஷோக்லி பெற்றார்.

★ 1960-சோமாலிலாந்து பிரித்தானியாவிடம் இருந்து விடுதலை அடைந்தது.

★ 1975-இந்திரா காந்தி இந்தியாவில் அவசர காலச் சட்டத்தைப் பிறப்பித்தார்.

★ 1976-உலகின் மிக உயரமான கட்டிடமான கனடாவின் சி.என்.கோபுரம் பொதுமக்கள் பயன்பாட்டிற்காக திறக்கப்பட்டது.

### பிறப்புக்கள்

★ 1824-வில்லியம் தாம்சன், அயர்லாந்தைச் சேர்ந்த இயற்பியல் அறிஞர் (இ. 1907)

★ 1838-பான்கீம் சட்டர்ஜி, வங்காள எழுத்தாளர் (இ.1894)

★ 1892-பெர்ல் பக், அமெரிக்க எழுத்தாளர், நோபல் பரிசு பெற்றவர் (இ.1973)

★ 1924-இளையபெருமாள், தமிழ்நாடு தலித் அரசியல் தலைவர் (இ. 2005)

★ 1906-ம.பொ.சிவஞானம், தமிழக அரசியல்வாதி, தமிழறிஞர் (இ.1995)

### இறப்பு

★ 1995-ஏர்னெஸ்ட் வோல்ட்டன், நோபல் பரிசு பெற்றவர். (பி. 1903)

### சிறப்பு நாள்

★ மடகஸ்கார்- விடுதலை நாள்.

★ ருமேனியா:- கொடி நாள்.

★ சோமாலிலாந்து- விடுதலை நாள்.



ம.பொ.சிவஞானம் இந்தியாவைச் சேர்ந்த விடுதலைப் போராட்ட வீரரும் சிறந்த தமிழறிஞரும் ஆவார்.

இவர் ம.பொ.சி என அறியப்படுபவர் சிலப்பதிகாரத்தின் மீது இவர் கொண்டிருந்த ஆளுமையின் காரணமாக இவர் சிலம்புச் செல்வர் என அழைக்கப்பட்டார்.

இவரின் பள்ளிப்படிப்பு மூன்றாம் வகுப்போடு முடிந்தது. குழந்தைத் தொழிலாளியாக நெசவுத் தொழில் செய்தார். பின்னர் அச்சுக் கோர்க்கும் பணியில் சேர்ந்தார். இத் தொழிலை அவர் அதிக நாள் செய்து வந்தார். 31ஆம் வயதில் திருமணம் நடந்தது. ஒரு மகன் இரு மகள்கள் எனக் குழந்தைகள்; பின்னர் விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டுச் சிறைவாசம்; காங்கிரஸ் இயக்கத்தில் சேர்ந்து சிறந்த சொற்பொழிவாளராகத் திகழ்ந்தார். எழுநூறு நாட்களுக்கு மேல் சிறையில் இருந்தார். ம.பொ.சி. தன் சிறைவாசத்தைச் சிலப்பதிகாரத்தைக் கற்றுக் கொள்ளப் பயன்படுத்தினார்.

மெட்ராஸ் ஸ்ரேட் என்பதை மாற்றி தமிழ் நாடு என்ற பெயரை வைக்கப் போராடினார். மொழிவாரியாக மாநிலங்கள் பிரிக்கப்பட்ட போது மதராஸ் மனதே என்று ஆந்திரர்கள் சென்னையைக் கேட்டபோது அதனை எதிர்த்துப் போராடித் தமிழகத் தலைநகராகச் சென்னையை திகழவைத்த பெருமைக்குரியவர்.



சி.என்.கோபுரம் கனடாவின் ரொரன்டோவில் அமைந்துள்ள உலகின் மிக உயரமான கோபுரங்களுள் ஒன்றாகும். 1973-ம் ஆண்டு பெப்ரவரி 6-ம் திகதி தொடங்கப்பட்ட இதன் கட்டுமானப் பணிகள் 1976-ம் ஆண்டு பூர்த்தியாகியது. 1976ஆம் ஆண்டு ஜூன் 26-ம் திகதி மக்கள் பயன்பாட்டிற்காக திறக்கப்பட்ட இந்தக் கோபுரம் 2010-ம் ஆண்டில் புர்ஜ் டுபாய் என்னும் டுபாய் கோபுரம் கட்டிமுடிக்கப்படும் வரை உலகின் மிக உயரமான கோபுரமாக சுமார் 34 ஆண்டுகள் திகழ்ந்தது. இதன் உயரம் 553.33 மீட்டர்களாகும்.

★ **சித்திரவதைகளுக்கு ஆளானருக்கான சர்வதேச ஆதரவு நாள்.**

உலகெங்கும் உள உடல் ரீதியாக பல்வேறு சித்திரவதைகளுக்கு ஆளானோருக்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில் ஜூன் 26,1987இல் ஐ.நா. பொதுச்சபைக் கூட்டத்தில் சித்திரவதைக் கெதிரான தீர்மானம் எடுக்கப்பட்டது. மனித சமூகத்தின் அடிப்படை உரிமைகள் பாதுகாக்கப்படுவதன் மூலமே உலகில் விடுதலை, நீதி மற்றும் அமைதி ஏற்பட வாய்ப்புண்டு என்பதை இத்தீர்மானம் எடுத்துக்காட்டுகின்றது.

# நாட்பட்ட நீரிழிவு நோயினால் உண்டாகும் பாதிப்புகள்

**கேள்வி 22:- ஒரு சிரிஞ்சை ஒருவர் எத்தனை தடவை பயன்படுத்தலாம்?**

**பதில்:-** கண்ணாடி சிரிஞ்ச் பயன்படுத்தினால் ஒவ்வொரு முறையும் 26 ஆம் எண் ஊசியை பயன்படுத்த வேண்டும். **B.D.** சிரிஞ்சு பயன்படுத்தினால் அதனை மூன்று அல்லது நான்கு தடவைக்கு மேல் பயன்படுத்தக் கூடாது. ஊசி போட்டு முடித்தவுடன் ஊசியைப் பஞ்சினால் துடைக்காமல் அதை அப்படியே ஒரு குளிர்ச்சியான இடத்தில் (குளிர்சாதனப்பெட்டி) வைக்க வேண்டும்.

**கேள்வி 23:- பல வருடங்கள் தொடர்ந்து இன்சுலின் எடுத்தும் நீரிழிவு நோயைக் கட்டுப்படுத்த முடியாமல் போவது ஏன்?**

**பதில்:-** நீரிழிவு நோயாளி ஒருவர் பல வருடங்கள் தொடர்ந்து இன்சுலின் எடுத்துக் கொண்ட போதிலும் அளவிற்கு அதிகமாகவே எடுத்துக் கொண்ட போதிலும் கூட நீரிழிவு நோயைக் கட்டுப்படுத்த முடியவில்லை என்றால் நிச்சயம் அதற்கு வேறு சில காரணங்கள் இருத்தல் வேண்டும். அவை:- உடற்பயிற்சி செய்யாமை, உணவுக் கட்டுப்பாடு இன்மை, மன உளைச்சல், இன்சுலின் குறைந்த அளவே எடுத்துக் கொள்வது அல்லது சில தொற்றுகளினால் பாதிக்கப் பட்டிருப்பது போன்றவையாகும்.

**குழந்தைகளும் நீரிழிவு நோயும்**

**கேள்வி 01:- நீரிழிவு நோயினால் பாதிக்கப்பட்ட ஒருவர் தன் குழந்தைகளுக்கு அந்நோய் வராமல் அவர்களை பாதுகாக்க முடியுமா?**

**பதில்:-** நீரிழிவு நோயினால் பாதிக்கப்பட்ட ஒருவர் தனது குழந்தைகளுக்கு முறையான உடற்பயிற்சி, நல்ல உணவுப் பழக்கம் முதலியவற்றை அளித்து அவர்களின் உடல் எடை அதிகரிக்காமல் பார்த்துக் கொள்ள வேண்டும். அவ்வப்போது அவர்களின் இரத்தம் மற்றும் சிறுநீரை பரிசோதித்துக் கொள்ள வேண்டும். இவ்வாறு செய்து வந்தால் அவர்களை நீரிழிவு நோய் பாதிக்காமல் காப்பாற்ற முடியும்.

**கேள்வி 02:- பரம்பரைக் காரணமாக குழந்தைகளுக்கு நீரிழிவு நோய் வருமா?**

**பதில்:-**நீரிழிவு நோயைப் பொறுத்தமட்டில் சத்துணவு ஒரு முக்கிய இடம் வகிக்கிறது. எனினும் குழந்தைகளுக்கு நீரிழிவு நோய் வருவதற்கு பரம்பரை மட்டுமே ஒரு காரணம் அன்று. ஒரு நுண்கிருமிகூட இந்நோயை வரவழைத்து விடும். தாத்தா- பாட்டி, தாய்- தந்தை, அத்தை- மாமா இவர்களுக்கு இந்நோய் இருந்தால் அவர்களின் குழந்தைகளுக்கும் இந்நோய் வருகிறது என்று கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. எனவே, பரம்பரைக் காரணமாக குழந்தைகளுக்கு இந்நோய் வரும் சாத்தியக் கூறுகள் அதிகமாகும்.

**கேள்வி 03:- குழந்தைகளுக்கு இந்நோய் இருப்பதற்கான அறிகுறிகள் யாவை?**

**பதில்:-** குழந்தைகள் இரவில் அடிக்கடி சிறுநீர் கழிப்பார்கள் என்றால் அது பொதுவான ஓர் அறிகுறியாகும். சிலசமயம் குழந்தைகள் வயிற்று வலி அல்லது கால் உளைச்சலினால் அவதிப்படும். அவர்களுக்கு அதிகமாகப் பசிக்கும். கண்பார்வை பாதிக்கப்படும். நீரிழிவு நோயினால் பாதிக்கப்பட்ட குழந்தை அடிக்கடி எரிச்சல்படும், கோபப்படும், சோர்வடையும், பலவீனமாகவும் இருக்கும். இம்மாதிரி இருந்தால் அக்குழந்தையின் இரத்தத்தைக் கட்டாயம் பரிசோதிக்க வேண்டும்.

**கேள்வி 04:- நீரிழிவு நோய் வந்த குழந்தையினால் ஏனைய குழந்தைகளைப் போல் விளையாட முடியுமா?**

**பதில்:-** ஆம். அக்குழந்தைகளும் ஏனைய குழந்தைகளைப் போல் வாழலாம். ஆனால், அக்குழந்தை விடயத்தில் அதன் பெற்றோர் மிகுந்த எச்சரிக்கையுடன் இருத்தல் வேண்டும். தினமும் ஒழுங்காக இன்சு லின் கொடுக்க வேண்டும். அக்குழந்தையின் ஆர்வத்தை ஒருபோதும் குறைக்கக் கூடாது. அவர்களை ஒருபோதும் மன உளைச்சலுக்கு ஆளாக்கக்கூடாது. உடற்பயிற்சி,உணவு இவை தவிர அவனுக்கு ஊக்கமும் உற்சாகமும் அளிக்க வேண்டும். மனவலிமை பெறச் செய்ய வேண்டும். புகழ் பெற்ற பலர் குழந்தைப் பருவத்திலேயே நீரிழிவு நோயினால் பாதிக்கப்பட்டிருக்கின்றனர் (எ.கா.) வாசிம் அக்ரம்- மிகச் சிறந்த கிரிக்கெட் வீரர்.

**கேள்வி 05:- நீரிழிவு நோயினால் பாதிக்கப்பட்ட குழந்தைக்கு அதன் பெற்றோர் எம்மாதிரியான பாதுகாப்பு அளிக்க வேண்டும்?**

**பதில்:-** முதலில் அக்குழந்தையிடம் உனக்கு நீரிழிவு நோய் இருக்கிறது என்று அடிக்கடி கூறக்கூடாது. அதுபோல் அவனை மிகவும் ஜாக்கிரதையாக இருக்கும்படி வற்புறுத்தக்கூடாது. இதனால்அவனுக்குமனஉளைச்சல் ஏற்படும். அவனுக்கு இன்சுலின் ஊசி போடப்படும் போது ஐயோ பாவம் என்று கூறக் கூடாது. இதனால் அவனுக்கு தாழ்வு மனப்பான்மை உண்டாகும், இதனை ஒரு காரணமாக வைத்து அவனை பாடசாலைக்கு அனுப்பாமல் இருக்கக்கூடாது. அதேசமயம் அவனுக்கு நோய் இருப்பதை மறைக்கவும் கூடாது.

**கேள்வி 06:- அக் குழந்தை எந்த அளவு சாப்பிட வேண்டும்?**

**பதில்:-** பெரும்பாலான குழந்தைகள் இரண்டுவேளை உணவிற்கு இடைப்பட்ட காலத்தில்தான் எதையாவது சாப்பிடுவதை வழக்கமாகக் கொண்டிருக்கின்றனர். ஒரு சில குழந்தைகள் ஒரு நாளைக்கு பலமுறை சாப்பிடுவர். குழந்தைக்கு எந்த அளவு உணவு கொடுக்கலாம் என்பதை மருத்துவரிடம் கலந்தாலோசித்து முடிபு செய்ய வேண்டும். காரணம் அக்குழந்தையின் இரத்தத்திலுள்ள சீனி அளவிற்கேற்ப அவர் முடிபு செய்வார். எனினும் குழந்தைகளுக்கு பன்னீர் (பால் கட்டி), வெண்ணெய், காய்ந்த திராட்சை, உலர்ந்த பழங்கள் முதலியவற்றை உண்ணக் கொடுக்கலாம். அவர்களுக்கு சமச்சீரான உணவு கொடுக்க வேண்டும்.

**கேள்வி 07:- நீரிழிவு நோயினால் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கு இன்சுலின் செலுத்துவது அவசியமா?**

**பதில்:-** குழந்தைகள் தங்கள் ஆரோக்




13

கியம் பற்றி அறியார். அதனால் நீரிழிவு நோயைக் கட்டுப்படுத்த அவர்களுக்கு இன்சுலின் செலுத்துவது அத்தியாவ்சியமாகும். குழந்தைகளுக்கு நீரிழிவு நோய் இருப்பது தெரிய வந்தால் ஆரம்பத்திலிருந்தே அவர்களுக்கு இன்சுலின் செலுத்த வேண்டும். இதைத் தவிர வேறு எந்த மருந்தையும் பயன்படுத்

## டாக்டர்.A.K.ஜிங்கான்

தக்கூடாது. இன்சுலின் ஒன்றி ன்னால் மட்டுமே அவர்களின் உயிரைக் காப்பாற்ற முடியும்.

**கேள்வி 08:- நீரிழிவு நோயினால் பாதிக்கப்பட்ட குழந்தைகள் உடற்பயிற்சி செய்யலாமா?**

**பதில்:-** அங்குமிங்கும் ஓடுவதினாலும் துள்ளிக் குதிப்பதினாலும் குழந்தைகள் தாமாகவே உடற்பயிற்சியில் ஈடுபடுகின்றனர். எனினும் நீரிழிவு நோயினால் பாதிக்கப்பட்ட குழந்தைகள் சைக்கிள் ஓட்டுதல், டென்னிஸ் ஆடுதல், காற்பந்தாட்டம், நீந்துதல் போன்ற பயிற்சிகளைச் செய்யலாம். இப்பயிற்சிகளினால் குழந்தையின் சீனி அளவு கட்டுப்படும். அதனால் விளையாடுதல் குழந்தைகளுக்கு அத்தியாவசியமானதாகும்.

**கேள்வி 09:- நீரிழிவு நோய் குழந்தைகள் துரித உணவு (Fast food) சாப்பிடலாமா?**


**பதில்:-** கூடியவரை துரித உணவை தவிர்ப்பது நல்லது. ஏனென்றால் துரித உணவை குழந்தைகள் விரும்பிச் சாப்பிடுவதால் அளவிற்கதிமாகச் சாப்பிட்டு விடுவார்கள்.

இதன் காரணமாக அவர்களின் உடல் பருத்து இரத்தத்தில் சீனி அளவு அதிகரித்து விடும். துரித உணவு என்று சொல்லப்படும் பர்கர், கோலா, பீட்ஸா, பேஸ்ட்ரி, பேட்டீஸ் மற்றும் அசைவ உணவுகளை நீரிழிவு நோயினால் பாதிக்கப்படாத குழந்தைகள் அளவிற்கதிகமாக சாப்பிட்டால் கூட அவர்களிடமும் நீரிழிவு நோய் தாக்கத்தின் அறிகுறிகள் தோன்றத் தொடங்கும்.

(தொடரும்)

# உடற்பயிற்சி செய்யும்போது கவனிக்க வேண்டிய விடயங்கள்

உடற்பயிற்சியில் இரண்டு வகை உண்டு. ஒன்று ஸ்டென்த்தனிங் டிரைனிங். மற்றையது கார்டியோ எக்சைஸ். தசைகளை வலுப் படுத்துவதற்கானது முதல் வகை உடற் பயிற்சி. உடலில் இருக்கும் கொழுப்பை அகற்றுவதற்காக செய்யும் பயிற்சிகள் இர




ண்டாவது வகையாகும். ட்ரெட்மில், சைக்கிளிங், ஓடுதல், நடனமாடுதல், ஏரோபிக்ஸ் செய்தல் போன்றவை கார்டியோ பயிற்சியாகும். இவைகளை தினமும் செய்தால் உடலில் இருக்கும் கொழுப்புக் குறையும். கட்டுடல் கிடைக்கும். தசையும் பலமாகும். இரண்டு வகை உடற் பயிற்சிகளையும் அவரவருக்கு தேவையான அளவில் தொடர்ந்து செய்து வர வேண்டும்.

உடல் பருமனாக இருப்பவர்கள் பரவாயில்லை. என் உடல் எடையும் குறைந்து விட்டது என்று சொல்லும் நிலையை அடைய வேண்டும் என்றால் குறைந்தது மூன்று மாதங்கள் ஆகும். காலை எழுந்தவுடன் சோம்பேறித்தனத்துடன் நாளை பார்த்துக் கொள்ளலாம் என்று நினைக்காமல் தினமும் உடற்பயிற்சிக்கு செல்ல வேண்டும். திருமணத்திற்கு இன்னும் ஒரு மாதம் தான் இருக்கிறது என்ற நிலையில் இருப்பவர்களும் உடற் பயிற்சி மேற்கொண்டால் அந்த அளவிற்கு அவர்கள் உடலில் நல்ல மாற்றம் ஏற்படத்தான் செய்யும்.

சிலர் ஒல்லியான உடல்வாகுடன் காணப்படுவார்கள். அவர்கள் தங்கள் உடல் எடையை சற்று அதிகரித்தால் நல்லது என்ற எண்ணம் ஏற்படும். அப்படிப்பட்டவர்கள் வெயிட் டிரைனிங் போன்ற கண்டிசனிங் பயிற்சிகளை பெற வேண்டும். நிபுணரின் ஆலோசனையை பெற்று அதற்கு தகுந்தபடி உணவையும் உண்டால் சில மாதங்கள் அவர்கள் உடல் பூசி மெழுகினாற் போல ஆகிவிடும்.

பருமனான உடல் எடையை குறைக்க பயிற்சி பெறும் போது சிலருக்கு இரண்டு மாதத்திலே நல்ல மாற்றங்கள் தெரிந்து விடும். அதனால் தானும் இரண்டு மாதங்களுக்கு முன்பு ஜிம்முக்கு போனால்போதும் என்று நினைத்து விடக்கூடாது. ஒவ்வொருவர் உடலுக்கு தக்கபடி பயிற்சி பெறவேண்டும். அவரவர் உடல்வாகு தகுந்தபடியே உடலில் மாற்றங்கள் ஏற்படும்.

புதிதாக உடற்பயிற்சி செய்பவர்கள் சுய பயிற்சிகளை தவிர்த்து ஜிம்முக்கு சென்று பயிற்சியாளரின் வழிகாட்டுதலோடு உடற் பயிற்சிகளை மேற்கொள்ள வேண்டும். அது



தான் சரியான வழிமுறையாக இருக்கும்.


ஜிம்முக்கு போகும் வாய்ப்பு கிடைக்காதவர்கள் ட்ரெட்மில், சைக்கிளினிங் போன்ற பயிற்சி கருவிகளை வாங்கி வீட்டிலே வைத்து பயிற்சி மேற்கொள்ளலாம்.

மாடிப்படிகளில் ஏறி இறங்குவது, ஸ்கிப்பிங் செய்வது போன்றவைகளும் நல்ல உடற் பயிற்சிகளே. ஒரு லீற்றர் தண்ணீர் போத்தல்களில் இரண்டு வாங்கி இரண்டு கைகளிலுமாக பிடித்துக் கொண்டு ஸ்டென்த் எக்ஸ்சைஸ் செய்வதும் நல்ல பலன்தரும்.

ஜிம் தேர்ந்தெடுக்கும் போது கவனம் தேவை. நல்ல பயிற்சியாளர், தரமான பயிற்சி கருவிகள் இருக்க வேண்டும். தேவையான வெளிச்சமும் காற்றோட்டமும் இருப்பது நல்லது. மனதுக்கு உற்சாகமும் மேலதிக சக்தியும் கிடைக்கும் விதத்தில் ஜிம் அமைந்திருக்க வேண்டும்.

திருமணம் நிச்சயிக்கப்பட்ட பின்பு மணமகனும் மணமகளும் பிசியாகி விடுவார்கள். அதனால் அவர்கள் காலை முழுவதும் வேலை இருக்கிறது. மாலை நேரத்தில் வந்து பயிற்சி பெறுகிறோம் என்று தள்ளிப்போடக்கூடாது. அதிகாலையில் பயிற்சி பெறுவது சிறந்தது. உடற்பயிற்சிக்கு பின்னர்தான் ஏனைய வேலைகள் என்று அதற்கு முக்கியத்துவம் கொடுங்கள். காலையில் பயிற்சி செய்தால் அன்று முழுவதும் உடல் உற்சாகமாக இருக்கும்.

பத்து நிமிடம் முதல் நாள் பயிற்சி பெற்று விட்டு பின்பு நாளுக்கு நாள் நேரத்தை அதிகரிக்க வேண்டும். வாரத்தில் ஐந்து, ஆறு




நாட்கள் ஒரு மணி நேரத்திற்கு குறையாத அளவிற்கு பயிற்சி பெற வேண்டும். கார்டியோ பயிற்சி பெறும் போது முதல் ஐந்து நிமிடங்கள் உடலில் உள்ள சக்தி வெளியேறும். அதன் பின்னர்தான் உடலில் அதிகமாக இருக்கும் கொழுப்பின் சக்தி செலவாக தொடங்கும். அவர்கள் தினமும் ஒன்றே கால் மணி நேரம் உடற் பயிற்சி மேற்கொள்வது நல்லது.

# இரண்டாம் உலக யுத்தம்

## ஒரு மீள்பார்வை 169

## பேர்லினின் வீழ்ச்சியும் பாசிச ஜேர்மனி நிபந்தனையின்றி சரணடைதலும்



ஜேர்மனியின் இளவயது (16 வயது) இராணுவத்தினன் அவனது சாதனைக்காக அதிகாரியால் கைகொடுத்து பாராட்டப்படுகிறான்


ஜேர்மனியின் இராணுவத் தலைமை, பாசிச எதிர்ப்பு கூட்டணியில் பிளவேற்படுத்தவும் பிரிட்டன், அமெரிக்காவுடன் தனி சமாதான உடன்படிக்கை செய்துகொள்ளவும் முயன்றது. இந்நோக்கத்தோடு இது ஆங்கிலேயர்களுடனும் அமெரிக்கர்களுடனும் பன்முறை பேச்சுவார்த்தைகளை நடத்தியது. மேற்குப் போர்முனையிலிருந்து பெரும் சக்திகளை கிழக்குப் போர்முனைக்கு அனுப்பி மேற்குப் போர்முனையில் எதிர்ப்பைத் தளர்த்தியது. பிரிட்டிஷ்- அமெரிக்கத் துருப்புகளுக்கு விரைவாக முன்னேறும் வாய்ப்பு கிட்டியது. முன்னர் மெதுவாகச் செயற்பட்டதற்கு மாறாக அவை மிக அவசரமாக செயற்படத் தொடங்கின. ஜேர்மனிய ஏபாதிபத்தியம் முழுவதுமாக முறியடிக்கப்படுவதிலிருந்து காப்பாற்றும் பொருட்டு அமெரிக்க, பிரிட்டிஷ் ஏகாதிபத்திய வாதிகள் இயன்றவரை அதிகமாக ஜேர்மனியப் பரப்பை பிடிக்கவும் பெர்லினைக் கைப்பற்றவும் பாடுபட்டனர். ஆனால், இத்திட்டங்கள் நிறைவேறவில்லை. ஓல்தென் புர்க்- மாக்தெபுர்க்- டொஸ்ஸாவு- நியூரென்பர்க் எல்லைக் கோட்டை நேச நாட்டினர் அடைந்தபோது சோவியத் துருப்புகள் பெர்லின் மீதான தாக்குதலில் இறங்கியிருந்தன.

சோவியத் துருப்புகளின் பனிக்கால தாக்குதலின் போதே பெர்லின் நடவடிக்கையின் திட்டம் உயர்மட்ட பிரதானப் படைத்தலைமையால் தீட்டப்பட்டது. ஐரோப்பாவில் உருவாகிய இராணுவ- அரசியல் நிலவரத்தை பன்முகக் கண்ணோட்டத்தில் பகுப்பாய்வு செய்த உயர்மட்ட பிரதானப் படைத் தலைமை, நடவடிக்கையின் இலட்சியத்தை வரையறுத்தது, சேனைகளின் படைத்தலைமையகங்கள் தயாரித்த திட்டங்களை ஆராய்ந்தது.

அரசுத் தற்காப்புக் கமிட்டியின் உறுப்பினர்களும் 1-வது பைலோருஷ்ய சேனை மற்றும் 1-வது உக்ரேனிய சேனையின் தளபதிகளும் விரிவுபடுத்தப்பட்ட கூட்டத்தில் ஏப்ரல் ஆரம்பத்தில் இறுதி தாக்குதல் திட்டம் ஆமோதிக்கப்பட்டது. பெர்லின் தாக்குதல் திட்டம் உயர்மட்ட பிரதான படைத் தலைமை, உயர்மட்ட படைத்தலைமையகம், தளபதிகள் மற்றும் சேனைப் படைத்தலைமையகங்களின் கூட்டுப் படைப்பின் முடிவாக விளங்கியது.

1-வது, 2-வது பைலோருஷ்ய, 1-வது உக்ரேனிய சேனைகளின் சக்திகளைக் கொண்டு எதிரியின் பெர்லின் படைத்திரட்டு முழுவதையும் சுற்றி வளைத்து அதேநேரத்தில் அதை சிறுசிறு பகுதிகளாகப் பிளந்து ஒவ்வொன்றையும் தனித்தனியாக ஒழிப்பதுதான் நடவடிக்கையின் திட்டமாக இருந்தது.

சோவியத்படை பேர்லின்மீது ஆட்லரித் தாக்குதலைத் தொடக்கியுள்ளபோது



## பாசிச ஜேர்மனியின் முறியடிப்பு முற்றுப்பெறுதல்



ஜேர்மனியப்படை எதிரி இலக்குமீது ஆட்லரியால் நேரடியாகத் தாக்குகிறது

பால்டிக் கடற்படை, கடலின் கரையோரமாக 2-வது பைலோருஷ்ய சேனையின் தாக்குதலுக்கு உதவி, லியபாயாவிலிருந்து ரஸ்தொக் வரை கடல் போக்குவரத்து மார்க்கங்களின் மீது விமானப்படை, நீர்மூழ்கிக் கப்பல்களைக் கொண்டு தாக்குதல்களை நடத்தியது. இந்நடவடிக்கையின் 1-வது பைலோருஷ்ய சேனைக்கு கட்டுப்பட்ட தினேப்பர் இராணுவப்ளீட்டுக்கு, தற்காப்பைப் பிளந்து செல்வதில் தரைப்படைத் துருப்புகளுக்கு உதவும்படியும் ஓதெர் ஆற்றைக் கடந்து செல்லவும் அதில் கண்ணிவெடி எதிர்ப்பு தற்காப்பிற்கும் வகை செய்யும்படி கட்டளையிடப் பட்டது. மேலும் 1-வது பைலோருஷ்ய சேனையின் மண்டலத்தில் தொலைதூர விமானப்படையின் 18-வது வான் படையைப் பயன்படுத்தவும் திட்டமிட்டப்பட்டது.

பெர்லின் நடவடிக்கையை வெற்றிகரமாக நிறைவேற்றுவதற்காக உயர்மட்ட பிரதான படைத் தலைமை தனது சேம இருப்புகளிலிருந்து கணிசமான அளவு சக்திகளையும் சாதனங்களையும் அளித்து சேனைகளைப் பலப்படுத்தியது. இவற்றின் பயனாய் நடவடிக்கையின் ஆரம்பத்தில் மூன்று சேனைகளிலுமாகச் சேர்த்து 25 இலட்சம் பேர்கள் இருந்தனர். இவர்களிடம் 42 ஆயிரம் சாதாரண மற்றும் மாரடர் பீரங்கிகளும் 7500 போர் விமானங்களும் 6250 டாங்கிகளும் இருந்தன. இவ்வளவு அதிக எண்ணிக்கையில் சக்திகளும் சாதனங்களும் இதுவரை ஒரு நடவடிக்கையிலும் ஈடுபடுத்தப்படவில்லை. சோவியத் துருப்புகள் எதிரியைக் கணிசமான அளவு விஞ்சி நின்றன.

ஏப்ரல் 16 ஆம் திகதி அதிகாலை 5மணிக்கு, இன்னமும் இருட்டு விலகாதபோது பீரங்கிப்படை மற்றும் விமானப்படையின் பூர்வாங்க தாக்குதலும், 20 நிமிடங்களுக்குப்பின் பொதுத் தாக்குதலும் ஆரம்பமாயின. நடவடிக்கையின் முதல் நாளன்று முடிவில் எதிரியின் தற்காப்பின் பிரதான மண்டலத்தை முற்றிலுமாகப் பிளந்து இரண்டாவது மண்டலத்தை அடைய முடிந்தது.

அடுத்த மூன்று நாட்களில் 1-வது பைலோருஷ்ய சேனையின் துருப்புகள் எதிரியின் ஏராளமான பதிலடிகளை முறியடித்து 30-40 கி.மீ. ஆழத்திற்கு ஓதெர் தற்காப்பு எல்லை முழுவதையும் முற்றிலுமாகப் பிளந்து சென்றன.

1-வது உக்ரேனிய சேனையின் தாக்குதல் சிறிது மாறுபட்டதாயிருந்தது. காலையில் பீரங்கிப்படை, விமானப்படையின் பூர்வாங்கத் தாக்குதலுக்குப்பின் முதல் படை வரிசையின் யூனிட்டுகள் நேய்சே ஆற்றைக் கடந்து அதன் எதிர் கரையிலிருந்த தாக்குமுனையைப் பிடித்தன, நாளின் முடிவில் எதிரி தற்காப்பின் பிரதான மண்டலத்தை பிளந்தன. அடுத்த நாளன்று, ஏப்ரல் 17 ஆம் திகதி டாங்கிப் படைகள் உட்பட முக்கியப் படைத் திரட்டின் துருப்புகள் எதிரி சேமப் படைகளின் பதிலடிகளை முறியடித்து, இரண்டாவது மண்டலத்தைப் பிளந்தன. இரண்டு நாட்களில் 18 கி.மீ. ஆழத்திற்கு முன்னேறின. எதிரி ஷ்பிரேயே ஆற்றின் பின்னிருந்த மூன்றாவது தற்காப்பு மண்டலத்திற்குப் பின்வாங்கத் தொடங்கினான்.

(தொடரும்)

# அரசாங்கம் 13 பிளஸ் தீர்வை வழங்கப்போவது எப்போது?

## ஏமாற்று வித்தையா? கேள்வி எழுப்புகிறார் ஜயலத் எம்.பி

(கொழும்பு)

**இந்தியாவுடன் நட்புறவை வலுப்படுத்த வேண்டும் என்ற ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் கருத்து உண்மையானால் 13 ஆவது திருத்தத்தை அமுல்படுத்த வேண்டும். இல்லாவிட்டால் மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப் பயன்படுத்தி அதனை இரத்துச் செய்ய வேண்டும் என்று ஐக்கிய தேசியக் கட்சி வலியுறுத்தியுள்ளது.**



கொழும்பில் எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கருத்து தெரிவித்த போதே ஐ.தே.க.வின் பிரதிச் செயலாளரும் எம்.பி.யுமான ஜயலத் ஜயவர்த்தன மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

அதனை விடுத்து இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்குடன் இணைந்து கூட்டறிக்கை விடுப்பதால் பலனில்லை.

பிரேசில் நாட்டில் இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கை சந்தித்து ஜனாதிப்தி மஹிந்த ராஜபக்ஷ பேச்சுவார்த்தைகளை நடத்தியுள்ளதோடு இரு நாட்டுத் தலைவர்களும் கூட்டறிக்கை ஒன்றையும் வெளியிட்டுள்ளனர்.

இதில் இரு நாடுகளுக்கிடையேயான நட்புறவை வலுப்படுத்துவதோடு அதற்கு பங்கம் ஏற்படாதவிடத்தில் நகர்வுகள் முன்னெடுக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது உண்மையானால் அரசாங்கம் 13 ஆவது திருத்தத்தை அமுல்படுத்தி தேசிய பிரச்சினைக்கு தீர்வு காண வேண்டும்.

தேசியப்பிரச்சினை தீர்வுக்கு 13 ஆவது திருத்தம் அடிப்படையாக இருக்கின்றதென ஜனாதிபதி தெரிவித்திருந்தார்.

அதேபோன்று ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியும் இதனை ஏற்றுக்கொண்டுள்ளது.

இந்தியாவிடம் பலமுறை 13 அல்ல அதற்கு அப்பால் சென்று 13 பிளஸ் தீர்வை வழங்கவும் அரசாங்கம் தயாராக உள்ளதாக உறுதி மொழிகள் வழங்கப்பட்டன.

ஆனால் யுத்தம் முடிந்து 3 வருடங்கள் கழிந்து விட்ட போதும் இன்று வரை தமிழ் மக்களுக்கு எதுவும் வழங்கப்படவில்லை. வெறுமனே உறுதிமொழிகள் மட்டுமே வழங்கப்படுகின்றது.

எனவே உடனடியாக அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தத்தை அமுல் செய்து தேசியப் பிரச்சினைக்கு தீர்வு காணப்பட வேண்டும். இல்லாவிட்டால் அரசாங்கத்திற்குள்ள மூன்றிலிரண்டு பெரும்பான்மையைப் பயன்படுத்தி 13 ஆவது திருத்தத்தை அரசியலமைப்பில் இருந்து நீக்கிவிட வேண்டும்.

அதை விடுத்து உறுதிமொழிகளை வழங்கி இந்தியாவை ஏமாற்றும் வித்தையை கைவிட வேண்டும் என்றார். (அ-2)

## வறியமக்களுக்கான அரச காணிகளை அரசியல்வாதிகளும் கொள்ளையிடுகின்றனர்

### காணி அமைச்சர் குற்றச்சாட்டு

பிறந்த மண்ணில் ஒரு அங்குலம் நிலத்திற்கும் உரிமையற்றவர்களாக இருக்கும் வறிய மக்களுக்கு பகிர்ந்தளிப்பதற்காக வைக்கப்பட்டுள்ள அரசாங்க காணிகளை அதிகாரிகளும் பிரதேச அரசியல்வாதிகளும் இணைந்து கொள்ளையிட ஆரம்பித்துள்ளதாக காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சர் ஜனக பண்டார தென்னக்கோன் தெரிவித்துள்ளார்.

காணிகள் இல்லாத குடும்பங்களுக்கு தலா ஆயிரம் பேர்ச்சஸ் காணிகளை வழங்க ஒதுக்கப்பட்டிருந்த காணியில் 100 பேர்ச்சஸ் காணியை பாதுகாக்க வேண்டிய பிரதேச செயலாளர் அலுவலகத்தின் உயர் அதிகாரியும் காணி தொடர்பான பணிகளைச் செய்து வரும் அதிகாரிகள் சிலரும் இணைந்து தமது உறவினர், நண்பர்களின் பெயர்களில் அந்தக் காணியை பதிவு செய்து கொண்டுள்ளனர்.

பிரதேச ரீதியாக இடம்பெறும் இவ்வாறான காணிக்கொள்ளைகள் தொடர்பிலான சரியான தகவல்கள் காணி அமைச்சுக்குக் கிடைப்பதில்லை. இதனால் இவ்வாறு சட்டவிரோதமாக அரச காணிகளை எவரேனும் கையகப்படுத்தியிருந்தால் அது தொடர்பான தகவல்களை அமைச்சுக்கு வழங்குமாறும் அமைச்சர் பொதுமக்களை கேட்டுக்கொண்டுள்ளார்.

அரசகாணிகளை கைப்பற்றும் நபர்களுக்கு எதிராக தகுதி, தராதரம் பாராது கடும் சட்டநடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அரசியல்வாதிகள் பலவந்தமாகப் பிடித்துவைத்துள்ள அரசாங்கத்திற்குச் சொந்தமான பல காணிகளை மீண்டும் கையகப்படுத்தும் நடவடிக்கைகளை அரசாங்கம் ஆரம்பித்துள்ளதாகவும் அமைச்சர் மேலும் கூறியுள்ளார். (அ-2)

## திருமுறிகண்டி போராட்டத்திற்கு லெனினிசக் கட்சியும் ஆதரவு

(கொழும்பு)

திருமுறிகண்டியில் மக்களது மீள்குடியமர்வை வலியுறுத்தியும் வடக்குக் கிழக்கில் இடம்பெற்று வரும் நிலப்பறிப்பு, நில ஆக்கிரமிப்பை நிறுத்தக்கோரியும் சிறைகளில் இருந்து வரும் அரசியல் கைதிகளை விடுதலை செய்ய வலியுறுத்தியும் காணாமல் போனோர் பற்றிய விபரங்களை வெளியிடுமாறும் கோரி இன்று செவ்வாய்க்கிழமை நடைபெறவுள்ள கவனயீர்ப்புப் போராட்டத்திற்கு புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சி தனது பூரண ஆதரவை தெரிவிப்பதுடன் மேற்படி போராட்டத்தில் கலந்தும் கொள்கின்றது என தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சியின் பொதுச் செயலாளர் சி.கா. செந்திவேல் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையில்,

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு அழைப்பு விடுத்துள்ள மேற்படி கவனயீர்ப்பு போராட்டத்திற்கான கோரிக்கைகள் முற்றிலும் நியாயமானவைகளாகும். மீளக் குடியேறிய மக்களும் தமது சொந்த இடங்களுக்கு செல்ல விடாது தடுக்கப்படும் மக்களும் நாளாந்தம் பல்வேறு பிரச்சினைகளை எதிர்நோக்கியவாறு வாழ்ந்து வருகின்றனர்.

எனவே இவற்றுக்குத் தீர்வு காண்பதற்கு ஐக்கியப்பட்ட வெகுஜனப் போராட்டங்களும் மக்களது பங்களிப்புகளும் அவசியமானதாகும் என்றார். (அ-2)

## தமிழக மீனவர்களை பாதுகாக்க வேண்டும்- கருணாநிதி

தமிழக மீனவர்களை பாதுகாப்பதற்கு இந்திய மத்திய அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர் மு.கருணாநிதி தெரிவித்துள்ளார்.

கச்சதீவுப்பகுதியில் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபடும் வெளிநாட்டு மீனவர்களுக்கு 20 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்பட வேண்டும் என அண்மையில் இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கருத்து வெளியிட்டிருந்தார். ஜனாதிபதியின் இந்தக் கருத்துக்கு பதிலளிக்கும் வகையில் கருணாநிதி இதனைச் சுட்டிக்காட்டியுள்ளார். 1974 ஆம் ஆண்டு ஏற்படுத்திக்கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தின் அடிப்படையில் கச்சதீவு இலங்கைக்கு வழங்கப்பட்டது.

அத்துமீறல்களில் ஈடுபடும் மீனவர்களுக்கு சிறைத்தண்டனை விதிக்கப்பட வேண்டும் என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ குறிப்பிட்ட போதிலும் தமிழக மீனவர்களை நேரடியாக குறிப்பிட்டிருக்கவில்லை. எனினும் கச்சதீவில் மீன்பிடியில் ஈடுபட்ட அடிக்கடி தமிழக மீனவர்கள் மட்டுமே கைது செய்யப்படுவதாக கருணாநிதி சுட்டிக்காட்டியுள்ளார்.

எனவே இந்த அபாயத்தில் இருந்து தமிழக மீனவர்களை பாதுகாக்க வேண்டியது அரசாங்கத்தின் கடமையாகும் என அவர் தெரிவித்துள்ளார். (அ-2)





முல்லைத்தீவு மாஞ்சோலை பிரதான வைத்தியசாலையின் அவசர சத்திரசிகிச்சைப்பிரிவின் நிர்மாணப் பணிகள் அண்மையில் ஆரம்பித்து வைக்கப்பட்டன. இந்நிகழ்வில் தனியார் போக்குவரத்து அமைச்சர் சி.பி. ரத்நாயக்க கட்டடத்திற்கான அடிக்கல்லினை நாட்டுவதையும் கைத்தொழில் வணிகத்துறை அமைச்சரும் வன்னி மாவட்ட அபிவிருத்திக்குழுவின் தலைவருமான றிசாத் பதியுதீன் நினைவுக் கல்லினை திரைநீக்கம் செய்து வைப்பதையும் படங்களில் காணலாம்.

# சம்பூர் அனல்மின் திட்டங்களுக்கு முட்டுக்கட்டை போடுகிறது அரசு

## எச்சரிக்கை விடுக்க விரைகிறாராம் தேசிய பாதுகாப்பு ஆலோசகர்



(கொழும்பு)

**பலாலி விமான நிலைய அபிவிருத்திப் பணியை இந்தியாவுக்கு வழங்குவதில்லை என்று இலங்கை அரசாங்கம் முடிபு செய்துள்ளதாக கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.**

இலங்கையில் போர் முடிவுக்கு வந்த பின்னர் காங்கேசன்துறை துறைமுக அபிவிருத்தி உள்ளிட்ட பல திட்டங்களுக்கு இந்தியா உதவ முன் வந்தது.

மேலதிகமாக பலாலி விமான நிலையத்தை நவீனமயப்படுத்த உதவுவதாகவும் இந்தியா உறுதியளித்திருந்தது. ஆனால் அதற்கான உடன்பாடு எதுவும் கையெழுத்திடப்படவில்லை.

இந் நிலையில் பலாலி விமான நிலைய அபிவிருத்திப் பணிகளை இந்தியாவிடம் ஒப்படைக்கும் முடிபை இலங்கை அரசாங்கம் கைவிட்டுள்ளதாகவும் இந்தியாவின் உதவியின்றி அதை அபிவிருத்தி செய்ய முடிபு செய்யப்பட்டுள்ளதாக குடியியல் விமானப் போக்குவரத்து அமைச்சர் பிரியங்கர ஜெயரட்ன இதனை உறுதிப்படுத்தியுள்ளார்.

பலாலி விமான நிலைய விரிவாக்கத் திட்டத்தை குடியியல் விமானப் போக்குவரத்து அமைச்சே மேற்கொள்ளவுள்ளது. இது வணிக மற்றும் இலங்கை விமானப்படையின் தேவைகளுக்குப் பயன்படுத்தப்படும்.

நாங்கள் இலங்கை விமானப்படையுடன் இணைந்து இந்த விமான நிலையத்தை பயன்படுத்தத் திட்டமிட்டுள்ளோம். இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான உறவுகளில் அண்மையில் ஏற்பட்டுள்ள விரிசல் நிலையே இலங்கை அரசின் இந்த முடிவுக்குக் காரணமாக இருக்கலாம் என்று கருதப்படுகிறது.

சம்பூர் அனல் மின் நிலையத் திட்டம் உள்ளிட்ட இந்தியாவின் திட்டங்களுக்கு இலங்கை அரசாங்கம் முட்டுக்கட்டை போட்டு வருகிறது.

இது இந்தியாவுக்கு கடும் ஆத்திரத்தை ஏற்படுத்தியுள்ள நிலையில் இதுபற்றி இலங்கை அரசுடன் கடும் தொனியில் பேச இந்திய தேசிய பாதுகாப்பு ஆலோசகர் சிவ்சங்கர் மேனன் கொழும்பு வரவுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-2)

# படகில் சிக்கியவர்களை மீட்கும் பணி இடைநிறுத்தம்

## அவுஸ்திரேலியா அறிவிப்பு

கிறிஸ்மஸ் தீவுக்கு அருகில் கடந்த வாரம் முதல் மேற்கொள்ளப்பட்ட மீட்பு நடவடிக்கைகளை அவுஸ்திரேலியா நேற்று முன்தினம் இடைநிறுத்தியுள்ளது.

மேலும் யாரையும் உயிருடன் மீட்க முடியாது என்று தெரிவித்து இந்த நடவடிக்கைகள் இடைநிறுத்தப்பட்டுள்ளன. கடந்த வியாழக்கிழமை ,ஒருவர் இறுதியாக உயிருடன் மீட்கப்பட்டிருந்தார். இதுவரையில் ஆறு சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன.

90 இற்கும் அதிகமானவர்கள் காணாமல் போய் இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் படகில் 200 இற்கும் அதிகமானவர்கள் பயணித்திருக்கலாம் என கருதப்படுகின்ற போதும் சரியான எண்ணிக்கை யாருக்கும் தெரியவில்லை.

இதேவேளை இந்த கப்பல் இலங்கையில் இருந்தே புறப்பட்டதாகவும் ஆப்கானிஸ்தான், பாகிஸ்தான் மற்றும் இந்தோனேசியா போன்ற நாடுகளின் அகதிகள் இதில் அதிகமாக இருந்ததாகவும் அவுஸ்திரேலியஅதிகாரிகள் தெரிவித்துள்ளனர். எனினும் இதில் இலங்கையர்கள் யாரும் இருந்ததாக அவர்கள் தெரிவிக்கவில்லை. (அ-2)

# அரசியல் தேவைகளுக்காக தமிழினி விடுவிக்கப்படவில்லை

## பி.பி.சிக்கு கருணா தெரிவிப்பு

(கொழும்பு)

அரசாங்கத்தின் அரசியல் தேவைகளுக்காக தமிழினி விடுதலை செய்யப்படுவதாக கூறப்படுவதில் உண்மை இல்லையென்றும் இலங்கை அரசு தனது வெளிப்படைத் தன்மையை சர்வதேசத்திற்கு காட்டும் நடவடிக்கையே அது என்றும் மீள்குடியேற்றத்துறை பிரதியமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் தெரிவித்துள்ளார்.

தமிழினிக்கு அளிக்கப்படும் புனர்வாழ்வை ஏனைய அரசியல் கைதிகளுக்கும் அளிக்காமல் இருக்கும் அரசின் அணுகுமுறைக்கு அரசியல் நோக்கங்கள்தான் காரணம் என்று மனோகணேசன் தெரிவித்த கருத்துத் தொடர்பில் பிபிசிக்கு கருத்து தெரிவிக்கையிலே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும்தெரிவிக்கையில்,

விடுதலைப்புலிகளின் முக்கிய தாக்குதல் அணிகளில் அங்கம் வகித்த ஆயிரக்கணக்கான முன்னாள் போராளிகள் கூட புனர்வாழ்வுக்கு பின்னர் விடுவிக்கப்பட்டிருக்கின்ற போதிலும் 'விடுதலைப்புலிகளுக்கு சிறு உதவிகளை செய்தவர்களும் சந்தேக நபர்களும் சிறையில் வாடுவது நியாயமில்லை.

அரசு அமைக்கவுள்ள மூன்று சிறப்பு நீதி மன்றங்கள் ஊடாக இந்த கைதிகளின் பிரச்சினை விரைவில் தீர்க்கப்படும் என்று நம்புவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (அ-2)

# உங்களுக்கு தெரியுமா? போட்டி முடிவுகள்

(மல்லாவி)

துணுக்காய் கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலை மாணவர்களுக்கிடையே நடைபெற்ற உங்களுக்கு தெரியுமா? போட்டியில் வலய மட்டத்தில் வெற்றியீட்டிய மாணவர்களின் விபரங்களை துணுக்காய் கல்வி வலய முகாமைத்துவ பிரதிக்கல்வி பணிப்பாளர் கு.விஜயபாலா அறிவித்துள்ளார்.

இப்போட்டியில் வெற்றியீட்டிய மாணவர்களின் பெயர் விபரம் வருமாறு, அ.சகுந்தலா (மு/மல்லாவி மத்திய கல்லூரி), உ.சபித்தா (மு/யோகபுரம் மகா வித்தியாலயம்), ஜே.தர்மிகன் (மு/மல்லாவி மத்திய கல்லூரி), ச.சுஜிவிதா (மு/மல்லாவி மத்திய கல்லூரி), மா.கிருபாலினி (மு/மல்லாவி மத்திய கல்லூரி), அ.கஜந்தன் (மு/கற்சிலைமடு அ.த.க.பாடசாலை), மு.சுலக்ஷன் (மு/பாளிநகர் மகா வித்தியாலயம்). (அ-3-15)



எலைன்ஸ் காப்புறுதி நிறுவனத்தினால் சங்கானை Butter Fly International School இற்குரிய இழப்பீட்டிற்கான நட்ட ஈட்டுத் தொகையினை யாழ். கிளை முகாமையாளர் கே.சிறிராம் வழங்குவதையும் அருகில் சந்தைப்படுத்தல் முகாமையாளர் எஸ். சுகந்தன் மற்றும் எம். கஜமுகன் ஆகியோர் நிற்பதனையும் படத்தில் காணலாம்.

*(படம்:- புன்னாலைக்கட்டுவன் செய்தியாளர்)*

# வடமாகாண சதுரங்க போட்டி முடிவுகள்

(பூந்தோட்டம்)

வடமாகாண பாடசாலைகளுக்கிடையிலான சதுரங்க போட்டிகள் அண்மையில் மன்/சித்திவிநாயகர் இந்துக்கல்லூரியில் நடைபெற்றது.

இப்போட்டியின் முடிபுகளை வடமாகாண கல்வி திணைக்களத்தின் மாணவர் அபிவிருத்தி உதவிக் கல்விப்பணிப்பாளர் கே.சத்தியபாலன் அறிவித்துள்ளார்.

இதில் முதல் மூன்று இடங்களையும் பெற்ற பாடசாலை விபரம் வருமாறு,

**ஆண்கள் பிரிவு**

**19 வயதுக்குட்பட்டோர்**

(யா/பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி), (யா/இந்துக் கல்லூரி), (யா/தெல்லிப்பழை மகாஜனா கல்லூரி)

**15 வயதுக்குட்பட்டோர்**

(யா/பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி), (யா/இந்துக் கல்லூரி), (கிளிநொச்சி மகா வித்தியாலயம்)

**பெண்கள் பிரிவு**

**19 வயதுக்குட்பட்டோர்**

(யா/இந்து மகளிர் கல்லூரி), (யா/பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாட சாலை), (யா/தெல்லிப்பழை மகாஜனா கல்லூரி)

**15 வயதுக்குட்பட்டோர்**

(யா/பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை), (யா/உடுப்பிட்டி பெண்கள் கல்லூரி), (யா/வடமத்திய பெண்கள் கல்லூரி)

(அ-9-266)

# உலகின் புதிய ஒழுங்கில் மண்மீட்புப் போராட்டங்கள்

உலகின் புதிய ஒழுங்கில் நிலத்திற்காக மக்கள் போராடிக் கொண்டிருக்கிறார்கள். மூலவளச் சுரண்டலுக்காக, வர்த்தக சந்தைக்காக வல்லரசுகளும் முட்டி மோதிக்கொண்டிருக்கின்றன. பெரும் தேசிய இனவாத ஆட்சியாளர்களும் தமது இறைமையை நிலை நிறுத்திக்கொள்ள பூர்வீக தேசிய இனங்களின் நிலங்களை ஆக்கிரமிக்கின்றார்கள்.

அகண்ட பார்வையில் உலகப் பொருளாதாரத்தின் 80 சத வீதத்தைக் கொண்ட முதலாளித்துவ முறைமை நில ஆக்கிரமிப்பின் பின்புலத்தில் நின்று செயற்படுவது தெரிகிறது. தேசிய பாதுகாப்பிற்கும் மூலவளச் சுரண்டலிற்கும் தென் சீனக் கடலில் தீவுகளுக்கு உரிமை கோரும் சீனா, வியட்நாம், பிலிப்பைன்ஸ் மற்றும் ஜப்பான் நாடுகளைக் காணலாம். மலைவாழ் மக்களை அவர்களது பிரதேசத்திலிருந்து விரட்டியடித்து கனிமவள சுரண்டலிற்காக அரசோடு கைகோர்க்கும் பன்னாட்டுக் கம்பனிகளை இந்தியாவின் மத்திய பகுதியில் பார்க்கலாம். திருமலைத் துறைமுகத்தில் முதலீடு செய்யும் பல் தேசியக் கம்பனிகளின் நகர்வு, சம்பூர் மண்ணை ஆக்கிரமிக்கிறது.

முதலீட்டு ஆதிக்கம் நாட்டின் பொருளாதாரத்தில் செல்வாக்குச் செலுத்தும் அதேவேளை ஒடுக்குமுறைக்கு உள்ளாகும் தேசிய இனங்களின் நிலங்களையும் கபளீகரம் செய்கிறது. மனித உரிமை மீறல் குறித்து பேசும் வல்லரசாளர்கள், நில ஆக்கிரமிப்புக் குறித்து வாய் திறப்பதில்லை.

முதலில் பிராந்தியங்களின் ஆதிக்கத்தினூடாக புதிய உலக ஒழுங்கினை தமக்கேற்றவாறு கட்டமைக்க முயலும் வல்லரசு சக்திகள் குறித்தான வரலாற்று ரீதியிலான படிமுறை வளர்ச்சியை அவதானிக்க வேண்டும்.

ஆரம்பத்தில் கைத்தொழில் புரட்சி மூலம் முதலாளித்துவத்தின் பண்புகள், உலகளாவிய ரீதியில் விரிவடையத் தொடங்கின. வங்கி முறைமையின் பரிணாம வளர்ச்சி, தகவல் தொழில் நுட்பத்தினூடாக நிதியியல் கட்டமைப்புகளின் பரவலாக்கம், கைத்தொழில் வளர்ச்சி என்பன முதலாளித்துவத்தை அடுத்த கட்ட நிலைக்கு உயர்த்தியுள்ளன. அத்தோடு இயற்கை மூலவளச் சுரண்டலுக்கான தேவையை கைத்தொழில் புரட்சி ஏற்படுத்தியதெனலாம்.

கைத்தொழில் மயமாக்கல், புதிய தொழில் நுட்பத்தின் அவசியத்தை உருவாக்கி, முன்னெப்பொழுதும் இல்லாதவாறு உலக சந்தையின் கூட்டிணைவினை முன்னிறுத்தியது.

இதில் காலனித்துவ சக்திகளின் பிராந்திய ஆதிக்கத்தை இரண்டாம் உலகப்போருக்கு முன்னதாக கண்டோம். தற்போதைய உலக ஒழுங்கில்

**நன்றி: இணையம்**

அபிவிருத்தி அடைந்த நாடுகளுக்கும் அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளுக்குமிடையே நிலவும் சந்தை மற்றும் பிராந்திய ஆதிக்கப்போட்டியே முதன்மை பெறுகிறது.

ஜீ20 என்கிற கூட்டமைப்பில் இவை ஒரே மேடையில் அமர்ந்து பேசினாலும் பிரிக்ஸ், ஆசியான், சாங்காய் கூட்டிணைவு ஒன்றியம் போன்ற கூட்டணிகளும் உலக ஒழுங்கின் புதிய வரவாக இருக்கிறது.

மத்திய கிழக்கில் மோதும் வல்லரசுகள், ஆசியாவிலும் முரண்பட ஆரம்பித்திருப்பதற்கு மேற்குலகப் பொருளாதாரத்தின் பின்னடைவு முக்கிய காரணி என்று அரசியல் ஆய்வாளர்கள் கருதுகின்றார்கள்.


உலக சமநிலையில் ஏற்படும் இத்தகைய மாற்றத்தில் மேற்கின் தேய்வும் கிழக்கின் வளர்ச்சியும் கணிசமான பங்கை வகிக்கிறது.

ஆனாலும் நிதியியல் நிர்வாகத்தை ஆளுமை செலுத்தும் பாரிய நிறுவனங்கள் இன்னமும் மேற்கின் பிடிக்குள் இருப்பதுதான் கிழக்கின் வளர்ச்சியுறும் வல்லரசுகளுக்கு முட்டுக்கட்டையாக இருக்கிறது.

இருப்பினும் மெக்ஸிக்கோவிலுள்ள லொஸ்கபோசில் நடைபெறும் ஜீ20 மாநாட்டில் அனைத்துலக நாணய நிதியத்தினை பலப்படுத்தும் வகையில் 10 பில்லியன் டொலர்களை வழங்க இந்தியா முன்வந்துள்ள விடயம் மேற்குலகின் பலவீனத்தை வெளிப்படுத்துகிறது.

அதாவது, நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் பின்னடைவைச் சந்தித்தாலும் ஐரோப்பாவின் வர்த்தக சந்தையை இழக்கக் கூடாது. என்கிற வகையில் அதன் நிமிர்விற்காக அனைத்துலக நாணய நிதியத்திற்கு இந்தியா உதவி செய்கிறது

## ஒன்றுபட்ட எழுச்சியே புதிய பாதையைத் திறந்துவிடும்



எனலாம்.

அதேவேளை சர்வதேச கடன் மதிப்பீட்டு முகவர் அமைப்பான பிச் இந்தியாவைத் தரமிறக்கியுள்ளதாக செய்திகள் வருகின்றன. ஏற்கனவே பல ஐரோப்பிய நாடுகள் இவ்வாறு தரமிறக்கப்பட்டுள்ளன. இதனால் கடன் பெறும் தகைமையை இழந்து பெறும் கடனிற்கு அதிகளவு செலவு செய்ய வேண்டிய நிர்ப்பந்தத்தை இந்நாடுகள் எதிர்நோக்குகின்றன.

விற்கப்படும் நீண்டகால அரச முறிகளுக்கு செலுத்தப்படும் வட்டி, ஸ்பெயின், இத்தாலி போன்ற நாடுகளில் அதிகரிப்பதால் அதனைக் குறைக்கும் வகையில் அனைத்துலக நாணயநிதியத்தினூடாக உதவி வழங்கப்பட வேண்டும் என ஜீ20 மாநாட்டில் பரவலாகப் பேசப்பட்டது. இதில் 43 பில்லியன் டொலர்களை வழங்க சீனா முன்வந்துள்ளது குறிப்பிடத்தக்கது. 2009 நடைபெற்ற ஜீ20 லண்டன் மாநாட்டில் 50 பில்லியனை சீனா முதலீடு செய்தது.

இதில் கவனிக்கப்படவேண்டிய விடயம் என்னவென்றால், இந்தியாவோ அல்லது சீனாவோ ஐரோப்பிய சந்தையை இழக்கத் தயாரில்லை என்பதாகும்.

உலக பொருளாதார மீட்சிக்கு சீனாவின் உதவி எவ்வளவு அவசியமோ அதே அளவு முக்கியத்துவம் யூரோ நாணயத்தின் ஸ்திரத்தன்மையிலும் ஐரோப்பிய ஒன்றிய நாடுகளின் பொருளாதார மீளெழுச்சியிலும் தங்கியுள்ளது.

இவைதவிர இம்மாநாட்டில் கலந்து கொண்ட பிரிக்ஸ் கூட்டமைப்பின் உறுப்பு நாடுகளான பிரேசில், ரஷ்யா,இந்தியா, சீனா மற்றும் தென்னாபிரிக்கா போன்றவற்றின் தலைவர்கள் தமக்குள் கூடிப் பேசியுள்ளனர். அனைத்துலக நாணய நிதியத்தில் தமது முதலீடுகளை அதிகரிக்கும் அதேவேளை உலகப்பொருளாதாரக் கட்டமைப்பில் நிதிச்சிக்கல் ஏற்படுவதால், தம்மிடையில் வெளிநாட்டு நாணய சேமிப்பு நிதியத்தையும் சொந்த நாணயப்பரிவர்த்தனை ஏற்பாட்டினையும் மேற்கொள்ள வேண்டும் என இவை தீர்மானித்துள்ளன.

யூரோ வலய நாடுகளில் உருவாகியுள்ள நிதி நெருக்கடி மேலும் பரவாமல் தடுப்பதற்கு தத்தமது மத்திய வங்கிகளினூடாக இவ்வகையான ஏற்பாடுகளை முன் கூட்டியே மேற்கொள்வது அவசியமானதொன்றாக பிரிக்ஸ் கருதுகிறது.

உலக நாணயமான அமெரிக்க டொலருக்கு மாற்றீடாகவும் தனது யுவான் நாணயத்தை வர்த்தகப்பரிமாற்றத்தில் பயன்படுத்தவும் இத்தகைய நகர்வினை சீனா முன்னெடுப்பதாக மேற்குலகில் விமர்சனங்கள் உண்டு.

பிரிக்ஸ் கூட்டமைப்பானது உலக சனத்தொகையில் 42 விழுக்காட்டை கொண்டிருக்கிறது. நாணய நிதியத்தின் கணிப்பீட்டில் இந்த ஐந்து நாடுகளின் மொத்த உள்ளூர் உற்பத்தி 13.6 ரில்லியன் டொலர்களாகும். இதைவிட சீனாவின்வெளிநாட்டு நாணயக் கையிருப்பு மூன்று ரில்லியன் டொலர்களைத் தாண்டிவிட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் சந்தைகளைஇழக்கும் பிரிக்ஸிற்கும் பொருளாதாரப் பின்னடைவை அனுபவிக்கும் மேற்குலகிற்கும் பரஸ்பர உதவிகள் தேவைப்படுகிறது என்பதையே ஜீ20 மாநாடு புலப்படுத்துகிறது. இதன் பின்னணியில் இந்த மாற்றங்களும் முரண்பட்ட சக்திகளின் இணக்கப்பாட்டு அரசியலும் இலங்கையிலும் எத்தகைய தாக்கங்களை ஏற்படுத்தும் என்பதுவே எமது பிரச்சினையாகும்.

அனைத்துலக நாணய நிதியம் சீனாவிடம் கையேந்த, அந்த நிதியத்தின் தயவை எதிர்பார்க்கிறது இலங்கை அரசு.

விற்ற அரச பிணையங்கள் மற்றும் முறிகளுக்கான முதிர்ச்சிநிலை ஏற்படும்போது அதனை எவ்வாறு திருப்பிக்கொடுப்பது என்பதில்தான் மத்திய வங்கி அதிக நேரத்தை செலவிடுகிறது.

கடன் வாங்கி கடனை அடைக்கும் சங்கிலித்தொடர் நிகழ்வுகளால் சலிப்படையும் அரசு திறைசேரியும் மத்திய வங்கியும் என்னதான் நிபுணர் குழுக்களை அமைத்து பரப்புரை செய்தாலும் எதிர்பார்த்த வெளிநாட்டு நேரடி முதலீட்டுத் தொகையைப் பெறமுடியவில்லையே என்கிற ஏமாற்றத்தால் மேற்குலகோடு சுமுகமான நிலையொன்றினை உருவாக்க வேண்டும் என்று முடிவெடுத்துவிட்டது.

அடுத்தமாத முதல்வாரத்தில் வெளிநாடுகளில் இருக்கும் தூதரக உயர் அதிகாரிகளை அழைத்து தமது புதிய வெளியுறவுக்கொள்கையை அரசு அறிமுகம் செய்யும் என்று செய்திகள் கூறுகின்றன.

அதில் நிச்சயமாக மேற்குலகு சார்பாக எடுக்கவுள்ள நிலைப்பாடு முக்கிய பேசு பொருளாக இருக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது.

மனித உரிமை பேரவை வழங்கிய ஒரு வருடகால தவணைக்குள் வடக்கின் குடிசனப் பரம்பலை பெரும் தேசிய வாதத்திற்கு சார்பாக மாற்றியமைப்பதோடு சில விட்டுக்கொடுப்புகளை முன்வைத்து மனித உரிமை மீறல்குறித்து அதிகம் அலட்டிக் கொள்ளும் மேற்குலகை திருப்திப்படுத்தி தனது அரசியல் இருப்பினை தக்க வைக்கலாம் என்று அரசு வியூகம் அமைப்பது போல் தெரிகிறது.

இந்நிலையில் படையினர் மேற்கொள்ளும் நில அபகரிப்பிற்கு எதிரான மக்கள் போராட்டங்கள் இலங்கை அரசிற்குப் புதிய தலைவலியைக் கொடுப்பதையும் கவனிக்க வேண்டும். இலங்கை அரசால் தேசிய இனங்களுக்கிடையே நல்லிணக்கத்தை உருவாக்க முடியாது என்கிற செய்தி சர்வதேசத்திற்கும் எட்டுகிறது.

யாழ் நகரில் தமிழ்தேசிய மக்கள் முன்னணி முன்னெடுத்த கவன ஈர்ப்புப் போராட்டம் காவல்துறை மேற்கொண்ட ஏற்பாட்டில், நீதிமன்றத்தால் இடைநிறுத்தப்பட்டது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஏற்பாடு செய்த தெல்லிப்பளை போராட்டம் காவல் துறையின் பலத்த எதிர்ப்புகளின் மத்தியில் நடந்தேறியது.

எதிர்வரும் ஜூன் 26 ஆம் திகதி அன்று மீண்டும் நில ஆக்கிரமிப்பிற்கு எதிரான மாபெரும் கவன ஈர்ப்புப் போராட்டம் ஒன்று நடக்கவிருப்பதாக அறிக்கைகள் கூறுகின்றன.

ஆகவே நிலமற்ற தேசிய இனங்கள் முன்னெடுக்கும் வாழ்வுரிமைப் போராட்டங்களை, முதலீடுகளில் தமது கவனத்தைக் குவிக்கும் வல்லரசாளர்கள் கருத்தில் கொள்வார்களா என்று தெரியவில்லை.

சம்பூர் மக்கள் இலங்கை நீதிமன்றில் தமக்கான நீதியை எதிர்பார்க்கின்றனர். யாழ்.குடாவில் ஆங்காங்கே இந்த நில அபகரிப்பிற்கெதிராக வழக்கு தொடுக்கப்பட்டுள்ளதாயினும், மக்களின் ஒன்றுபட்ட எழுச்சியே புதிய பாதையைத் திறந்துவிடும் என்பதுதான் உண்மை.

# யுனெஸ்கோ ஆலோசகர் ஜின்னா தமிழீழ ஆதரவுகோரி கடிதம்



ஈழத்தில் வாழும் தமிழர்களின் நீண்டகால கோரிக்கையான தனித் தமிழீழத்தின் அவசியத்தை வலியுறுத்தியும் அதற்கு ஐ.நா. அவையின் மூலம் பொது வாக்கெடுப்பு நடத்த வேண்டியதன் அவசியத்தை விளக்கியும் ஐக்கிய நாடுகள் அவையின் யுனெஸ்கோ அமைப்பின் பசுபிக் மண்டல ஆலோசகரான வழக்கறிஞர் அசன் முகமது ஜின்னா பல நாடுகளிலும் உள்ள ஐ.நா. பிரதிநிதிகளுக்கு கடிதம் அனுப்பியிருந்தார்.

இக்கடிதத்திற்கு பதிலளித்த இலங்கையை சேர்ந்த பிரதிநிதி திலுப் நாணயக்கார இலங்கையில் தமிழர்கள் மிகவும் நல்ல முறையில் வாழ்வதாகவும் போருக்கு பின்னர் ராஜபக்ஷ அரசாங்கம் எடுத்துள்ள நடவடிக்கைகளினால் தமிழ்ப் பெண்களும் குழந்தைகளும் நல்வாழ்வு பெற்றுள்ளனர். தமிழர் பகுதிகளில் சிங்கள குடியேற்றம் நடக்கவில்லை அத்துடன் மஹிந்த சிந்தனை என்ற பெயரில் ராஜபக்ஷ அரசு மேற்கொண்டு வரும் நடவடிக்கைகள் வரவேற்பை பெற்றிருக்கிறது என்றார். ஆயினும் நாணயக்காரவின் இக்கூற்று முழுப்பூசணிக்காயை சோற்றுக்குள் மறைப் பதற்கு ஒப்பானது என குறிப்பிடப்படுகிறது. (அ-2)

# நுளம்பு அழிப்பு நடவடிக்கையில் படையினரும் ஈடுபடுத்தப்படுவர்

## கோத்தபாய உத்தரவு

(கொழும்பு)

அரச நிறுவனங்களில் டெங்கு நுளம்புகள் ஒழிப்பதற்காக முப்படையினரையும் பொலிஸாரையும் ஈடுபடுமாறு நகர அபிவிருத்தி மற்றும் பாதுகாப்பு அமைச்சின செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ உத்தரவிட்டுள்ளார்.

இதனடிப்படையில் கொழும்பு நகரிலுள்ள அரச நிறுவனங்களில் டெங்கு நுளம்புகள் பரவுவதைத் தடுப்பதற்கும் அவற்றை அழிப்பதற்கும் நேற்று முன்தினம் காலை முதல் இராணுவத்தினர் ஈடுபடுவதாக இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் ருவன் வணிகசூரிய தெரிவித்தார்.

சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன, பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ ஆகியோரிடையே நடைபெற்ற பேச்சின் பயனாக இந்த தீர்மானம் எடுக்கப்பட்டதாகவும் இராணுவப் பேச்சாளர் குறிப்பிட்டுள்ளார்.

கொழும்பு நகரில் நேற்று முன்தினம் ஆரம்பிக்கப்பட்டுள்ள இந்தச் செயற்றிட்டம் விரைவில் நாடு முழுவதும் விஸ்தரிக்கப்படவுள்ளது. இதற்காக அரச நிறுவன ஊழியர்களின் ஒத்துழைப்பையும் பெற்றுக் கொள்ளவுள்ளதாக இராணுவ பேச்சாளர் மேலும் தெரிவித்துள்ளார். (அ-2)

# பணிப்பெண்களை தேடும் மத்திய கிழக்கு நாடுகள்

## முகவர்கள் இலங்கை வருகை

(கொழும்பு)

மத்திய கிழக்கு நாடுகளில் இந்தோனேசியாவின் வீட்டுப் பணிப்பெண்களின் வருகை குறைவடைந்துள்ள நிலையில் அந்த வாய்ப்பு இலங்கைக்கு கிடைத்துள்ளது.

இந்தோனேசியா பணிப்பெண்களை மத்திய கிழக்கு நாடுகளுக்கு அனுப்புவதில்லை என தீர்மானித்துள்ள நிலையில் பணிப்பெண்களுக்காக நிலவும் வெற்றிடங்களை நிரப்பும் நடவடிக்கைகளை வெளிநாட்டு முகவர்கள் மேற்கொண்டுள்ளனர்.

இதன் பொருட்டு ஆறு முகவர்கள் இந்த மாதம் இலங்கைக்கு வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன் மத்திய கிழக்கு நாடுகளில் உள்ள இலங்கை தூதரகம் குறித்த முகவர்களுடன் சந்திப்பு ஒன்றையும் ஏற்பாடு செய்துள்ளது.

இதன் அடிப்படையில் இந்த வருடம் 4 ஆயிரத்து 500 வீட்டுப் பணியாளர்களையும் அடுத்த வருடம் 6 ஆயிரம் வீட்டுப் பணியாளர்களையும் அழைத்துச் செல்ல நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (அ-2)

# இராணுவத்தை மறுசீரமைக்க நடவடிக்கை எடுக்கப்படும்

## இராணுவத்தளபதி தெரிவிப்பு

(கொழும்பு)

பாதுகாப்பு மற்றும் அபிவிருத்திஆகிய இரண்டு பிரதான பிரிவுகளின் கீழ் இராணுவத்தினரை மறுசீரமைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என இராணுவத்தளபதி ஜகத் ஜயசூரிய தெரிவித்துள்ளார்.

நாட்டில் போர் நிலைமை இல்லாத போதிலும் தேசிய பாதுகாப்பிற்கு முக்கியத்துவம் அளிக்க வேண்டியது மிகவும் முக்கியமானது.

போர் படைப்பிரிவுகளை சேர்ந்த படைவீரர்களும் உத்தியோகத்தர்களும் தொடர்ந்தும் கடமையில் ஈடுபடுத்தப்படுவர். இராணுவ படையில் வேறு பல்வேறு பிரிவுகள் காணப்படுகின்றன.

ஏனைய பிரிவுகளை சேர்ந்த அதிகாரிகள் மற்றும் படைவீரர்கள் அபிவிருத்தி பணிகளுக்காக ஈடுபடுத்தப்படுவர். இராணுவத்தின் தொழில்சார் கௌரவத்திற்கு பாதிப்பு ஏற்படாத வகையில் புதிய மறுசீரமைப்பு பணிகள் மேற்கொள்ளப்படும் என்றார். (அ-2)

# கல்விப் பொது தராதரப் பத்திர (உயர்தர) பரீட்சை - 2012 (புதியபாடத்திட்டம்) நேர அட்டவணை

நேற்றைய தொடர்ச்சி

| முற்பகல் | பிற்பகல் |
|---|---|
| ஓகஸ்ட் 06 திங்கட்கிழமை | |
| 08:30-11:30<br>10 இணைந்தகணிதம் I | 12:30-14:30<br>09 உயிரியல் I<br>21 பொருளியல் I |
| ஓகஸ்ட் 21 செவ்வாய்க்கிழமை | |
| 08:30-11:30<br>73 ஆங்கிலம் I | 12:30-15:30<br>25 இலங்கை வரலாறு I |
| ஓகஸ்ட் 22 புதன்கிழமை | |
| 08:30-11:30<br>14 குடிசார் தொழில்நுட்பவியல் II<br>15 பொறிமுறைத் தொழில்நுட்பவியல் II<br>16 மின், இலத்திரன், தகவல் தொழில்நுட்பவியல் II<br>17 உணவுத் தொழில்நுட்பவியல் II<br>18 விவசாயத் தொழில்நுட்பவியல் II<br>19 உயிர் வளத் தொழில்நுட்பவியல் II<br>74 பாளி II | 12:30-14:30<br>22 புவியியல் I |
| ஓகஸ்ட் 23 வியாழக்கிழமை | |
| 08:30-11:30<br>28 அரசியல் விஞ்ஞானம் II | 12:30-15:30<br>73 ஆங்கிலம் II |
| ஓகஸ்ட் 24 வெள்ளிக்கிழமை | |
| 08:30-10:30<br>33 கணக்கீடு I | 14:00-17:00<br>22 புவியியல் II |
| ஓகஸ்ட் 25 சனிக்கிழமை | |
| 08:30-11:30<br>07 கணிதம் I<br>11 உயர்கணிதம் I | 12:30-15:30<br>42 இந்துசமயம் II<br>43 கிறிஸ்தவம் II<br>44 இஸ்லாம் II<br>45 பௌத்த நாகரிகம் II<br>46 இந்துநாகரிகம் II<br>47 இஸ்லாமிய நாகரிகம் II<br>49 கிறிஸ்தவ நாகரிகம் II |
| ஓகஸ்ட் 27 திங்கட்கிழமை | |
| 08:30-11:30<br>33 கணக்கீடு II | 12:30-14:30<br>20 தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பவியல் I |
| ஓகஸ்ட் 28 செவ்வாய்க்கிழமை | |
| 08:30-11:30<br>07 கணிதம் II<br>11 உயர்கணிதம் II | 12:30-14:30<br>31 வணிகப் புள்ளிவிபரவியல் I<br>12:30-15:30<br>58 நாடகமும் அரங்கியலும் I |
| ஓகஸ்ட் 29 புதன்கிழமை | |
| 08:30-10:30<br>29 தொடர்பாடலும் ஊடகக்கற்கையும் I | 12:30-15:30<br>31 வணிகப்புள்ளிவிபரவியல் II<br>58 நாடகமும் அரங்கியலும் II |
| ஓகஸ்ட் 30 வியாழக்கிழமை | |
| 08:30-11:30<br>22 தகவல் தொடர்பாடல் தொழிநுட்பவியல் II | 12:30-15:30<br>29 தொடர்பாடலும் ஊடகக்கற்கையும் II |

(முற்றும்)

# போலி யூரோ தாளுடன் இரு சந்தேக நபர்கள் கைது

(கொழும்பு)

போலி யூரோ நாணயத்தாள்களை பயன்படுத்தி நகைக் கொள்வனவில் ஈடுபட முயற்சித்த இரு சந்தேக நபர்களை பொலிஸார் கைது செய்த சம்பவமொன்று நேற்று முன்தினம் மாலை இடம்பெற்றுள்ளது.

நாரம்மல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நகைக்கடையொன்றில் வைத்து கைது செய்யப்பட்ட மேற்படி இரு சந்தேக நபர்களிடமிருந்து 21 போலி யூரோ நாணயத்தாள்கள் கைப்பற்றப்பட்டுள்ளன என்று பொலிஸ் ஊடக பேச்சாளரும் பொலிஸ் அத்தியட்சகருமான அஜித் ரோஹண தெரிவித்தார்.

அத்துடன் இவர்களிடமிருந்து கெப் ரக வாகனமொன்றையும் கைப்பற்றிய பொலிஸ், சந்தேக நபர்களை கொழும்பு குற்றத்தடுப்பு பிரிவின் போலி நாணயத்தாள் விசாரணை பிரிவிடம் மேலதிக விசாரணைக்காக ஒப்படைத்துள்ளனர் என்று பொலிஸ் பேச்சாளர் மேலும் கூறினார். (அ-9)




# மரியாதைராமன் கதைகள்

## யானைக்கும் பானைக்கும் சரி

ஓர் ஊரில் முத்து என்ற செல்வன் இருந்தான். அவனுக்கு அன்பரசன் என்ற மகன் இருந்தான். தன் மகனின் மீது உயிரையே வைத்திருந்தான் அவன்.

அன்பரசனுக்குத் திருமண நாள் உறுதியாயிற்று.

என்ன செலவானாலும் கவலை இல்லை. மகனின் திருமணத்தைச் சீரும் சிறப்புமாக நடத்த வேண்டும். அதைப்பார்த்து ஊரார் வியப்பு அடைய வேண்டும். என்ன செய்வது என்று சிந்தித்தான் முத்து.

அலங்கரிக்கப்பட்ட யானையின் மேல் அன்பரசன் அமர வேண்டும். மேள தாளத்துடன் கோலாகலமாகத் திருமணம் ஊர்வலம் புறப்பட வேண்டும். ஊர்வலம் எங்கும் வாண வேடிக்கைகள் நிகழ வேண்டும். இதைப் பார்த்து எல்லோரும் மகிழ வேண்டும். என்று திட்டம் போட்டான் அவன்.

அந்த ஊரில் அபூபக்கர் என்பவரிடம் யானை இருந்தது. அவரிடம் யானையைக் கேட்டுப் பார்ப்போம் என்று நினைத்தான் அவன்.

அபூபக்கரைச் சந்தித்த அவன், அடுத்த வாரம் என் மகனுக்குத் திருமணம். யானையின் மேல் ஊர்வலமாக அழைத்துச் செல்ல ஆசை. என்ன தொகை கேட்டாலும் தருகிறேன். திருமண ஊர்வலத்திற்கு உங்கள் யானையைத் தாருங்கள் என்று வேண்டினான்.

என் யானையின் மேல் உயிரையே வைத்திருக்கிறேன். அதை யாருக்கும் தருவது இல்லை. மகனின் திருமணம் என்கிறீர்கள். மறுப்பதற்கு எனக்கு உள்ளம் வரவில்லை.

திருமணத்திற்கு யானையைத் தருகிறேன். அதற்கு ஏதும் நேராமல் திருப்பித் தந்துவிட வேண்டும். ஏதேனும் நேர்ந்தால் நான் பொல்லாதவனாகி விடுவேன்! என்றான் அபூபக்கர்.

யானையைத் தர ஒப்புக் கொண்டதற்கு நன்றி என் கண்ணைப் போல யானையைப் பார்த்துக் கொள்வேன் என்று புறப்பட்டான் முத்து.

திருமண நாள் வந்தது. அலங்கரிக்கப்பட்ட யானையின் மேல் அமர்ந்தான் அன்பரசன். ஊர்வலம் வாண வேடிக்கையுடன் ஆரவாரமாக நடந்தது.

திருமணமும் சீரும் சிறப்புமாக நடந்து முடிந்தது.


திருமண மண்டபத்திற்கு எதிரே கட்டப்பட்டு இருந்தது யானை. திடீரென்று அது பயங்கரமாகப் பிளிறியது. அப்படியே இறந்து விழுந்தது.

எதிர்பாராதது நடந்ததைக் கண்டு முத்து திகைத்தான்.

அபூபக்கரிடம் வந்த அவன், உங்கள் யானையை நான் கவனமாகத் தான் பார்த்தேன்.என்ன நேர்ந்தது என்று தெரியவில்லை. திடீரென்று அது இறந்து விட்டது. அதற்காக வருந்துகிறேன்.

யானைக்கு உரிய தொகையைக் கேட்டாலும் தருகிறேன்! வேறு யானைகள் கேட்டாலும் வாங்கித் தருகிறேன்! என்றான்.

கோபத்தால் துடித்த அபூபக்கர்,



நான் யானையைக் கொடுக்கும் போது என்ன சொன்னேன்? என் உயிரினும் மேலான யானை இது! இதற்கு எதுவும் நேரக்கூடாது! என்றேன்.

நீயும் அதற்கு ஒப்புக் கொண்டாய்! இப்போது யானை இறந்து விட்டது என்கிறாயே.

வேறு யானையோ அல்லது தொகையோ எனக்கு வேண்டாம். இறந்த என் யானையே உயிருடன் வேண்டும். வேறு எதற்கும் ஒப்புக் கொள்ள மாட்டேன்! என்று கத்தினான்.

முத்து எவ்வளவோ எடுத்துச் சொல்லியும் அவன் கேட்கவில்லை.

என்ன செய்வது என்று குழம்பினான் முத்து.

நீதிபதி மரியாதைராமனிடம் சென்ற அவன் நடந்ததை எல்லாம் சொன்னான். நீங்கள் தான் நல்ல தீர்ப்பு வழங்க வேண்டும் என்று வேண்டினான்.

அபூபக்கரை அங்கு வரவழைத்தார் நீதிபதி மரியாதை ராமன்.

உங்கள் யானை இறந்து விட்டது. வேண்டுமென்றே இவர் அப்படிச் செய்யவில்லை. தற்செயலாக நடந்த நிகழ்ச்சி இது.

உங்களுக்கு ஏற்பட்ட இழப்பிற்கு உரிய தொகை தருகிறேன். அல்லது வேறு யானை வாங்கித் தருகிறேன் என்கிறார். நீங்கள் என்ன சொல்கிறீர்கள்? என்று கேட்டார்.

எனக்கு என் யானையே உயிருடன் வேண்டும். வேறு எதையும் ஒப்புக் கொள்ள மாட்டேன்! என்று அடாவடியாகப் பேசினான் அவன்.

இறந்த யானையை எப்படி உயிருடன் கொண்டுவர முடியும்? நடக்க இயலாத செயலைச் செய்யச் சொல்கிறாரே! முட்டாளாக இருக்கிறாரே! என்ன செய்து இவரை வழிக்குக் கொண்டு வருவது என்று சிந்தித்தார் மரியாதை ராமன்.

நல்ல வழி ஒன்று அவருக்குத் தோன்றியது.

நாளை நீங்கள் இருவரும் இங்கு வாருங்கள். தீர்ப்பு வழங்குகிறேன்! என்றார்.

முத்துவை மட்டும் அழைத்தார் அவர். நாளை நீர் நீதிமன்றம் வரவேண்டாம். உம் வீட்டுக் கதவை அடைத்து வையும். கதவோரம் பழைய பானைகளை அடுக்கிவையும். கதவைத் திறந்தால் பானைகள் உடைந்து நொறுங்க வேண்டும்.

அபூபக்கரை உம் வீட்டிற்கு அனுப்புகிறேன். அவர் கதவைத் திறப்பார் பானைகள் உடைந்து நொறுங்கும். அவரிடம் நான் சொல்வது போல நடந்து கொள்ளும்! என்று தன் திட்டத்தைச் சொன்னார்.

அப்படியே செய்கிறேன்! என்றான் அவன்.மறுநாள் அபூபக்கர் நீதிமன்றத்தி ற்கு வந்தான். நீண்ட நேரம் ஆயிற்று. முத்து வரவே இல்லை.

பொறுமை இழந்த அபூபக்கர் முத்து ஏன் இன்னும் வரவில்லை. எவ்வளவு நேரம் காத்திருப்பது? என்று கோபத்தால் துடித்தான். பல்லைக் கடித்த படி அங்கும் இங்கும் நடந்தான்.

அவனின் நடவடிக்கைகளைக் கவனித்தார் மரியாதைராமன். கோபத்தின் உச்சத்தில் அபூபக்கர் இருக்கிறார் என்பது அவருக்குப் புரிந்தது.

அபூபக்கரே! ஏன் இன்னும் முத்து வரவில்லை.எவ்வளவு நேரம் காத்திருப்பது? நீங்கள் சென்று அவரை அழைத்து வாருங்கள் என்றார் அவர்.

முத்துவின் வீட்டை அடைந்தான் அபூபக்கர். கதவு மூடப்பட்டு இருப்பதைக் கண்டான். கோபமும் எரிச்சலும் கொண்டான்.

அந்தக் கதவை ஓங்கி உடைத்தான். தாழ்ப்பாள் போடாததால் கதவு படீரென்ற ஓசையுடன் திறந்தது.

கதவோரம் சார்த்தியிருந்த பானைகள் மீது கதவு மோதியது. பானைகள் கீழே விழுந்து படபடவென்று நொறுங்கின.

வீட்டிற்குள் இருந்த முத்து ஐயோ! என் பானைகள்! பரம்பரை பரம்பரையாக பாதுகாத்து வைத்திருந்த பானைகள். என் முன்னோர்களின் நினைவாக இருந்த பானைகள்! எல்லாவற்றையும் உடைத்து நொறுக்கி விட்டாயே! என்ன செய்வேன்! என்று உரத்த குரலில் அலறினான்.

திகைத்த அபூபக்கர், அறியாமல் நடந்த தவறு இது. உடைந்த பானைகளுக்குப் பதில் புதிய பானைகள் வாங்கித் தருகிறேன். உரிய பணம் கேட்டாலும் தந்து விடுகிறேன்! என்றான்.சாதாரண பானைகளா இவை? என் உயிருக்கும் மேலாகப் பாதுகாத்து வந்தேனே. எல்லாவற்றையும் உடைத்து நொறுக்கி விட்டாயே.

அதே பானைகள் தான் எனக்கு வேண்டும். வேறு எதையும் நான் ஒப்புக் கொள்ள மாட்டேன்! என்று கத்தினான் முத்து.

நீதிபதி மரியாதைராமனிடம் இருவரும் வந்தார்கள்.

நீதிபதி அவர்களே! நான் இங்கு வருவதற்குப் புறப்பட்டுக் கொண்டிருந்தேன். என் வீட்டிற்கு வந்தார் அபூபக்கர். கோபத்துடன் கதவை ஓங்கி உதைத்து திறந்தார்.

கதவின் மூலையில் சார்த்தி இருந்த பானைகளை உடைத்து விட்டார். பரம்பரை பரம்பரையாக பாதுகாத்து வந்த பானைகள் அவை. நீங்கள் தான் நீதி வழங்க வேண்டும் என்று முறையிட்டான் முத்து.

அபூபக்கரே என்ன நடந்தது? சொல்லும் என்றார் நீதிபதி.

இவர் வீட்டுக் கதவை வேகமாக உதைத்தேன். கதவின் மூலையில் பானைகள் இருப்பது எனக்குத் தெரியாது. கதவு மோதிப் பானைகள் உடைந்து நொறுங்கி விட்டன.

உடைந்த பானைக்குப் பதிலாக புதுப் பானைகள் தருகிறேன். அல்லது பணம் தருகிறேன் என்றேன். இவரோ அந்தப் பானைகளே வேண்டும் என்கிறார்! என்றான் அபூபக்கர்.

குறுக்கிட்ட முத்து இவர் உடைத்த அதே பானைகளே முழுமையாக வேண்டும்.வேறு எதற்கும் ஒப்புக் கொள்ள மாட்டேன்! என்றான்.

அபூபக்கரே! நீரும் முத்துவும் பிடிவாதமாகவே இருக்கிறீர்கள். நீர் இறந்த யானையே உயிருடன் வேண்டும் என்கிறீர். இவரோ உடைந்த பானைகளே முழுமையாக வேண்டும் என்கிறார்.

இருவருமே இயலாத செயலைச் செய்யச் சொல்கிறீர்கள். என்னால் என்ன செய்ய இயலும்?

உடைந்த பானைகளை நீர் முழுமையாகத் தாரும்! இறந்த யானையை இவர் உயிருடன் தருவார்! என்றார் நீதிபதி.

என்ன செய்வது என்று சிந்தித்தான் அபூபக்கர்.

நீதிபதி அவர்களே! இறந்த யானைக்கும் உடைந்த பானைக்களுக்கும் சரியாகி விட்டது. இவர் எனக்கு எதுவும் தர வேண்டாம். நானும் இவருக்கு எதுவும் தர வேண்டாம். என்று புறப்பட்டான்.

தன் திட்டம் வெற்றி பெற்றது! என்று மகிழ்ந்தார் மரியாதைராமன்.

நீதிபதி அவர்களே! என்னைக் காப்பாற்றினீர்கள்! நன்றி! என்று வணங்கினான் முத்து.

# விடுவிக்கப்பட்ட பிரதேசங்களில் இரு வாரங்களில் மீள்குடியமர்வு

## அமைச்சர் டக்ளஸ் உறுதியளிப்பு

(யாழ்ப்பாணம்)

**உயர் பாதுகாப்பு வலயங்களில் இருந்து விடுவிக்கப்பட்ட பிரதேசங்களில் இன்னும் இரண்டு கிழமைகளில் மக்களை மீள்குடியேற்றவுள்ளதாக பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே. என்.டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.**



யுத்தத்தினால் தமது சொந்த இடங்களை விட்டு இடம்பெயர்ந்த மக்களை மீளவும் குடியமர்த்துவது தொடர்பான விசேட கலந்துரையாடல் ஒன்று யாழ். மாவட்ட செயலகத்தில் நேற்று இடம்பெற்றது. இதன்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

யுத்தம் காரணமாக இடம்பெயர்ந்த மக்கள் தம்மை மீளவும் குடியமர்த்துமாறு தொடர்ந்து வேண்டுகோள் விடுத்து வருகின்றனர்.

மிதிவெடி அபாயம், உயர் பாதுகாப்பு பிரதேசம் போன்ற காரணத்தினால் மீள் குடியேற்றம் தாமதமடைந்து வருகின்றது.

உயர் பாதுகாப்பு வலயத்தில் இருந்து விடுவிக்கப்பட்ட பகுதிகளைச் சேர்ந்த மக்களை அவர்களின் சொந்த இடங்களில் மீளவும் குடியமர்த்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இவ்வாறு விடுவிக்கப்பட்ட பிரதேசங்களில் இன்னும் இரண்டு வாரத்திற்குள் மக்களை மீளவும் குடியமர்த்தவுள்ளோம்.

இந்தப் பகுதிகளில் குடியமர்த்தப்படவுள்ள குடும்பங்களின் விபரங்களை உடனடியாக சகல பிரதேச செயலர்களும் உதவி அரசாங்க அதிபர்களும் பட்டியல்படுத்தி அறிக்கையாக சமர்ப்பிக்க வேண்டும்.

மேலும் வலிகாமம் வடக்கு(தெல்லிப்பழை பிரதேச செயலர் பிரிவில்) பிரதேசத்தில் சுமார் ஆயிரத்து 659 குடும்பங்கள் மீள்குடியேற்றப்பட வேண்டும் எனவும் பிரதேச செயலர் கூறியுள்ளார்.

ஏற்கனவே இந்தப் பகுதியில் 2 ஆயிரத்து 962 குடும்பங்கள் மீள்குடியேற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

மக்களை அவர்களின் சொந்த இடங்களில் மீள்குடியேற்றம் செய்ய அனைவரும் இணைந்து செயற்பட வேண்டும்.

பிரதேச செயலர்கள் இந்த விடயத்தில் கூடிய கவனம் எடுத்து மீளவும் குடியமர்த்தப்படவேண்டிய குடும்பங்கள் தொடர்பாக தகவல்களை பெற வேண்டும்.

ஏற்கனவே மீள்குடியேற்றப்பட்ட மக்களின் தேவைகளையும் பூர்த்தி செய்ய வேண்டும்.

நீண்டகால அழிவுகளை சந்தித்த பிரதேசங்கள் என்பதனால் குறுகிய காலத்திற்குள் சகல தேவைகளையும் பூர்த்தி செய்துவிட முடியாது.

இருப்பினும் மக்களுக்குத் தேவையான உதவிகளை அரசாங்கம் தொடர்ந்து வழங்கும் எனவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை இந்தக் கலந்துரையாடலில் வடக்கு மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ. சந்திரசிறி, யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் முருகேசு சந்திரகுமார், சில்வேஸ்திரி அலென்ரின், யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம், யாழ். மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா, யாழ். பிராந்திய பொலிஸ்மா அதிபர் எரிக்பெரேரா, பிரதேச செயலர்கள், உதவி அரசாங்க அதிபர்கள், அரச, அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள், பிரதேச சபை, நகர சபை உறுப்பினர்கள் என பலரும் கலந்து கொண்டனர். (அ-6)

# காணி அபகரிப்பு போராட்டத்தில் முஸ்லிம் காங்கிரஸ் இணையாது

## சேகுதாவூத் தெரிவிப்பு

(கொழும்பு)

அரசாங்கம் பலவந்தமாக மக்களின் காணிகளை அபகரித்து வருவதாக தமிழ்த் தேசியக்கூட்டமைப்பினால் மேற்கொள்ளப்பட்டு வரும் பிரசாரங்களுக்கு ஆதரவளிக்க வில்லை என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அறிவித்துள்ளது.

காணி அபிவிருத்திக்கு எதிரான கூட்டமைப்பின் போராட்டத்தில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசும் இணைந்து கொண்டுள்ளதாக சில ஊடகங்களில் தகவல் வெளியாகியுள்ளது.

எனினும் இந்தத் தகவல்களில் உண்மையில்லை என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசின் தவிசாளர் பசீர் சேகுதாவூத் தெரிவித்துள்ளார்.

இவ்வாறான முக்கிய விடயங்களில் கட்சியின் அதி உயர்பீடமே தீர்மானம் எடுக்கும் எனவும் அவ்வாறான எவ்வித தீர்மானங்களும் எடுக்கப்படவில்லை எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

கிழக்கு மாகாண முஸ்லிம் மக்கள் காணிப் பிரச்சினைகளை எதிர்நோக்கி வருவதாகவும் அவற்றுக்கு அரசாங்கம் காத்திரமான தீர்வுகளை வழங்கும் என எதிர்பார்ப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (அ-2)

# வவுனியா தெற்கு வலயத்தில் இரண்டாம் மொழிப் பரீட்சை

## 30 ஆம் திகதி நடைபெறும்

(பூந்தோட்டம்)

வவுனியா தெற்கு வலய மட்ட இரண்டாம் மொழிப் போட்டிகள் எதிர்வரும் 30 ஆம் திகதி சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு வவுனியா இலங்கைத் திருச்சபை தமிழ் மகா வித்தியாலயத்தில் வவுனியா தெற்கு வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி எஸ்.அன்ரன் சோமராஜா தலைமையில் நடைபெறவுள்ளது.

வவுனியா தெற்கு கல்வி வலயத்தில் உள்ள தமிழ், சிங்கள மொழி மூலப் பாடசாலைகளில் தரம் 6 தொடக்கம் தரம் 9 வரையான மாணவர்களிடையே நடத்தப்படட வாசிப்பு, பேச்சு, மொழிப் பிரயோகம், பாடல், சொல்வதெழுதல் ஆகிய போட்டிகளில் வெற்றியீட்டிய முதலாம், இரண்டாம் இடங்களைப் பெற்ற மாணவர்கள் இப்போட்டியில் பங்குபற்றவுள்ளனர்.

இப்போட்டியில் வெற்றியீட்டிய முதலாம், இரண்டாம் இடங்களைப் பெறும் போட்டியாளர்கள் மாகாண மட்ட, தேசிய மட்ட இரண்டாம் மொழிப்போட்டிக ளுக்கு தகுதி பெறுவார்கள்.

மாணவர்களின் இரண்டாம் மொழித் திறன் விருத்தி செய்வதற்காக பாடல், சொல்வதெழுதல் ஆகிய போட்டிகள் நடத்தப்படுவதாகவும் இவ்வலயத்தின் இரண்டாம் மொழி, சிங்களபாட ஆசிரிய ஆலோசகர் திருமதி சுஜாதா உபசேன தெரிவித்துள்ளார். (அ-3-266)

# புலம்பெயர் தமிழர்களின் விருப்புக்களையே தமிழ்த்தேசிய கூட்டமைப்பு நிறைவேற்றுகிறது

## ஊடக அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல குற்றச்சாட்டு



புலம்பெயர்ந்து வாழும் விடுதலைப்புலி ஆதரவு தமிழர்களின் விருப்பு வெறுப்புகளையே தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு நிறைவேற்றி வருவதாக ஊடக அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

வடக்கு இராணுவ மயமாக்கல் மற்றும் காணி அபகரிப்பு தொடர்பான கூட்டமைப்பின் பிரசாரங்களின் பின்னணியில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இயங்கி வருகின்றது.

புலம்பெயர் தமிழர்களின் அழுத்தம் காரணமாகவே தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு இவ்வாறான பிரசாரங்களை மேற்கொண்டு வருகின்றது.

எதிர்வரும் செப்டெம்பர் மாதம் நடைபெறவுள்ள ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவை அமர்வுகளில் கலந்து கொள்ளுமாறும் தமிழ்த்தேசியக்கூட்டமைப்பினருக்கு புலம்பெயர் தமிழர்கள் அறிவுறுத்தல் வழங்கியுள்ளனர்.

நாட்டு மக்களின் காணிகளை அபகரித்துக் கொள்ளும் எந்தவிதமான திட்டமும் அரசாங்கத்துக்கு கிடையாது. எனினும் தேசியப் பாதுகாப்பு விவகாரங்களில் நெகிழ்வுப் போக்கை பின்பற்றுவது நடைமுறைச் சாத்தியமற்றது.

யுத்த நிறைவின் பின்னர் பலர் சொந்த இடங்களுக்கு திரும்பி வருவதாகவும் காணிகள் அபகரிக்கப்பட்டிருந்தால் நீதியின் உதவியை நாட முடியும் எனவும் அவர் குறிப்பிட்டார். (அ-2)

# போலி ஆவணங்களுடன் இலங்கையர் பிஜியில் கைது

(கொழும்பு)

போலி பயண ஆவணங்களை வைத்திருந்த இலங்கைப் பிரஜை ஒருவர் நேற்றைய தினம் பிஜி நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டுள்ளார்.

குறித்த இலங்கை பிரஜை மீது போலி பயண ஆவணங்கள் தயாரித்தமை உள்ளிட்ட மூன்று குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளதாக பிஜி ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

சந்தேக நபரிடம் இருந்து போலி பிரித்தானிய மற்றும் இந்திய கடவுச்சீட்டுகளும் மீட்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (அ-2)

# டில்லி, மும்பை நகரங்களில் ஏவுகணை பாதுகாப்பு கவசமுறையை நிறுவ முடிவு

(புதுடில்லி)

எதிரி நாடுகளின் ஏவுகணைத் தாக்குதலில் இருந்து பாதுகாக்க டில்லி மற்றும் மும்பையில் ஏவுகணை பாதுகாப்புக் கவச முறைகளை நிறுவ இராணுவ ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனம் முடிபு செய்துள்ளது.



இது தொடர்பான விரிவான திட்ட முன்மொழிவுகள், பாதுகாப்பு தொடர்பான மத்திய அமைச்சரவையின் ஒப்புதலுக்காக தயாராகி வருகின்றன.

எதிரி ஏவுகணைகளை கண்டறியக்கூடிய ரேடர்களை நிறுவும் இடங்கள், பதில் தாக்குதல் நடத்தக்கூடிய ஏவுகணைகளை எங்கு வைப்பது போன்றவையெல்லாம் பின்னர் தீர்மானிக்கப்படும்.

இந்த இடங்கள் இரகசியமானதாகவும் எதிரிகளின் சதிகளில் இருந்து தப்பிக்கும் வகையிலும் பாதுகாப்பானதாகவும் அமையும்.

டில்லி மற்றும் மும்பையைத் தாக்க வான் வழியாக எதிரி நாடுகளின் ஏவுகணைகள் வந்தால் அதை உடனே இந்தப் பாதுகாப்புக் கவச முறைகள் கண்டறிந்து உடன் அந்த ஏவுகணைகளைத் தாக்கி அழிக்கக்கூடிய ஏவுகணைகள் இங்கிருந்து புறப்பட்டுச் சென்று குறிப்பிட்ட தூரத்திலேயே அவற்றை அழித்து விடும்.

இந்த ஏவுகணை பாதுகாப்பு கவச முறைகள் முழுமையாக தானியங்கி முறையில் இயங்கக் கூடியவை என்பதால் அவற்றை பராமரிக்க பெரிய அளவில் ஆட்கள் தேவையில்லை.

மனிதர்களின் தலையீடு குறைந்த அளவிலேயே தேவை. டில்லி மற்றும் மும்பையில் இந்த ஏவுகணை பாதுகாப்பு கவச முறைகள் அமைக்கப்பட்ட பின் ஏனைய பெரிய நகரங்களிலும் இவற்றை நிறுவுவது குறித்து பரிசீலிக்கப்படும்.

இராணுவ ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனத்தால் உருவாக்கப்பட்டுள்ள இந்த ஏவுகணை பாதுகாப்பு முறைகள் ஏற்கனவே பல முறை பரிசோதிக்கப்பட்டுள்ளன.

ஏவுகணை பாதுகாப்பு கவசமுறைகளை நிறுவுவதற்கான நீண்ட தூர கண்காணிப்பு, ரேடர்கள் எதிரி ஏவுகணைகளை கண்டறியும் கருவிகள் மற்றும் கட்டுப்பாட்டு முறைகள் எல்லாம் கூட பரிசோதிக்கப்பட்டு விட்டன.

இந்த முறை 2016 ஆம் ஆண்டுக்குள் 5 ஆயிரம் கிலோ மீற்றர் தூரத்திற்குள் எதிரி ஏவுகணைகளைத் தாக்கி அழிக்கும் வகையில் மேம்படுத்தப்படும்.

இந்த ஏவுகணை பாதுகாப்பு கவச முறை முதன்முறையாக 2006 ஆம் ஆண்டு பரிசோதிக்கப்பட்டது. இதன்மூலம் இந்த கவச முறைகளை கொண்டுள்ள அமெரிக்கா, ரஷ்யா மற்றும் இஸ்ரேல் நாடுகள் வரிசையில் இந்தியாவும் சேர்ந்துள்ளது. (அ-2)

# மீன்பிடியில் ஈடுபடுவதற்கு இலகுவாக மணல் திட்டுக்களை ஆழமாக்க வேண்டும்

## மீனவர்கள் கோரிக்கை

(இராமேஸ்வரம்)

இராமேஸ்வரம் மீனவர்கள் தென் கடல் பகுதியில் மீன்பிடிக்கச் செல்லும் வகையில் தனுஷ்கோடி-தலைமன்னார் இடையே மணல் திட்டுக்களிடையே கடலை ஆழப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் மீனவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

பாக். ஜலசந்தி கடற்பகுதியில் 800 இற்கும் மேற்பட்ட விசைப் படகுகள், ஆயிரத்திற்கும் மேற்பட்ட நாட்டுப்படகுகளில் இராமேஸ்வரம் மீனவர்கள் மீன்பிடித்தொழில் செய்து வருகின்றனர்.

மீன்பிடிக்கும் நிலையில் இந்திய கடல் எல்லையை தாண்டிச் செல்லும் இவர்கள் இலங்கை கடற்படையினரின் தாக்குதலுக்கு உள்ளாகின்றனர்.

இலங்கை கடற்பகுதிக்குள் சென்றால்தான் மீன்பாடு என்பதால் உயிரையும் துச்சமாக மதித்து மீன்பிடிக்கச் செல்கின்றனர். இதனால் இராமேஸ்வரம் மீனவர்கள் பல்வேறு துன்பங்களை அனுபவித்து வரும் நிலையில் மாற்றிடம் இல்லாததால் இலங்கை கடற்படையினரின் துப்பாக்கிக் குண்டுகளையும் உடலில் வாங்கிக் கொண்டு மீண்டும் மீண்டும் இலங்கை கடற்பகுதிக்குள் செல்ல வேண்டிய கட்டாயத்தில் உள்ளனர்.

இந்நிலையைப்போக்க தனுஷ்கோடிக்கும் தலைமன்னாருக்கும் இடையில் இருக்கும் மணல் திட்டுப் பகுதியில் மணலைத்தோண்டி பத்தடி ஆழப்படுத்தி சிறிய வழித்தடம் ஒன்றை அமைத்துக் கொடுத்தால் இதன் வழியாக தனுஷ்கோடி தென் கடல் பகுதிக்கு படகில் செல்லும் மீனவர்கள் மன்னார் வளைகுடா பகுதியில் மீன்பிடித்தொழில் செய்யலாம் என்று மீனவர்கள் தெரிவித்துள்ளனர்.

இதன்மூலம் இலங்கை கடற்பகுதிக்குள் இராமேஸ்வரம் மீனவர்கள் சென்று வருவது குறைவதோடு இலங்கை கடற்படையினரின் தாக்குதலில் சிக்குவதையும் தவிர்க்க முடியும். (அ-2)

# சுட்டு வீழ்த்தப்பட்ட போர் விமானம் குறித்து சிரியாவுக்கு துருக்கி கடும் கண்டனம்

போர் விமானத்தை சிரியா சுட்டு வீழ்த்தியதற்கு துருக்கி கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.

மேலும் நேட்டோ நாடுகளுடன் கலந்து பேசி அடுத்த கட்ட நடவடிக்கை எடுக்க்ப்படும் என்றும் எச்சரிக்கை விடுத்துள்ளது.

சிரியாவில் ஜனாதிபதி ஆசாத்துக்கு எதிரான போராட்டம் நாளுக்கு நாள் வலுத்து வரும் நிலையில் பாதிக்கப்பட்ட இலட்சக்கணக்கான மக்கள் அகதிகளாக வெளியேறி துருக்கியில் தஞ்சம் புகுந்து வருகின்றார்கள்.

இது மட்டுமல்லாமல் போராட்டக்காரர்களுக்கு துருக்கி உதவி செய்து வருவதாக சிரியா கூறி வருகின்றது. இதன் காரணமாக இரு நாடுகளுக்கும் இடையில் பிரச்சினை நிலவுகின்றது.

இந்நிலையில் கடந்த சில நாட்களுக்கு முன்பு துருக்கி போர் விமானம் ஒன்று எல்லைப்பகுதியில் பறந்து சென்ற போது விமானத்தை சிரியா சுட்டு வீழ்த்தி விட்டது.

இதற்கு சிரிய தரப்பு கூறுகையில், தங்கள் நாட்டு எல்லைக்குள் நுழைந்ததால் விமானத்தை சுட்டு வீழ்த்தியதாக கூறியது.

இந்தச் சம்பவம் தொடர்பாக துருக்கி தீவிர விசாரணை நடத்தி விட்டு சிரியாவுக்கு கடும் கண்டனம் தெரிவித்தது.

துருக்கி வெளிவிவகாரத்துறை அமைச்சர் கூறியதாவது,

எங்களுடைய போர் விமானம் சர்வதேச கடல் பகுதியில் தான் பறந்து சென்றுள்ளது. அதை முன் எச்சரிக்கை எதுவும் இன்றி சிரியா சுட்டு வீழ்த்தி இருக்கின்றது.

இந்த விமானம் துருக்கியை சேர்ந்தது என்பது தெரியாது என சிரியா கூறுவது ஏற்கக்கூடியது அல்ல. எங்கள் விமானத்தில் துருக்கி நாட்டிற்கான அடையாளம் தெளிவாக இருக்கின்றது.

இப்பிரச்சினையில் நேட்டோ நாடுகளுடன் நாங்கள் கலந்து பேசி அடுத்த கட்ட நடவடிக்கையை முடிபு செய்வோம் என்று தெரிவித்துள்ளார்.

மேலும் சிரியாவின் இந்த செயலுக்கு இங்கிலாந்து கடும் கண்டனம் தெரிவித்துள்ளது. இது குறித்து இங்கிலாந்து வெளிவிவகாரத்துறை அமைச்சர் வில்லியம் ஹாக் கூறும் போது,

சிரியாவின் இந்த செயல் ஏற்றுக் கொள்ளக்கூடியதல்ல. இதை கடுமையாக கண்டிக்கின்றோம். ஐ. நா. பாதுகாப்புச் சபையின் மூலம் சிரியாவின் மீது கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும். அதற்கு நாங்கள் ஆதரவாக இருப்போம் என்று தெரிவித்தார். (அ-2)

# விசா கட்டுப்பாடுகளை தளர்த்த இஸ்ரேல் முடிபு

இந்தியாவிலிருந்து வரும் பார்வையாளர்களின் எண்ணிக்கையை இரட்டிப்பாக்கும் நோக்கத்தில் விசா கட்டுப்பாடுகளை எளிதாக்க இஸ்ரேல் முடிபு செய்துள்ளது.

இதற்காக மும்பையில் சுற்றுலா அலுவலகம் ஒன்றையும் அந்நாடு திறந்துள்ளது. இஸ்ரேலுக்கு சுற்றுலா மூலம் அதிக அளவில் வருவாய் கிடைத்து வருகிறது.

முன்பு தென்கொரியாவில் இருந்து அதிக அளவில் சுற்றுலாப் பயணிகள் இஸ்ரேலுக்கு வந்து சென்றனர். தற்போது தென்கொரியர்களை விட இந்தியர்கள் அதிக அளவில் வருகின்றனர்.

இதையடுத்து இந்திய சுற்றுலாப் பயணிகளை கவரும் விதமாக 6 இலட்சத்து 60 ஆயிரம் அமெரிக்க டொலரை இஸ்ரேல் முதலீடு செய்யவுள்ளது.

இது தொடர்பாக இஸ்ரேல் சுற்றுலா அமைச்சர் இந்தியாவிற்கு வந்தபோது அவருக்கும் இந்திய சுற்றுலா அமைச்சருக்கும் இடையே உடன்பாடு கையெழுத்தானது. (அ-2)

# மன்னார் ஆயர்- முஸ்லிம் தலைவர்கள் சந்திப்பு

மன்னாரில் தமிழ், முஸ்லிம் மக்களுக்கிடையிலான உறவில் அண்மைக்காலமாக ஏற்பட்டு வரும் இடைவெளியைக் குறைத்து இரண்டு சமூகங்களுக்கிடையில் புரிந்துணர்வையும் நட்புறவையும் வலுப்படுத்தும் ஆரம்பகட்ட முயற்சியாக நேற்று முன்தினம் சனிக்கிழமை மன்னார் ஆயர் மேதகு இராயப்பு யோசப் ஆண்டகைக்கும் மன்னார் முஸ்லிம் சமய, சமூகத் தலைவர்களுக்கும் இடையில் விசேட சந்திப்பு இடம்பெற்றது.

மன்னார் ஆயர் இல்லத்தில் இடம்பெற்ற இச்சந்திப்பிற்கான ஏற்பாடுகளை மன்னார் சர்வமதப் பேரவை மேற்கொண்டிருந்தது.

இச்சந்திப்பு தொடர்பாக மன்னார் சர்வமத பேரவையின் தலைவர் அருட்திரு தமிழ்நேசன் அடிகளார் கருத்துத் தெரிவிக்கையில்,

இச்சந்திப்பு சுமுகமானதாகவும் சிநேகபூர்வமானதாகவும் அமைந்ததோடு பரஸ்பர கருத்துக்களைப் பகிர்ந்துகொள்ளவும் மன ஆதங்கங்களை வெளிப்படுத்தவும் சிறந்த களமாக அமைந்திருந்தது.

மன்னாரில் உள்ள அனைத்து சமூகங்களையும் சேர்ந்த பெரும்பாலான மக்கள் அண்மைக் காலத்தில் ஏற்பட்டுள்ள முறுகல் நிலை குறித்து மிகுந்த வேதனை கொண்டுள்ளனர்.

இம்முறுகல் நிலையை மேலும் வளர விடாமல் தடுப்பதற்கு சம்பந்தப்பட்ட தரப்பினரை சந்திக்க வைத்து பிரச்சினைகளைப் பேசித் தீர்க்க வழி செய்ய வேண்டும் என எதிர்ப்பார்ப்பையும் கொண்டிருந்தனர்.

மக்களின் இந்த உணர்வுகளைப் புரிந்து கொண்டு மன்னாரில் இன, மத நல்லிணக்கத்தை மீண்டும் கட்டியெழுப்பும் நடவடிக்கையாக இச்சந்திப்பை மன்னார் சர்வமதப் பேரவை ஏற்பாடு செய்தது என தெரிவித்தார்.

மீள்குடியேற்றம், வேலைவாய்ப்பு போன்றவற்றில் சட்ட ஒழுங்கு விதிகளுக்கு முரணாக நடந்த பாரபட்சங்களை மன்னார் ஆயர் இதன் போது எதிர்த்து விளக்கினார்.

அதேபோன்று முஸ்லிம் சமய, சமூக தலைவர்களும் தாம் எதிர்கொள்ளும் பொதுவான பிரச்சினைகள் தொடர்பாகவும் அவசரமாக தீர்க்கப்பட வேண்டிய சில பிரச்சினைகள் தொடர்பாகவும் தங்கள் ஆதங்கத்தை வெளியிட்டனர். இச்சந்திப்பு முதல் கட்ட சந்திப்பாக அமைந்தது. (அ-2)

# வெவ்வேறு சம்பவங்களில் மூவர் படுகாயமடைந்தனர்

வடமராட்சி கிழக்குப் பகுதியில் 3 வெவ்வேறு சம்பவங்களில் 3 பாடசாலை மாணவர்கள் படுகாயமடைந்து சிகிச்சைக்காக பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். கட்டைக்காடு பகுதியில் விளையாட்டில் ஈடுபட்ட சுதாகரன் சுலக்ஷன் ( வயது11) என்ற மாணவன் கால் முறிந்த நிலையிலும் மற்றுமொரு சம்பவத்தில் பருத்தித்துறை கிராமக்கோடு பகுதியை சேர்ந்த கனகசபாபதி ஜதுஷன் (வயது-16) என்ற மாணவன் விளையாட்டில் ஈடுபட்ட போது முகத்தில் காயமடைந்த நிலையிலும் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

மற்றுமொரு சம்பவத்தில் கரவெட்டி கட்டைவேலியைச் சேர்ந்த சிவநேசநாதன் ஜெதுர்சன் (வயது-16) என்ற மாணவன் விளையாட்டின் போது கைமுறிந்த நிலையில் சிகிச்சை பெற்று வருகிறார். (அ-3-24)

# வாயிற்கதவில் ஆட்டின் தலை



உரும்பிராய் வடக்கு, உரும்பிராயிலுள்ள வீடு ஒன்றின் வாயிற்கதவிற்கு முன் ஆட்டின் தலை ஒன்று வெட்டப்பட்ட நிலையில் வைக்கப்பட்டிருந்ததாக தெரிவிக்கப்படுகின்றது. இதனால் அப்பகுதியில் சிறிது நேரம் பரபரப்பு ஏற்பட்டது.

மேற்படி சம்பவம் நேற்று இடம் பெற்றுள்ளது. வைக்கப்பட்டிருந்த ஆட்டின் தலை மீது குங்குமம் மற்றும் விபூதி போன்ற தன்மையில் சில பூச்சுக்கள் காணப்பட்டன.

இவ்விடயம் தொடர்பில் வீட்டு உரிமையாளர் தெரிவிக்கையில்,

வாயில் கதவை திறக்கும் போது அங்கு ஆட்டின் தலை வெட்டப்பட்ட நிலையில் வைக்கப்பட்டிருந்ததை கண்டதாகத் தெரிவித்தார். (அ-78)

நெஞ்சில் உரமின்றி நேர்மை திறனுமின்றி
வஞ்சனை செய்வாரடி– கிளியே
வாய்ச் சொல்லில் வீரரடி. –பாரதியார்

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

# நாங்களும் ஆர்ப்பாட்டம் செய்தோம் என்றிருக்க வேண்டாம்

தமிழர் தாயகத்தில் நடந்து கொண்டிருக்கும் நில அபகரிப்புக் குறித்த பல்வேறு விடயங்கள் தொடர்பில் தமிழ்த் தரப்புக்கள் எதிர்ப்புக்களைத் தெரிவித்து வருகின்றன.

தமிழ்த் தரப்புக்கள் தெரிவித்து வருகின்ற எதிர்ப்புக்கள் என்பது, அரசாங்கத்தை திசை திருப்புமென்றோ அல்லது நிலஅபகரிப்பை அரசு நிறுத்துமொன்றோ எதிர்பார்க்க முடி யாது.

இலங்கை அரசைப் பொறுத்தவரை தமிழர்களின் எதிர்ப்புணர்வை எங்ஙனம் முறியடிக்க முடியும் என்பது தொடர்பில் அதிக சிரத்தை செலுத்துவதுடன்அரசிற்கெதிராக அல்லது இந்த நாட்டிற்கு எதிராக தமிழர்கள் எப்படி செயற்பட முடியும் என்று கடுங் கோபம் கொள்ளும் அளவிலேயே நிலைமை உள்ளது.

எனவே, தமிழர் தாயகத்தில் இடம்பெறக் கூடிய திட்டமிட்ட நிலஅபகரிப்புத் தொடர்பில் தமிழ்த் தரப்புக்கள் தங்கள் எதிர்ப்பைக் காட்டுவது என்பது சர்வதேச சமூகத்தின் பார்வையை இலங்கை மீது வலுப்படுத்துவ்தாக அல்லது இலங்கை மீதான சர்வதேசத்தின் அழுத்தத்தை அதிகரிப்பதான செயற்பாடாக இருத்தல் வேண்டும்.

ஆனால், தமிழ்த் தரப்புகள் நடத்துகின்ற எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள்,விடும் கண்டன அறிக்கைகள் என்பன இலங்கை அரசை எச்சரிக்கவோ அல்லது சர்வதேசத்தின் கவனத்தை ஈர்ப்பதாகவோ இல்லை.

மாறாக தங்கள் இருப்பை நிலைநிறுத்தும் போராட்டமாகவே உள்ளது. உண்மையில் தமிழர்களின் அதிகூடிய பாராளுமன்றப் பிரதிநிதிகளைக் கொண்டுள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்களில் பலருக்கு தமிழர் தாயகத்தில் என்ன நடக்கிறது என்பதே தெரியாமல் இருக்கின்றது.

தமிழ் மக்களுடனான தொடர்பாடல் இன்மை, ஊடகங்களில் வருகின்ற செய்திகளைப் படிக்காமை போன்ற காரணங்களினால் தமிழ்ப் பிரதேசங்களில் நடக்கும் எந்த விடயங்களையும் அவர்கள் அறிவதில்லை.

அதேவேளை, அரசிற்கு நாம் எதிர்க் கட்சியாக இருப்பதற்காக, அரச அமைப்புகளுடனான தொடர்பை பேணாது விடுவதோ அல்லது அரச அமைப்புகளுடன் தொடர்பை கொண்டிருந்தால் அது தமிழ் மக்கள் மத்தியில் தவறான கண்ணோட்டத்தைக் கொடுக்கும் என்று நினைப்பதோ மிகப் பெரும் தவறு.

குறிப்பாக அரச அதிபர்களுடன் நல்லுறவைப் பேணுவதன் மூலம் தமிழர் பிரதேசங்களில் நடக்கின்ற விடயங்களை அறிதல், வடக்குக் கிழக்குக்கு பொறுப்பான பொலிஸ் அதிகாரிகளுடன் நல்லுறவைப் பேணி தமிழர் தாயகத்தில் நடக்கின்ற போதைப் பொருள் கலாசாரத்தை மற்றும் விவகாரங்களை கட்டுப்படுத்தல் போன்ற நடவடிக்கைகளிலும் ஈடுபடவேண்டும்.அப்போது தான் இவர்கள் தமிழ் மக்களின் பிரதிநிதிகளாக இருக்கமுடியும்.

அவ்வகையில் நில அபகரிப்புக்கு எதிரான போராட்டம் என்பது, தொடர்ந்து முன்னெடுக்கப்படுவது அவசியம். அடையாளத்திற்கான ஆர்ப்பாட்டத்தினால் எந்தப் பிரயோசனமும் இல்லை. தேவை ஏற்படும் போது மக்கள் போராட்டமாக சித்தரிப்பதுவும் கட்டாயம்.

# மீள்குடியேற்றப்பட்ட மக்களின் தேவைகள் பூர்த்தியாக்கப்படவில்லை

## பிரதேச செயலர்கள், உ.அ.அதிபர்கள் ஆதங்கம்

(யாழ்ப்பாணம்)

மீள்குடியேற்றப்பட்ட மக்களுக்கான அடிப்படைத்தேவைகள் இன்னும் பூர்த்தி செய்து கொடுக்கப்படவில்லை என யாழ்.மாவட்டத்திலுள்ள பிரதேச செயலர்கள், உதவி அரசாங்க அதிபர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

மீள்குடியேற்றம் தொடர்பான விசேட கலந்துரையாடல் ஒன்று நேற்று யாழ். மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றது.

இதில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே பிரதேச செயலர்கள் மேற்கண்டவாறு சுட்டிக்காட்டினர்.

அங்கு அவர்கள் மேலும் தெரிவிக்கையில்,

யாழ்.மாவட்டத்தில் மீள்குடி யேற்றப்பட்ட மக்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகள் இன்னும் பூர்த்தி செய்யப்படவில்லை. இதனால் நாளாந்தம் அந்த மக்கள் பாரிய சவால்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

வடக்கின் வசந்தம் திட்டத்தின்கீழ் மின்சார இணைப்புக்கள் செய்து கொடுக்கப்படும் எனக்கூறப்பட்டபோதும் இன்னும் பல பிரதேசங்களுக்கு மின் இணைப்புக்கள் செய்து கொடுக்கப்படவில்லை. இதுதவிர மின்கம்பங்கள் நாட்டப்பட்ட போதும் மின்சாரம் வழங்கப்படவில்லை.

போக்குவரத்து வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்படவில்லை, வீதிகள் சரிவர புனரமைப்புச் செய்யப்படவில்லை.

மேலும் மீள்குடியேற்றப்பட்ட மக்களுக்கு அரசாங்கத்தினால் அமைத்துக் கொடுக்கப்படும் அரை நிரந்தர வீடுகள் கூட பல பிரதேசங்களில் மீள்குடியேற்றப்பட்ட மக்களுக்கு வழங்கப்படவில்லை.

எனவே, மீள்குடியேற்றப்பட்ட பிரதேசங்களில் வாழும் மக்களுக்கான அடிப்படைத் தேவைகளை விரைவாகப்பூர்த்தி செய்து கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்எனவும்அவர்கள்வேண்டுகோள் விடுத்தனர்.

இதேவேளை வலிகாமம் வடக்குப் பகுதியில் மீள்குடியேறிய மக்களுக்கு வடக்கின் வசந்தம் திட்டத்தின்கீழ் மின்சாரம் வழங்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்ட போதும் மின்கம்பங்கள் மட்டுமே நாட்டப்பட்டுள்ளன.

ஆனால் ஒரு இலட்சத்து 10 ஆயிரம் ரூபாய் கொடுத்தால் உடனடியாக மின்சாரம் வழங்கப்படும் என்கின்றனர் மின்சார சபையினர்.

வடக்கின் வசந்தம் திட்டத்தின்கீழ் மின்சாரம் வழங்கக் காலதாமதம் எடுக்கிறது. பணத்திற்கென்றால் உடனே தருவதாக கூறுகின்றனர். இதற்கு என்ன காரணம் எனவும் கேள்வியெழுப்பியிருந்தனர்.

இதற்குப் பதிலளித்த யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமார் திட்டத்தின் கீழ் மின்சாரம் வழங்கப்படும்போது பலருக்கு இணைப்பினை ஏற்படுத்த வேண்டியுள்ளதோடு பாரியளவு நிதியையும் செலவிட வேண்டியுள்ளது. அதனால்காலதாமதம்ஏற்படுகிறது.

அத்தோடு பணத்தினைப் பெற்று மின்சார இணைப்பு வழங்கப்படுவதாக கூறப்படுவதை ஏற்கமுடியாது எனவும் வடக்கின் வசந்தம் திட்டத்தின்கீழ் மின்சார இணைப்பு பயனாளிகளாக தெரிவு செய்யப்பட்டவர்களிடம் பணத்தினைப் பெறக் கூடாது எனவும் தெரிவித்தார்.

(அ–6)

# அரசியல் தீர்வில் பங்கு கோரும் முஸ்லிம்கள் தமிழரின் போராட்டத்திலும் பங்கெடுக்க வேண்டும்

## -மனோ கணேசன் வேண்டுகோள்

(கொழும்பு)

இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு என வரும் போது அதில் தமக்கும் பங்குண்டு எனவும், இந்த அரசியல் தீர்வு தொடர்பில் இடம்பெறும் பேச்சு வார்த்தைகளில் தாமும் ஒரு தரப்பினராக கலந்து கொள்ள வேண்டும் என்றும் கோரிக்கை விடுக்கும் முஸ்லிம் அரசியல் தலைவர்கள்,தீர்வைத்தேடிதமிழ்க் கட்சிகள் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் நடத்தும் போராட்டங்களில் பங்கு பெற வேண்டும் என ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

உண்மையில் தமிழ் பேசும் மக்களை அடக்கி ஆள நினைக்கும் மேலாதிக்க வாதத்திற்கு எதிராக போராட முஸ்லிம் மக்கள் தயாராக இருக்கின்றார்கள்.

ஆனால் முஸ்லிம் தலைவர்கள் தான்தயங்கிநிற்கின்றார்கள்இந்தநிலைமை மாற வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கொழும்பு வெள்ளவத்தை தமிழ் சங்கத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற கவியரசு கண்ண்தாசன் நினைவு தின விழாவில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இந்நிகழ்வில் தொடர்ந்து உரையாற்றிய மனோ கணேசன்,

இங்கே உரையாற்றிய நண்பர் அசாத் சாலி, முஸ்லிம்களும், தமிழர்களும் பெரும்பான்மை இனவாதத்திற்கும்மதவாதத்திற்கும்எதிராக இணைந்து போராட வேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ளார்.

மூதூரில் இஸ்லாமிய வணக்கஸ் தலம் ஒன்று இன்றைய தினத்தில் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது என்றும் சொன்னார். இன்னும் பல இடங்களில் இஸ்லாமியர்களுக்கு எதிராக பேரின மதவாதம் தலையெடுத்துள்ளது என்றும் சொன்னார்.

உண்மைதான், மூதூர் இருக்கின்ற திருகோணமலை மாவட்டத்தில் அமைந்துள்ள தமிழ், இந்து வரலாற்றுடன் சம்பந்தப்பட்ட வெந்நீர் ஊற்று கிணறுகளும் அபகரிக்கப்பட்டு இன்று அந்த இடம் பௌத்த புனித பிரதேசமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இத்தகைய இனவாத மற்றும் மதவாத நடவடிக்கைளுக்கு எதிராக தான் தமிழர்களாகிய நாங்கள் போராடுகின்றோம். எத்துணை பின்னடைவுகள் ஏற்பட்டாலும் நாம் மனம் தளராமல் தொடர்ந்து போராடுகிறோம்.

இது தொடர்பில் முஸ்லிம் கட்சிகள் முடிபு எடுக்கவேண்டிய வேளை இன்று வந்துவிட்டது. இஸ்லாமிய சகோதரர்களுக்கு எதிராக நடத்தப்படும் பெரும்பான்மை மத மற்றும் இனவாத சதித்திட்டங்கள் இன்று நாடு முழுவது சத்தமில்லாமல் நடைபெறுகின்றன.

இவற்றுக்கு எதிராக நீங்கள் முஸ்லிம் மக்களை அணிதிரட்டி போராட வேண்டும். ஏறக்குறைய எல்லா முஸ்லிம் தலைவர்களும்அரசாங்கத்திற்குஉள்ளேதான் இருக்கிறீர்கள் ஆகவே அரசாங்கம் கோபித்துக் கொள்ளும் என்று அரசாங்கத்திற்கு வலிக்காமல் போராட வேண்டும் என்றால் அது நடக்காத காரியம்.

பதவிகள்,பட்டங்கள், வரப்பிரசாதங்கள் பறிபோகும் என நீங்கள் அச்சப்படுவீர்கள் என்றால் அது இல்லாத ஊருக்கு வழி தேடும் கதையாகும். எனக்கு இன்று கட்சித் தலைவர் பதவி ஒன்றுதான் இருக்கிறது.

ஆனால்பதவி, பட்டங்களில் இருக்கும் எத்தனையோ பேரைவிட நான் எனது கட்சியை திடமாக வழிநடத்துவதாகவும் தமிழ் பேசும் மக்கள் என் மீது மிகுந்த பற்றுக் கொண்டிருப்பதாகவும் நான் உறுதியாக நம்புகின்றேன்.

இலட்சக்கணக்கான தமிழ்மக்களை பறிகொடுத்துத்தான் சர்வதேச அழுத்தத்தை இன்று தமிழர்களாகிய நாம் உருவாக்கி இருக்கிறோம் என்பதை மறந்து விடாதீர்கள். இந்த சர்வதேச அழுத்தம் தரும் நன்மைகள் முஸ்லிம் மக்களுக்கும் கிடைக்கும் என்பதையும் மறந்துவிடாதீர்கள்.

இணைந்து போராடுவோம் என மேடைகளில் பேசி பிரியோசனம் இல்லை. அதிகாரப்பகிர்வு மண்ணுரிமை ஆகியவற்றுக்கான தமிழ் கட்சிகளின் ஜனநாயகப் போராட்டகள் இன்று ஆரம்பிக்கப்பட்டுவிட்டன.

வாருங்கள் வந்து எங்கள் போராட்டத்துடன் இணைந்து கொள்ளுங்கள். முஸ்லிம் மக்களின் காணி– நிலம் கிழக்கில் பறிக்கப்படுவது, முஸ்லிம் பகுதிகளுக்கு அரசியல் அதிகாரம் பகிரப்பட வேண்டியது மற்றும் மத சுதந்திரம் தொடர்பில் நீங்களும் போராடுங்கள் என மனோ கணேசன் தனது உரையில் மேலும் தெரிவித்தார். (8–11)

# சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்

## வீர இளைஞருக்கு



வலிமையின்மையே துயரத்திற்கு ஒரு காரணம். நாம் பலவீனர்களாக இருப்பதால் கெட்டவர்களாகிறோம்.

நம்மிடம் பொய்யும் திருட்டும் கொலையும் வேறு பாவச் செயல்களும் இருப்பதற்குக் காரணம் நமது பலவீனமே. நாம் துன்பமடைவது நமது பலவீனத்தாலேயே.

நாம் இறப்பதும் நமது பலவீனத்தால் தான். நம்மைப் பலவீனர்களாக்க ஒன்றும் இல்லாதபோது மரணமும் இல்லை. துயரமும் இல்லை.

நமது நாட்டிற்கு இப்போது வேண்டியது இரும்பை ஒத்த தசைகளும் எஃகைப்போன்ற நரம்புகளுமே.

எதனாலும் தடைப்படாத, உலகின் விந்தைகளையும் மறைபொருட்களையும் ஊடுருவிப் பார்க்கவல்ல கடலின் அடியாழம் வரை செல்ல நேரிட்டாலும் கருதியதை முடிப்பதற்கான ஆற்றல் பெற்ற ஆன்மீக பலம் கொண்ட [illegible] இப்போதைய தேவை.

# சம்பியன் லீக் ரி 20 போட்டி மும்பை இண்டியன்ஸ் தகுதி

சம்பியன்ஸ் லீக் ரி 20 கிரிக்கெட் போட்டி ஒக்டோபர் மாதம் நடத்தப்படுகிறது. இந்தப் போட்டி தென் ஆபிரிக்காவில் நடைபெறும் என்று தெரிகிறது.

ஐ.பி.எல். 5 போட்டியில் சம்பியன் பட்டம் பெற்ற கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணி, 2 ஆவது இடத்தைப் பிடித்த சென்னை சுப்பர் கிங்ஸ் அணி, 3 ஆவது இடத்தைப் பிடித்த டெல்லி டேர்டெவில்ஸ் அணி ஆகிய அணிகள் சம்பியன் லீக் போட்டியில் விளையாடுகிறது. 4ஆவது இடத்தைப் பிடித்த ஹர்பஜன் சிங் தலைமையிலான மும்பை இண்டியன்ஸ் அணி தகுதி சுற்றில் விளையாட நேரடியாக இந்தப் போட்டிக்கு தகுதி பெறும் என்று தெரிகிறது.

கடந்த ஆண்டு நடந்த சம்பியன் லீக் போட்டியில் ஐ.பி.எல். இல் 4ஆவது இடம் பிடித்த கொல்கத்தா அணி தகுதி சுற்றில் விளையாடியது.

மேலும் கடந்த ஆண்டு சம்பியன்ஸ் லீக் போட்டியில் மும்பை இண்டியன்ஸ் அணி கிண்ணத்தை வென்றது. நடப்பு சம்பியன் என்பதால் அந்த அணி தகுதி சுற்றில் விளையாடாமல் நேரடியாகத் தகுதி பெறுகிறது.

இது குறித்து மலேசியாவில் நடைபெறும் கூட்டத்தில் முடிவு செய்யப்படும் என்று எதிர்பூரர்க்கப்படுகிறது.

# முல்லை. அணி மாகாண சம்பியன்





வடமாகாண விளையாட்டு திணைக்களத்தால் நடத்தப்பட்ட மாகாண மட்ட பெண்களுக்கான மென்பந்து துடுப்பாட்ட போட்டியில் 26 ஓட்டங்களால் மன்னார் அணியை தோற்கடித்து முல்லை. அணி மாகாண சம்பியனாகியது.

இத்துடுப்பாட்ட போட்டி நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை மானிப்பாய் செல்லமுத்து விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.பல மாவட்ட அணிகள் பங்குபற்றிய இத்துடுப்பாட்ட போட்டியில் யாழ்.மாவட்ட அணியை எதிர்த்து முல்லை.மாவட்ட அணி மோதி முல்லை. மாவட்ட அணி இறுதிப் போட்டிக்கு தெரிவாகியது.

கிளி. மாவட்ட அணியை எதிர்த்து மன்னார் மாவட்ட அணி மோதி மன்னார் அணி இறுதிப்போட்டிக்கு தெரிவாகியது.இறுதிப்போட்டிக்கு தெரிவாகிய மன்னார் அணியும் முல்லை. மாவட்ட அணியும் மோதி 26 ஓட்டங்களால் முல்லை. அணி வெற்றி பெற்று மாவட்ட சம்பியனாகியது.

# இந்திய அணியில் மீண்டும் ஷேவாக்



இந்திய கிரிக்கெட் அணி ஜுலை மாதம் இலங்கையில் சுற்றுப் பயணம் செய்து விளையாடவுள்ளது.

இலங்கை அணிக்கெதிரான 5 ஒருநாள் போட்டி மற்றும் ரி 20 போட்டியில் இந்திய அணி விளையாடுகிறது. இந்தத் தொடர் ஜுலை 22 ஆம் திகதி முதல் ஓகஸ்ட் 7 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

இந்தப் போட்டிக்கான இந்திய அணி ஜுலை முதல் வாரத்தில் தெரிவு செய்யப்படும். அதோடு செப்டெம்பர் மாதம் நடைபெறும் ரி 20 உலகக் கிண்ணப் போட்டிக்கான வீரர்களும் தெரிவு செய்யப்படுவார்கள்.


இந்திய அணியில் ஷேவாக் மீண்டும் இடம் பெறுகிறார். அவுஸ்திரேலிய பயணத்தில் டோனியுடன் ஏற்பட்ட கருத்து வேறுபாடு காரணமாக இந்திய அணி கடைசியாக விளையாடிய ஆசியக் கிண்ண போட்டியில் ஷேவாக் நீக்கப்பட்டார்.

ஆனால், தெரிவு குழுவினர் அவருக்கு ஓய்வு கொடுக்கப்பட்டதாக விளக்கம் அளித்தனர்.

சமீபத்தில் முடிந்த ஐ.பி.எல் போட்டியில் ஷேவாக்கின் ஆட்டம் மிகவும் சிறப்பாக இருந்தது. இதனால் ஷேவாக் இந்திய அணியில் மீண்டும் இடம்பெறுகிறார்.


அவர் ஐ.பி.எல். போட்டியில் 16 ஆட்டத்தில் 5 அரைச் சதத்துடன் 495 ஓட்டங்கள் எடுத்து முத்திரை பதித்தார்.

# விளையாட்டுச் செய்திகள்....










யாழ்.இந்து ஆரம்ப பாடசாலையின் இல்ல மெய்வல்லுநர் போட்டி கடந்த 22 ஆம் திகதி பாடசாலையின் விளையாட்டு மைதானத்தில் அதிபர் சு.தியாகலிங்கம் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் விருந்தினர்கள் மாணவர்களின் பாண்ட் வாத்திய இசையுடன் அழைத்து வரப்படுவதையும் மாணவர்களின் அணி வகுப்பு மரியாதையை விருந்தினர்கள் ஏற்றுக் கொள்வதையும் இடைவேளை நிகழ்வினையும் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பிரதம விருந்தினராக கலந்து கொண்ட யாழ். வலயக் கல்வி பணிமனையின் பாடசாலைகள் வேலைகள் பகுதி பதவி நிலை உத்தியோகத்தர் தே.கிருபாகரன் வெற்றிக் கிண்ணத்தை வழங்குவதையும் படங்களில் காணலாம்.

# முதல் டெஸ்டில் பாகிஸ்தானை வென்றது இலங்கை



இலங்கை மற்றும் பாகிஸ்தான் அணிகளுக் கிடையிலான முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டி யில் இலங்கை அணி 209 ஓட்டங்களினால் வெற்றியீட்டியது.

காலியில் இடம்பெற்ற முதலாவது டெஸ்ட் போட்டியின் நான்காவது நாளான நேற்று திங்கட்கிழமை இரண்டாவது இனிங்ஸில் 300 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் பாகிஸ்தான் இழந்தது. இதனையடுத்தே இலங்கை அணி 209 ஓட்டங்களினால் வெற்றியீட்டியது.

இலங்கையில் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள பாகிஸ்தான் அணிக்கும், இலங்கை அணிக்குமிடையிலான 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடர் நடைபெற்று வருகிறது.

முதல் டெஸ்ட் போட்டியில் இலங்கை அணி தனது முதல் இன்னிங்சில் 472 ஓட்டங்கள் குவித்து ஆட்டமிழந்தது. இலங்கை அணியின் சங்கக்கார 199 ஓட்டங்கள் குவித்து இறுதி வரை ஆட்டமிழக்காமல் இருந்தார்.

டில்ஷான் 101 ஓட்டங்களும், அணித்தலைவர் மஹேல ஜெயவர்த்தன 62 ஓட்டங்களும் குவித்தனர். பாகிஸ்தான் வீரர் சயீட் அஜ்மல் 5 விக்கெட்டுக்கள் வீழ்த்தினார்.

பின்னர் தனது முதல் இன்னிங்சை தொடங்கிய பாகிஸ்தான் அணி 100 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்தது. அந்த அணியின் யூனிஸ்கான் அதிகபட்சமாக 29 ஓட்டங்கள் எடுத்தார்.

இலங்கை தரப்பில் ர்ரான்டிவ் 4 விக்கெட்டுகளையும், ஹேரத் 3 விக்கெட்டுகளையும் வீழ்த்தினர்.

ஃபாலோ ஆன் கொடுக்காமல் களமிறங்கிய இலங்கை அணி தனது 2ஆவது இன்னிங்ஸில் 5 விக்கெட்டுகள் இழப்பிற்கு 137 ஓட்டங்கள் எடுத்திருந்த நிலையில் ஆட்டத்தை நிறுத்தி பாகிஸ்தான் அணிக்கு 510 ஓட்டங்களை வெற்றி இலக்காக நிர்ண யித்தது.

மூன்றாவது நாளான நேற்று முன்தினம் தனது 2வது இன்னிங்ஸைத் தொடர்ந்த பாகிஸ் தான் அணி ஆட்ட நேர இறுதியில் 15 ஓவர் களில் 3 விக்கெட்டுகளை இழந்து 36 ஓட்டங் கள் மட்டுமே எடுத்து தத்தளித்தது.

474 ஓட்டங்கள் இமாலய இலக்குடன் நேற்றைய நான்காம் நாள் ஆட்டத்தை தொடர்ந்த பாகிஸ்தான் அணி நிலைத்து நின்று விளையாடியது. இதன் விளைவாக யூனிஸ்கான் 87 ஓட்டங்களும், அசாத்ஷாபிக் 80 ஓட்டங்களும் எடுத்தனர். மற்ற வீரர்கள் சொற்ப ஓட்டங்களில் ஆட்டமிழந்தனர்.

இருப்பினும், பாகிஸ்தான் அணி தனது இரண்டாம் இன்னிங்ஸ் முடிவில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 300 ஓட்டங்கள் மட்டுமே எடுத்தது.

இதன் மூலம் இலங்கை அணி தனது முதல் டெஸ்ட் போட்டியில் 209 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது. போட்டியின் நாயகனாக குமார சங்கக்கார தெரிவு செய்யப்பட்டார்.

மேலும், டெஸ்ட் தொடருக்கு முன்னர் நடைபெற்ற இருபது-20 தொடர் 1:1 என்ற கணக்கில் சமநிலை யில் முடிந்தது. ஒருநாள் தொடரையும் 3:1 என்ற கணக்கில் இலங்கை அணி கைப்பற்றியது குறிப்பிடத்தக்கது.

இரு அணிகளுக்கும் இடையிலான 2வது டெஸ்ட் போட்டி எதிர்வரும் 30ஆம் திகதி கொழும்பில் ஆரம்பமாகின்றது.





# இத்தாலியும் அரையிறுதிக்குள் நுழைந்தது



யூரோ கிண்ணப் போட்டிகளில் நேற்று முன் தினம் இடம்பெற்ற காலிறுதிப் போட்டியில் இத் தாலி அணி வெற்றி பெற்றுள்ளது.

இங்கிலாந்து அணிக்கெதிராக இடம்பெற்ற இப்போட்டியில் இத்தாலி அணி பெனால்டி உதைகளின் அடிப்படையில் 4:2 என்ற அடிப்படையில் வெற்றிபெற்றது.

போட்டியின் ஆரம்பத்தில் இங்கிலாந்து அணி சிறந்த ஆரம்பம் ஒன்றை எடுத்துக் கொண்ட போதிலும் செல்லச் செல்ல தடுத்தாடும் உத்தியை அவ் அணி கையாண்டது.

அதன் போது இத்தாலியின் மத்திய கள வீரர்கள் போட்டியின் ஆதிக்கத்தை கொண்டிருந்தனர். எனினும் முதற்பாதியில் கோல்கள் எவையும் பெற்றுக் கொள்ளப்படாது போக முதற்பாதி 0:0 என்ற கணக்கில் சமநிலையில் காணப்பட்டது.

இரண்டாவது பாதியில் இத்தாலி அணி மேலதிகமாக ஆக்ரோஷமாக ஆட இங்கிலாந்து அணியின் தடுத்தாடும் உத்தி மேலதிகமாக தேவைப்பட்டது. கோல்களைப் பெற இத்தாலி அணி முயற்சிக்க, இங்கிலாந்து அணி அவற்றைத் தடுத்துக் கொண்டிருந்தது.

இங்கிலாந்து அணியின் பக்கம் அதிர்ஷ்டமும் கைகொடுக்க போட்டியின் 90 நிமிடங்களும் கோல்கள் எவையும் பெறப்படாது விட 0:0 என்ற கணக்கில் காணப்பட்டது.

வழங்கப்பட்ட மேலதிக நேரத்திலும் கோல்கள் பெற்றுக்கொள்ளப்படாது விடப்பட, போட்டியின் முடிபு பெனால்டி உதைகள் மூலம் தீர்மானிக்கப்பட்டது.

இதன்போது இங்கிலாந்து அணி ஒரு கட்டத்தில் இத்தாலி வீரரின் செய்த தவறால் 2:1 என்ற கணக்கில் முன்னிலையில் இருந்த போதிலும் பின்னர் சுதாகரித்துக் கொண்ட இத்தாலி அணி வீரர்கள் அடுத்தடுத்த பெனால்டி வாய்ப்புக்களை கோலாக்க மறு புறத்தில் இங்கிலாந்து வீரர்கள் அடுத்தடுத்த பெனால்டி வாய்ப்புக்களை தவற விட்டனர்.

முடிபில் இத்தாலி அணி 4:2 என்ற பெனால்டி உதைகள் மூலம் வெற்றி பெற்றது. போட்டியில் முழுமையாக ஆதிக்கம் செலுத்திய இத்தாலி அணி 63 சதவீதமான பந்து பரிமாற்றங்களை தங்கள்வசம் கொண்டிருந்ததோடு 25 கோல் பெற்றுக் கொள்ளும் முயற்சிகளை ஏற்படுத்த, இங்கிலாந்து அணி 8 வாய்ப்புக்களை மாத்திரமே ஏற்படுத்தியிருந்தது.

முதலாவது அரையிறுதிப் போட்டி போர்த்துக்கல்-ஸ்பெய்ன் அணிகளுக்கிடையில் நாளைய தினமும், இரண்டாவது அரையிறுதிப் போட்டி ஜேர்மனி-இத்தாலி அணிகளுக் கிடையில் நாளை மறுதினமும் நடைபெற வுள்ளது.

லண்டனில் தற்போது ஆரம்பித்துள்ள விம்பிள்டன் டென்னிஸ் தொடரில் சாதிக்க பயிற்சியில் ஈடுபட்ட ரஷ்யாவின் மரியா சரபோவா



# முறையாக குடியமர்த்த ...

முல்லைத்தீவு மாவட்ட திரு முறிகண்டிப் பகுதியில் இராணுவத்தினர் கட்டாயப்படுத்தி மக்களை குடியமர்த்த எடுத்த முயற்சிக்கு மக்கள் கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர்.

செட்டிக்குளம் பகுதியிலுள்ள ஆனந்த குமாரசாமி, கதிர்காமம் நலன்புரி முகாம்களிலிருந்து கொண்டுவரப்பட்ட 47 குடும்பங்கள் இப்பகுதியில் கடந்த 23 ஆம் திகதி குடியமர்த்தப்பட்டனர்.

இந்நிலையில் தமது சொந்தக் காணிகளில் தம்மை மீள் குடியேற்ற வேண்டும் எனத் தெரிவித்ததோடு மீள்குடியேற்றும் வரை தாம் திருமுருகண்டி இந்து வித்தியாலயத்தில் தங்கியிருக்கப் போவதாகவும் திருமுறிகண்டியில் குடியமர்த்தப்பட்ட மக்கள் கூறியுள்ளனர்.

பாடசாலையில் மக்கள் இருப்பதற்கு எதிர்ப்புத் தெரிவித்ததோடு தம்மால் குடியமர்த்தப்பட்ட பகுதியில் தான் இருக்க வேண்டும் எனவும் இராணுவத்தினர் மக்களை எச்சரித்துள்ளனர்.

47 குடும்பங்களைச் சேர்ந்த மக்கள் குறித்த பாடசாலையில் தஞ்சம் புகுந்ததோடு இராணுவத்தினரின் எச்சரிக்கையையடுத்து 28 குடும்பங்கள் குடியமர்த்தப்பட்ட பகுதிகளுக்கே மீண்டும் திரும்பிச் சென்றுள்ளனர்.

இருப்பினும் 19 குடும்பங்களைச் சேர்ந்த மக்கள் தமது சொந்த இடத்தில் மீள்குடியேற்ற வேண்டும் எனத் தெரிவித்து பாடசாலையிலேயே தங்கியிருந்துள்ளனர்.

இதனால் இராணுவத்தினருக்கும் பொது மக்களுக்கும் இடையில் கருத்து முரண்பாடு ஏற்பட்டுள்ளது.

தமது சொந்த இடம்களில் தம்மை மீள் குடியேற்றுமாறு கண்ணீருடன் மக்கள் வேண்டுகோள் விடுத்தும் இராணுவத்தினர் அதற்கு உடன்படவில்லை.

இதேவேளை தாம் குடியமர்த்திய பகுதியில் இருக்குமாறும் சொந்த இடங்களில் உடனடியாக மீள்குடியேற்ற முடியாது எனவும் இராணுவத்தினர் கடும்தொனியில் கூறியுள் ளனர்.

இதற்கு உடன்படாத மக்களை கட்டாயப் படுத்தி வாகனங்களில் இராணுவத்தினர் ஏற்றிச் சென்றதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

திருமுருகண்டி பகுதியில் மக்கள் குடியிருப்புக்கள் உட்பட பெருமளவு காணிகள் இராணுவத்தினரால் அவர்களது பயன்பாட்டிற்காக எடுக்கப்பட்டிருப்பதாக ஏற்கெனவே சுட்டிக்காட்டப்பட்டு வந்துள்ளது.

யுத்த மோதல்கள் காரணமாக அந்தப் பகுதிகளில் இருந்து இடம்பெயர்ந்த குடும்பங்கள் இதனால் தங்களுக்குச் சொந்தமான காணிகளில் மீண்டும் குடியேற முடியாதிருப்பதாகவும் அரசாங்கத்தின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டிருந்தது.

இதன்பின் திருமுறிகண்டியில் சில பகுதிகளில் இருந்து இராணுவத்தினர் வெளியேறி அந்தப் பகுதிகளில் மீள்குடியேற்றத்திற்கான அனுமதி வழங்கப்பட்டிருந்தது.

எனினும்,திருமுறிகண்டி கிராமத்தில் மீள் குடியேற்றம் இன்னும் முற்றுப் பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (8-6)

# நில அபகரிப்பை ...

காணாமல்போனவர்களை கண்டறிதல் போன்ற விடயங்களை முன் வைத்து இந்த கவனயீர்ப்புப் போராட்டம் நடைபெறவுள்ளது.

அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பில் அரசாங்கம் வழங்கிய ஒரு மாத கால அவகாசம் முடிபடைந்துள்ள நிலையில் இது தொடர்பாக அரசிடம் இருந்து எந்தவிதமான நல்லெண்ண சமிக்ஞைகளும் கிடைக்கவில்லை.

அத்துடன் யுத்தத்திற்கு முன்னரும் யுத்தத்திற்கு பின்னரும் காணாமல்போன உறவுகள் பற்றி இதுவரை எந்தவிதமான பதில்களும் நடவடிக்கையும் அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்படவில்லை.

இத்தகைய நடவடிக்கைகளை சர்வதேச சமூகத்திற்கு எடுத்துச் சொல்கின்ற நடவடிக்கையாக இன்று செவ்வாய்க்கிழமை நடைபெறும் இந்த கவனயீர்ப்புப் போராட்டம் அமையும்.

மேலும் எந்த நெருக்கடிகளையும் பொருட்படுத்தாது மக்கள் அனைவரும் வருகை தந்து தமது ஆதரவை வழங்க வேண்டும். எமது மக்கள் தமது நிலங்களையே கேட்கின்றனர். அதற்காகவே போராட்டங்களையும் நடத்துகின்றனர். எங்களுடைய போராட்டம் நியாயமானது.

இந்த நியாயமான போராட்டத்தை தடுப்பதற்கும் ஒடுக்குவதற்கும் இராணுவமும் அரச புலனாய்வுப் படையினரும் அதனோடு சேர்ந்து இயங்கும் ஒட்டுக்குழுக்களும் பல்வேறு நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றன.

இதன் வெளிப்பாடுதான் வலிகாமம் வடக்கில் ஆர்ப்பாட்டம் நடத்திய மக்கள் மீதான தாக்குதல். இவற்றுக்கு எல்லாம் பயந்து போகும் இனம் எமது இனம் அல்ல எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (8,6)

# வடக்கின் பாதுகாப்பு ...

20 ஆயிரமாக குறைக்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆனால், இவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்களுக்கு மாறான புள்ளிவிபரங்களை மேஜர் ஜெனரல் மகிந்த ஹத்துருசிங்க அரசாங்க ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய செவ்வியில் வெளியிட் டுள்ளார்.

யாழ்.குடாநாட்டில் இயல்புநிலை ஏற்பட்டதைத் தொடர்ந்து இங்கு நிலை கொண்டிருந்த படைத்தரப்பினரின் எண்ணிக்கை 27 ஆயிரத்திலிருந்து 15ஆயிரத்து 600 ஆக குறைக்கப்பட்டுள்ளதாக மேஜர் ஜெனரல் மகிந்த ஹத்துருசிங்க கூறியுள்ளார்.

அத்துடன், யாழ்.குடாநாட்டில் உயர் பாதுகாப்பு வலயங்களாக முன்னர் பிரகடனம் செய்யப்பட்டிருந்த 3இலட்சத்து 74 ஆயிரத்து 109 ஏக்கர் நிலப்பகுதி விடுவிக்கப்பட்டுள்ளதாகவும், தற்போது 6ஆயிரத்து 381 ஏக்கர் நிலப்பரப்பே உயர் பாதுகாப்பு வலயங்களாக அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் இச் செவ்வியில் அவ் குறிப்பிட்டுள்ளார்.

ஐ.நா மனிதவுரிமைகள் ஆணைக் குழுவின் 20வது அமர்வில் இலங்கை அரசாங்கம் சமர்ப்பித்த அறிக்கையின் புள்ளிவிபரங்களுக்கும், மேஜர் ஜெனரல் மகிந்த ஹத்துருசிங்க குறிப்பிட்ட புள்ளிவிபரங்களுக்கும் இடையில் வேறுபாடுகள் காணப்படுகின்றன.

யாழ். குடாநாட்டில் 20ஆயிரம் படைத்தரப்பினரே நிலை கொண்டுள்ளதாக ஐ.நா மனிதவுரிமைகள் ஆணைக்குழுவுக்கு மனி[illegible] குணசேகர சமர்ப்பித்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள நிலையில், 15 ஆயிரத்து 600 படைத்தரப்பினரே நிலை கொண்டுள்ளதாக மேஜர் ஜெனரல் மகிந்த ஹத்துருசிங்க கூறியுள்ளார்.

அதேபோன்று, யாழ். குடாநாட்டில் உயர் பாதுகாப்பு வலயம் 40 சதவீதத்தினால் குறைக்கப்பட்டுள்ளதாக மனிசா குணசேகர சமர்ப்பித்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள நிலையில், மேஜர் ஜெனரல் மகிந்த ஹத்துருசிங்க அரசாங்க ஊடகத்திற்கு வழங்கிய செவ்வியின்படி 37 சதவீதமான நிலப்பரப்பே விடுவிக்கப்பட்டுள்ளது.

இதனால், வடபகுதியின் பாதுகாப்பு நிலைமைகள் தொடர்பில் இலங்கை அரசாங்கம் தவறான புள்ளிவிபரங்களை வழங்கி சர்வதேச நாடுகளின் கவனத்தை திசை திருப்ப முனைகின்றதா என்ற கேள்வி எழுந்துள்ளது. (8-11)

# பலாலி ...

காங்சேன்துறை துறைமுக அபிவிருத்தி உட்பட வடபகுதியின் அபிவிருத்தி திட்டங்களுக்கு உதவுவதாக இந்தியா உறுதியளித்திருந்த போதிலும் அதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் எதுவும் கைச்சாத்திடப்படவில்லை.

இந்நிலையில் பலாலி விமான நிலையத்தின் அபிவிருத்தி மற்றும் விஸ்தரிப்புப் பணிகளை இந்தியாவின் உதவியின்றி மேற்கொள்ள அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இலங்கையின் குடியியல் விமானப் போக்குவரத்து அமைச்சர் பிரியங்கார ஜெய ரட்ண இதனை உறுதிப்படுத்தியுள்ளதாக குறித்த ஆங்கில ஊடகம் குறிப்பிட்டுள்ளது. (8-11)

# மகிந்தவை ...

முறைப்பாடுகள்வரை கிடைத்திருந்தன. இதன் காரணமாக நான் அன்று அந்த முடிபை எடுத்தேன்.

ரணிலுடன் இணைந்து செயற்பட எவ்வளவு முயற்சிகள் செய்தபோதிலும் அது கைகூடவில்லை. நான் மீண்டும் அரசியலில் ஈடுபட மாட்டேன். எந்த பக்கத்தையும் சார மாட்டேன். விரும்பியவர்களுக்கு ஆலோசனை வழங்குவேன் எனவும் சந்திரிகா குறிப்பிட்டுள்ளார். (8-11)

# புலம்பெயர் ...

மற்றும் போர்க் குற்றங்களை,பயங்கரவாதத்திற்கு எதிரான நடவடிக்கை எனும், தனது வழமையான பல்லவியூடாக நியாயப்படுத்த,இலங்கை முனைந்துள்ளதாக ஜெனிவாப் பிரதிநிதி ஒருவர் தெரிவித்துள்ளார்.

புலம்பெயர் தமிழர்களின் நிதிப் பங்களிப்பு,வலையமைப்பு மற்றும் மக்கள் போராட்டங்கள் யாவும், இலங்கைக்குள் பதற்றத்தினை ஏற்படுத்துவதாக உள்ளதென தெரிவித்துள்ள இலங்கைப் பிரதிநிதி, புலம்பெயர் தமிழர்களின் இச் செயற்பாடுகளுக்கு, அந்தந்த நாடுகள் சட்டத்தின்பால் வழங்கப்படுகின்ற சமூக அரசியல் வெளியினை விமர்சனத்துக்குள்ளாக்கியுள்ளதோடு, மேற்குலகின் மீதான தனது சீற்றத்தினை மீண்டும் ஒருதடவை சபையில் இலங்கை வெளிப்படுத்தியுள்ளதாக ஜெனிவாப் பிரதிநிதி தெரிவித்துள்ளார்.

மேலும், சபையில் இலங்கையின் பிரதிநிதி வாசித்த அறிக்கையில், அரசு சார்பற்ற செயல்பாட்டாளர்களால், மிக மோசமான மனித உரிமை மீறல்கள் நடத்தப்பட்டதாயும், இவை உள்நாட்டு,வெளிநாட்டு பயங்கரவாத வலை அமைப்புக்களின் செயல்கள் என்றும் குற்றஞ்சாட்டப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (8-11)

# இசற் ...

உயர்தரப் பரீட்சையின் பெறுபேறுகளை ஆட்சேபித்து தாக்கல் செய்யப்பட்டிருந்த அடிப்படை உரிமை மனு தொடர்பான தீர்ப்பை உயர்நீதிமன்றம் நேற்று அறிவித்தபோதே இவ்வாறு குறிப்பிட்டுள்ளது.

இரண்டு பாடத்திட்டங்களுக்கான இசட் புள்ளிகளை வெவ்வேறாக கணிப்பிடுமாறு இந்த உத்தரவில் குறிப்பிடப்பட்டுள்ளது. கடந்த வருட க.பொ.த. உயர்தரப் பரீட்சையின் இசட் புள்ளிகளை கணிப்பிட்ட விதத்தில் தவறு உள்ளதாகவும் உயர்நீதிமன்றம் அறிவித்துள்ளது.

இந்த வழக்கின் தீர்ப்பை பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்க அறிவித்துள்ளார். கடந்த வருடம் நடைபெற்ற க.பொ.த. உயர்தரப் பரீட்சையின் இசட் புள்ளிகளில் தவறு உள்ளதாக இதன்போது மூவரடங்கிய உயர்நீதிமன்ற நீதியரசர்கள் குழாம் ஏகமனதாக தீர்ப்பளித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (8,11)

# டிப்பர் சில்லினுள் ...

சிறுமி கோபிகா சம்பவ இடத்திலேயே உடல் நசுங்கி பரிதாபமாக உயிரிழந்துள்ளார் என தெரிவிக்கப்படுகிறது. (8,6)


விசா ஆலோசனை வழங்கப்படும் நாடுகள் மேலும் விஸ்தரிக்கப்பட்டுள்ளன

நியுசிலாந்து Student visa
- ★ IELTS 5 points
- ★ 3 வருட முடிபில் நிரந்தர குடியுரிமைக்கு அருகதை
- ★ பகுதி நேர தொழில் வாய்ப்பு
- ★ விசா விண்ணப்பத்திற்கு வங்கி அனுசரணைக்கு வேறு எவரும் பொறுப்பு நிற்கலாம்.

மலேசியா குடும்ப விசா
- ★ நிரந்தர குடியுரிமை
- ★ மலேசியாவில் தொழில் வியாபாரம் புரிய ஆலோசனை
- ★ சுங்கத் தீர்வையற்ற வாகனம்

இன்னும் UK SKILL MIGRATION

குறைந்த கட்டணத்தில் அவுஸ்திரேலியா குடும்பவிசா

உள்ளதை உள்ளபடி சொல்லி சட்ட ரீதியான ஆலோசனை பெற நாடுங்கள்

திசைகாட்டி (பிறைவேற்) லிமிடெட (PV82703)

முன்மாதிரியான விசா ஆலோசனை நிறுவனம்

37, சிவகுருநாதர் ஒழுங்கை,
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். 0212219016
22A, Frank Fort Place,
Bampalappity. 0112508443



(C-338)



மணல் விற்பனைக்குண்டு

கட்டிட வேலைக்கும் பூச்சு வேலைக்கும் சிறந்த மணல் மண் இப்போது உங்கள் இடத்திற்கே கொண்டு வந்து தரப்படும்.

4 டிரக்டர் - 21,000/-

தொடர்புகளுக்கு
ரமேஸ்
0722694462

(8702)



கருத்தரங்கு புவியியல்

30.06.12 சனி - 12.00
விடையளிக்கும் நுட்பங்கள்
இடவிளக்கவியல் படம், GIS,GPS
திரு.P.S.குமரன் | திரு.S.சிவகரன்

1.07.12 ஞாயிறு - 12.00
புள்ளிவிபரவியல்
வரிப்படங்களும் வரைபடங்களும்
திரு.P.S.குமரன்

16.07.12 திங்கள் - 9.30
விடையளிக்கும் நுட்பங்கள்
பௌதிகப்புவியியல், மானிடப்புவியியல்
திரு.P.S.குமரன் | திரு.A.C.ஜோர்ச்

அனுமதிகளைப் பெற்றுக்கொள்ளவும்
பொருளியற்கல்லூரி
யாழ்ப்பாணம்


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 26.06.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.